# பி.ஏ. (தமிழ்) முதலாமாண்டு

## DJT1C : நன்னூல் - எழுத்ததிகாரம்

உள்ளுறை


| வ.எ. | பாடம் | பக்கம் |
|---|---|---|
| 1. | பாயிரம் | 1-8 |
| 2. | ஆசிரியர் | 9-17 |
| 3. | எழுத்தியல் | 18-35 |
| 4. | பதவியல் | 36-57 |
| 5. | உயிரீற்றுப் புணரியல் | 58-93 |
| 6. | மெய்யீற்றுப் புணரியல் | 94-116 |
| 7. | உருபு புணரியல் | 117-127 |

பாடம்-1

# பாயிரம்

பாயிரம் என்னும் சொல்லுக்குப் பரந்துபட்டது என்பது பொருளாகும். அந்நூல் வரலாற்றை விளங்க உரைப்பதாகும். இதனை முன்னுரை என்றும் கூறலாம். இப்பாயிரம் பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் என இருவகைப்படும். எல்லா நூல்களுக்கும் பொதுவாகப் பொருந்துவது பொதுப்பாயிரம். ஒரு குறிப்பிட்ட நூலுக்கு மட்டும் சிறப்பாகப் பொருந்துவது சிறப்புப் பாயிரம்.

**பாயிரத்தின் வேறு பெயர்கள்**

**“முகவுரை பதிகம் அணிந்துரை நூன்முகம்**
**புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்”**

1. முகவுரை என்பது இன்றியமையாமை கருதி நூலின் தொடக்கத்தில் உரைக்கப்பெறுவது.
2. பதிகம், பொதுப்பாயிரத்தின் ஐந்து கூறுகளையம் சிறப்புப் பாயிரத்தில் பதினொரு கூறுகளையம் தொகுத்துச்சொல்வது.
3. அணிந்துரையாவது நூலினது பெருமை முதலியவற்றை அழகுபடுத்திக் கூறுவது.
4. நூன்முகம் என்பது முகவுரை போல நூலின் முகத்தில் உரைக்கப்பெறுவது.
5. புறவுரை, நூல் கூறுகின்ற பொருள் அல்லாதவற்றைப் புறத்தே கூறுவது.
6. தந்துரை, நூலின் சொல்லாதவற்றைப் பிறா் தந்து உரைப்பது
7. புனைந்துரையாவது நூல் கூறாதவற்றைப் புனைந்துரைத்துச் சிறப்பிப்பது.

இவ்வேழும் பாயிரத்தின் வேறு பெயா்களாகும். இப்பாயிரம் இரண்டு வகைப்படும். 1.பொதுப்பாயிரம் 2. சிறப்புப்பாயிரம் என்பன.

**“பாயிரம் பொதுச் சிறப்பு என இருபாற்றே”**

**பொதுப்பாயிரம்**

**“நூலே நுவல்வோன் நுவலும் திறனே**
**கொள்வோன் கோடல்கூற்றாம் ஐந்தும்**
**எல்லா நூற்கும் இவைப் பொதுப்பாயிரம்”**

1. நூலினது இலக்கணம். 2. நூலைக் கற்பிக்கும் ஆசிரியரின் இலக்கணம் 3. ஆசிரியா் மாணவா்க்கு பாடம் சொல்லும் முறை 4. கற்கும் மாணக்கரின் இயல்பு 5. மாணவா் பாடம் கேட்கும் முறை ஆகிய ஐந்தையம் கூறுவது பொதுப்பாயிரம். இவ்வைந்தும் எல்லா நூல்களுக்கும் பொதுவானவை. எனவே இவற்றை விளக்கமுற உணா்த்துவது பொதுப்பாயிரம் ஆகும்.

**நூலினது வரலாறு**

நூல் என்பது பொதுவாக எல்லாவகை இலக்கண இலக்கியங்களை உணர்த்தும் பொதுச்சொல் ஆகும். ஆயினும் இங்கு இலக்கண நூலையே சிறப்பாகச் சுட்டுகிறது.

**நூலின் இலக்கணம்**

நூலானது, பொது, சிறப்பு ஆகிய இருவகை பாயிரங்களைப் பெற்றிருத்தல், முதல் வழி சார்பு என்ற மூன்றனுள் ஒன்றாய் அமைதல் வேண்டும். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பொருளைப் பெற்றிருத்தல் வேண்டும். ஏழுவகை மதங்களைத் தழுவி, பத்து குற்றங்கள் நீக்கி, பத்து வகையான அழகுகளைப் பெற்று முப்பத்திரண்டு உத்திகளையும் பொருந்தியிருத்தல் வேண்டும். மேலும் ஒத்து (இயல்) படலம் (அதிகாரம்) என்றும் உறுப்புகளை உடையதாகவும், சூத்திர யாப்பால் இயற்றப்பட்டிருக்க வேண்டும். காண்டிகை, விருத்தி உரைகளைப் பெற்றதாகவோ பெறத்தக்கதாகவோ அமைந்து மேற்கூறப்பட்ட பதின்மூன்று வேறுபட்ட நடைகளை உடையதாக இருக்க வேண்டும்.

**நூலின் வகைகள்**

முதல் நூல், வழி நூல், சார்பு நூல் என நூல் மூன்று வகைப்படும்.

**முதல் நூல்**

**அவற்றுள்**
**வினையின் நீங்கி விளங்கிய அறிவன்**
**முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்**

நல்வினை தீவினை ஆகிய வினைகளில் நீங்கிய, தெளிந்த அறிவுடைய இறைவனால் செய்யப்பட்ட நூல் முதல் நூல் ஆகும். அல்லாமலும், இறைவனுடைய சான்றோர்களால் இயற்றப்பெறுவதும் முதல் நூலாகவே கருதப்பெறும்.

**வழி நூல்**

வழி நூல் என்பது முன்னோர் இயற்றிய நூல்களின் முடிவுகளைப் பெரிதும் தழுவி, காலத்திற்கு ஏற்ற மாற்றங்களை நூல் செய்வோன் தன் நூலுள் இணைத்து எல்லோராலும் போற்றப்படும் பெருமை உடையதாகச் செய்வது வழிநூல் ஆகும்.

**“முன்னோர் நூலின் முடிபு ஒருங்கு ஒத்துப்**
**பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி**
**அழியா மரபினது வழிநூல் ஆகும்”**

**சார்பு நூல்**

முதல் வழி நூல்களின் முடிபை சிறுபான்மை ஒத்தும் பெரும்பான்மை பொருந்தாமல் வேறுபட்டும் நிற்பது ஆகும். இது சார்புநூல் என்று அழைக்கப்படும்.

(எ.கா.) முதல் நூல்- அகத்தியம், வழிநூல்- தொல்காப்பியம், சார்பு நூல் - நன்னூல்.

**"இருவர் நூற்கும் ஒருசிறை தொடங்கித்**
**திரிபுவேறு உடையது புடைநூல் ஆகும்"**

**வழிநூல் சார்பு நூல்களுக்குரிய சிறப்பு விதி**

**முன்னோர் மொழிபொருளேயன்றி அவர்மொழியும்**
**பொன்னே போல் போற்றுவம் என்பதற்கும் - முன்னோரின்**
**வேறுநூல் செய்தும் ஏதும் மேற்கோள் இல் என்பதற்கும்**
**கூறுபழம் சூத்திரத்தின் கோள்**

முதல் நூலை அடிப்படையாக வைத்து வழிநூலையும் சார்பு நூலையும் செய்வோர் முதல் நூலின் கருத்தை எடுத்து மொழிதல் வேண்டும். அத்துடன் முன்னோர் மொழியைப் பொன்னே போல் போற்றி உள்ளோம் என்பதற்கு அடையாளமாகவும் முதல்நூல் கூறிய விதிகள் இந்நூலில் இல்லை எனும் குற்றம் நீங்கவும் முதல் நூல் சூத்திரங்களை சில இடங்களில் அப்படியே எடுத்துக்கூறுதல் வேண்டும்.

**நூலின் பயன்**

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் அடைவது நூலால் ஏற்படும் பயன்கள்.

**"அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூல் பயனே"**

**மதம்**

மதம் என்ற சொல்லுக்குக் கொள்கை அல்லது கோட்பாடு என்பது பொருளாகும். நூல் பலவகை மதம்பட வரும் இயல்பைக் கொண்டிருக்க வேண்டும். மதம் ஏழுவகையாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன. அவை 1. பிறர் கொள்கைக்குப் பொருந்தத் தன் கொள்கையை அமைத்தல் 2. பிறர் கொள்கையைப் பொருந்தாது எனப் புறக்கணித்தல் 3. ஒருவர் கொள்கையை முதலில் ஏற்றுக்கொண்டு பின் அவர் கொள்கையை மறுப்பது 4. தானே ஒரு கருத்தைத் தோற்றுவித்து அதைப் பொருந்தும் இடங்களில் எல்லாம் தவறாது நிலைநிறுத்தல் 5. மாறுபட்ட இருவர் கருத்துக்களில் ஒருவர் கருத்தை ஏற்றுக்கொள்ளுதல் 6. பிறரது நூலில் உள்ள குற்றத்தைத்

தயங்காது எடுத்துக்காட்டுதல் 7. பிறர் கருத்தை ஏற்காது தன் கருத்தையே கைக்கொள்வது என்பன ஆகும்.

**“எழு வகை மதமே உடன்படல் மறுத்தல்**
**பிறர்தம் மதமேல் கொண்டு களைவே**
**தாஅன் நாட்டித் தனாது நிறுப்பே**
**இருவர் மாறுகோள் ஒரு தலைதுணிவே**
**பிறர்நூல் குற்றம் காட்டல் ஏனைப்**
**பிற்தோடு படாஅன் தன் மதம்கொளவே.”**

**குற்றங்கள்**

நூலின் கண் இடம்பெறக் கூடாத குற்றங்கள் பத்தாக குறிக்கப்பட்டுள்ளன. அவை,

**“குன்றக்கூல் மிகைப்படக் கூறல்**
**கூறியது கூறல் மாறுகொளக் கூறல்**
**வழூஉச் சொல் புணர்த்தல் மயங்கவைத்தல்**
**வெற்றென தொகுத்தல் மற்றொன்று விரித்தல்**
**சென்று தேய்ந்து இறுதல் நின்றுபயன்இன்மை**
**என்று இவை ஈர்ஐங் குற்றம் நூற்கே.”**

1. பொருளை விளக்க வேண்டிய இடத்தில் சுருக்கிக் கூறல் 2. எளிதில் விளங்குவனவற்றிற்கு பொருள் விரித்துக் கூறல் 3. கூறியவற்றைப் பயனின்றித் திரும்பக் கூறுதல் 4. ஒன்றை ஏற்புடையது என்று கூறிப் பின்னர் அதையே மறுத்துக் கூறுதல் 5. குற்றமுடைய சொற்களைச் சேர்த்தல் 6. இதற்குப் பொருள் இதுவா அதுவா எனத் தடுமாறும்படி கூறுதல் 7. தேவையான செய்திகளைக் கூறுதல் 8. சொல்லத் தொடங்கியதைப் பாதியில் விட்டு வேறொரு பொருள் பற்றி பேசுதல் 9. தொடக்கத்தைச் சிறப்பாக அமைத்துப் பின் சிறப்பின்றி முடித்தல் 10. சொற்கள் இருந்தும் எவ்வித பயனும் இல்லாதிருத்தல் என்பனவாகும்.

**அழகுகள்**

பத்துவகையான அழகுகள் நூலிற்கு உரியதாக கூறப்பட்டுள்ளன. அவை, 1. சொற்களைத் தேவையின்றி விரிக்காமல் சுருக்கிக் கூறுதல் 2. சுருங்கச் சொல்லினும் தெளிவுபடக் கூறுதல் 3. கற்போர்க்கு இனிமை தரும் சொற்களைக் கூறுதல் 4. குற்றமற்ற சொற்களைச் சேர்த்தல் 5. இடத்திற்கு ஏற்ற சந்தநயம் புலப்பட அமைத்தல் 6. கற்கக்கற்க ஆழ்ந்த கருத்தை உடையதாதல் 7. எழுத்து, சொல், பொருள், இயல், அதிகாரம் போன்றவற்றைக் காரண காரிய முறைப்படி அமைத்தல் 8. சான்றோர்

வழக்கொடு மாறுபாடு இன்றிக் கூறல் 9. பொருளை வெளிப்படுத்துதல் 10. எடுத்துக்காட்டுதலைக் கொண்டு பொருளை விளங்க வைத்தல் என்பவையாகும்.

**உத்திகள்**

ஒரு கருத்தை வெளிப்படுத்த நூலாசிரியன் கடைப்பிடிக்கும் முறையே உத்தி எனக் கூறப்படுகிறது. இது முப்பத்திரண்டாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளது.

அவை, 1. நான் இதைச் சொல்லப்போகிறேன் எனக் கூறித் தொடங்குதல் 2. இயலைக் காரணகாரிய முறைப்படி அமைத்தல் 3. பல பொருள்களையும் ஓரிடத்தில் தொகுத்துச் சொல்லுதல் 4. தொகுத்துக் கூறியவற்றை வேறு வேறாக வகுத்துக் காட்டுதல் 5. விரித்துச் சொன்ன பொருள்களை முடித்துக் காட்டுதல் 6. சொல்லும் இலக்கணத்திற்கேற்ப இலக்கியம் தோன்றும் இடத்தைக் கூறுதல் 7. முன்னோரின் கூற்றுக்களை அப்படியே எடுத்துக்காட்டுதல் 8. பிறர் கொள்கைகளைக் கூறுதல் 9. சொல்லின் பொருளைத் தெளிவுபட விளங்குமாறு விரித்துரைத்தல் 10. ஒன்றுக்கொன்று தொடர்புடைய சொற்களை ஓரிடத்தில் கூறுதல் 11. இரண்டு பொருள்படச் சொல்லுதல் 12. முன்னர்க் காரணம் கூறாமல் பின்னர்க் காரணம் காட்டி நிறுவுதல் 13. ஒன்றற்குரிய இலக்கணத்தைப் பொருந்தும் பிறவற்றிற்கும் இலக்கணமாகக் கூறுதல் 14. ஒன்றற்குக் கூறிய இலக்கணம் அதனைப் பெறுதற்குரிய மற்றவற்றோடு தொடர்புபடுத்திக் கூறுதல் 15. வழக்கு இழந்தவற்றை நீக்குதல் 16. புதிதாய் தோன்றியதனைத் தழுவி இலக்கணம் அமைத்தல் 17. பின்பு எடுத்து ஆளுவதற்கு உரிய ஒன்றை முன்னரே கூறுதல் 18. பின்னர் எடுத்தாளுவதற்கு ஒன்றைப் பொருத்தம் கருதிப் பின்னே வைத்தல் 19. மாறுபட வருவனவற்றை வேறுவேறாக முடித்துக் காட்டுதல் 20. வேறுவேறாக முடித்ததைப் பொது இலக்கணத்தால் தொகுத்துக் கூறுதல் 21. இவ்விதியைப் பின்பு சொல்வோம் எனக் கூறுதல் 22. இவ்விதியை முன்னர்ச்சொன்னோம் எனக் கூறுதல் 23. மாறுபட்ட இருவரின் கொள்கைகளுள் ஒன்றைத் துணிந்து எற்றுக்கொள்ளல் 24. தான் கூறிய இலக்கணத்திற்கு உரிய இலக்கியத்தை தானே எடுத்துக்காட்டல் 25. தான் சொல்லும் இலக்கணத்தைத்தான் எடுத்துக்காட்டிய இலக்கியத்தில் பொருந்தும்படி அமைத்துக்காட்டுதல் 26. ஐயம் தோன்றும் இடத்தில் அவ்ஐயத்தை நீக்கும் முகமாக இதுதான் எனத் துணிந்து சொல்லுதல் 27. சொல்லியவற்றைக் கொண்டு சொல்லப்படாவற்றிற்கும் இலக்கணம் பொருந்தக் கூறல் 28. பிற நூல்களின் முடிவுகளை ஏற்றுக்கொள்ளுதல் 29. தன்னால் புதிதாக எடுத்துரைக்கப்பட்டதைப் பல இடங்களிலும் கூறுதல் 30. சொல் முடிந்த இடத்திலேயே அதன் பொருளையும் முடிவுபெறுமாறு அமைத்துக் காட்டுதல் 31. ஒன்றற்கு கூறப்பட்ட விதி அதனோடு ஒற்றுமைப்பட்டதற்கும் அவற்றோடு இனமானவற்றிற்கும் பொருந்தும்படி அமைத்தல் 32. சில விதிகளைக் கொண்டு ஒரு பொருளை ஆராய்ந்து அறியும்படி அமைத்துக் காட்டுதல் என்பனவாகும்.

**தந்திர உத்தி**

ஓர் இலக்கண நூலில் சொல்லப்படும் பொருள் உலக வழக்கொடும் செய்யுள் வழக்கொடும் பொருந்தி வரும். அப்பொருள் மற்றொரு நூலில் பொருந்தும் இடத்தை அறிந்து இவ்விடத்திற்கு இது இவ்வகையில் பொருந்தும் என ஏற்கும் வகையில் அமைத்துக் காட்டுவதே தந்திர உத்தியாகும்.

**நூலின் உறுப்புக்கள்**

நூல் உறுப்புக்கள் ஒத்து, படலம் என்பன ஆகும். ஒத்து என்பது இயலையும், படலம் என்பது அதிகாரத்தையும் குறிப்பனவாகும்.

ஒத்து என்பது ஒரு சாதியாய் உள்ள பொருள்களை ஒன்றுபடக்கூறுவது ஆகும். ஒரு சாதி மணிகளை ஒரு வரிசையாய் பதித்து வைப்பது போன்றது இதுவும்.

**"நேரின மணியை நிரல்பட வைத்து ஆங்கு**
**ஓரினப் பொருளை ஒருவழி வைப்பது**
**ஒத்து என மொழிப உயர்மொழிப்புலவர்"**

அதாவது ஓரினப் பொருளைப் பற்றிப் பேசும் பல சூத்திரங்கள் சேர்ந்தது ஒத்து ஆகும்.

**படலம்**

இனப்பொருள்கள் தனித்தனியாக அமைந்த பல இயல்கள் சேர்ந்தது படலமாகும். எழுத்து பதம் புணர்ச்சி போன்ற தனித்தனி இயல்கள் பொது வகையால் எழுத்ததிகாரமாயிற்று.

**சூத்திரம்**

பல்வகைப்பட்ட இயல்புகள் குறித்து செய்யப்பட்ட விதிகள் சூத்திரம் எனக் கூறப்படும். சூத்திரம் என்பது வட சொல்லாகும். இது சூத்திரித்தல் என்னும் சொல்லடியால் பிறந்தது. இதற்கு உரைத்தல் என்பது பொருளாகும். தமிழில் நூற்பா என வழங்கப்படுகிறது.

**"சில்வகை எழுத்தின் பல்வகைப் பொருளைச்**
**செவ்வன் ஆடியின் செறித்து இனிதுவிளக்கித்**
**திட்ப நுட்பம் சிறந்தன சூத்திரம்"**

மிகப்பெரிய பொருளின் வடிவத்தைத் தன்னுள் அடக்கித் தெளிவாகவும் இனிதாகவும் காட்டுவது சிறிய கண்ணாடியின் தன்மையாகும். அதுபோலச் சில எழுத்துக்களால் அமைந்து பலவகைப்பட்ட பொருள்களையும் தன்னுள் அடக்கி

இனிமையும் தெளிவும் திண்மையும் நுண்மையும் புலப்படக் காட்டுவது சூத்திரத்தின் இயல்பாகும்.

1. தொடர்ந்து செல்லும் ஆற்று நீரின் ஓட்டத்தைப் போன்று இடையறாது ஒரு பொருளைப் பற்றிச் சில நூற்பாக்கள் தொடர்ந்து நிற்றல்
2. முன்னும் பின்னும் பார்க்கின்ற சிங்கத்தின் பார்வை போன்று இடைநிற்கும் சூத்திரம் முன்னும் பின்னும் சென்று தழுவுதல்
3. இடைவெளி விட்டுப் பாயும் தவளைப் போன்று ஒரு சூத்திரம் சில சூத்திரங்களை இடையில் விட்டு பின்னுள்ளதோடு பொருந்துதல்
4. ஒன்றைக் கவர உயரத்திலிருந்து விழுகின்ற பருந்தைப்போல, ஒரு காரணம் பற்றித் தொலைவில் உள்ள பிறிதொரு சூத்திரப் பொருளைச் சென்று பொருந்துதல்

முதலிய நான்கும் சூத்திர இயல்புக்குக் காட்டப்படும் உவமையாகும்.

1. பல்வகைப்பொருள்களையும் ஒரு சேரத்தொகுத்துக் கூறுதல் 2. பொருள்களை வேறுவேறாகத் தொகுத்துக் கூறுதல் 3. தொகுத்ததை வகுத்துக் கூறுதல் 4. இஃது இன்னது எனக் கூறுதல் 5. புணர்ச்சி போன்றவற்றைச் செய்வதைக் கூறுதல் 6. கூறப்பட்ட இலக்கணங்களுக்கு எல்லாம் புறத்தில் அடையாகு நிற்றல் என்பவை சூத்திரத்தின் வகைகளாகும்.

**உரை**

இலக்கண நூல்களின் விதிகள் நுட்பமும் திட்பமும் செறிந்தவை. அவற்றை எல்லாரும் விளங்கிக்கொள்ளுதல் என்பது அரிதாகும். மேலும் பண்டை இலக்கியங்களின் பொருளை உணர்ந்துக் கொள்வதிலும் தடுமாற்றம் ஏற்பட்டுள்ளது. எனவே நூல்களுக்கு உரை எழுத வேண்டிய நிலை ஏற்பட்டது. இல்ககியங்களைவிட இலக்கண நூல்களுக்கே உரை இன்றியமையாததாகிறது. அவ்வுரை இவ்வளவு என வரையறுத்துக் கூறப்படுவது காண்டிகை உரை. விரிவுபட உரைப்பது விருத்தி உரை ஆகும்.

**உரையின் பொது இலக்கணம்**

1. மூலபாடத்தை எடுத்து வைத்தல் 2. கருத்துரை கூறுதல் 3. சொல்வகை கூறுதல் 4. சொல்லுக்கு பொருள் கூறுதல் 5. கருத்தைத் தொகுத்துக் கூறுதல் 6. மேற்கோள்களைக் காட்டுதல் 7. ஐயங்களைத் தானே தோற்றுவித்தல் 8. அதற்குரிய விடையைக் கூறுதல் 9. நூல் கூறும் பொருளன்றி இடத்திற்கேற்ப சிறப்புப்பொருளை எடுத்துரைத்தல் 10. விரித்துக்கூற வேண்டிய இடத்து விளக்கமுறைக் கூறுதல் 11. சொல்லும் பொருளை அதிகாரத்துடன் பொருத்தமுறக்காட்டுதல் 12. ஐயம் ஏற்படும் இடங்களில் இதற்கு இதுவே பொருள் எனத் துணிந்து கூறுதல் 13. இவ்வாறு

துணிவுறக் காட்டுவதால் ஏற்படும் பயனை எடுத்துரைத்தல் 14. உரையிடத்துத் தொன்னூல் ஆசிரியர்களின் பாடங்களை இயைத்துக் காட்டுதல் என்பன உரையின் பொது இலக்கணம் ஆகும்.

**"பாடம் கருத்தே சொல்வகை சொற்பொருள்**
**தொகுத்துரை உதாரணம் வினாவிடை விசேடம்**
**விரிவு அதிகாரம் துணிவு பயனோடு**
**ஆசிரியவசனம் என்று ஈர்ஏழ் உரையே."**

**காண்டிகை உரை**

1. கருத்துரை கூறுதல் 2. பதப்பொருள் கூறுதல் 3. எடுத்துக்காட்டால் நிறுவுதல் ஆகிய மூன்றனைச் சொல்லுதல் அவற்றுடன் 4. வினா எழுப்புதல் 5. விடை கூறி விளக்குதல் ஆகிய இரண்டையும் கூட்டிச் சொல்லுதல் என்னும் ஐந்தால் சூத்திரத்தின் பொருளை விளக்குது காண்டிகை ஆகும்.

மூன்றைச் சொல்வது முக்காண்டிகை ஐந்தைச் சொல்வது ஐங்காண்டிகை என அழைக்கப்பெறும் மயிலைநாதர் செய்த உரை முக்காண்டிகை. ஆறுமுக நாவலரால் எழுதப்பட்டது ஐங்காண்டிகை உரை ஆகும்.

**விருத்தி உரை**

1. சூத்திரப் பொருளை விளக்குதல் 2. அவ்விடத்திற்குத் தேவையான பொருள்களைத் தன்நூல் கொண்டும் பிறர் நூல் கொண்டும் ஐயம் நீங்கத் தெளிவுபடுத்துதல் 3. ஐயங்காண்டிகை உறுப்போடு எஞ்சிய ஒன்பது உறுப்பும் கூட ஐயம் அகல உண்மைப்பொருளைத் தெளிவுபட விரிவாக உரைத்தல் ஆகிய அனைத்துத் தன்மைகளையும் கொண்டதே விருத்தியுரை ஆகும்.

**நூல் பெயர்க்காரணம்**

சொற்கள் பஞ்சாகவும் செய்யுள் இழையாகவும் செம்மையான சொற்களை அறிந்த புலவன் நூற்கின்ற பெண்ணாகவும் குன்றாக வாய் கையாகவும் அறிவு கதிர் என்னும் கருவியாகவும் கொண்டு குற்றமில்லாத கலவிநூல் அமைக்கப்படுகிறது.

ஒரு பெண் தனது கையினால் கதிராகிய கருவியைக் கொண்டு பஞ்சினை இழைத்து நூலாக்குவதைப் போன்று புலவன் தனது வாயினால் அறிவாகிய கருவியைக் கொண்டு சொற்களால் செய்யுள் இயற்றி நூலாக்குகிறான். நூலைப் போலச் செய்யப்படுவதால் நூல் என்பது உவம ஆகுபெயர்.

**நூலின் பண்பு**

வளைந்த மரத்தின் கோணலைப் போக்கி நேராக்குவது எற்று நூல். அதுபோல மனிதரின் மனக்கோணலைப் போக்கி நல்வழிப்படுத்துவது கல்வி நூல். நூலைப்

போலச் செம்மைப்படுத்துவதாய் நூல் என்பது உவம ஆகுபெயராகும். நூல் போல ஆக்கப்படுதலாலும் எற்று நூல் போலச் செயற்படுதலாலும் நூல் என்பது காரணப்பெயர்.

பாடம்-2

## ஆசிரியர்

ஆசிரியர் என்னும் சொல்லுக்குக் குற்றம் களைபவர் (ஆசு-குற்றம்; இரிதல்-நீக்குதல்) என்பது பொருளாகும். தான் குற்றமற்றவராக நின்று தன்னிடம் கற்க வருவோரைக் குற்றமற்றவராக்கும் பணியைச் செய்பவரே ஆசிரியர்.

**நல்லாசிரியரின் இலக்கணம்**

**“குலன் அருள்தெய்வம் கொள்கை மேன்மை**
**கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை**
**நிலம் மலைநிறைகோல் மலர் நிகர் மாட்சியும்**
**உலகியல் அறிவோடு உயர்குணம் இனையவும்**
**அமைபவன் நூல் உரையாசிரியன்னே”**

1. நற்குடிப்பிறப்பு 2. இரக்க உணவு 3. தெய்வ வழிபாடு 4. பெருந்தன்மை 5. பல நூல்களைக் கற்றுத்தெளிந்த அறிவு 6. சுவைபடவும் தெளிவாகவும் விளக்கும் சொல்லாற்றல் 7. நிலம் மலை நிறைகோல் மலர் என்பவற்றை ஒத்த சிறந்த குணங்கள் உடைமை 8. காலத்திற்கு ஏற்பச் சிந்திக்கும் ஆற்றல் 9. இவற்றைப் போன்ற பிற உயர்ந்த குணங்களையும் பெற்றிருத்தல் ஆகியன நல்லாசிரியரின் இலக்கணங்கள் ஆகும்.

ஆசிரியருக்கு நிலம், மலை, நிறைகோல், மலர் ஆகியவை உவமைகளாக காட்டப்பட்டுள்ளன.

**நிலத்தின் மாண்புகள்**

**“தெரிவரும் பெருமையும் திண்மையும் பொறையும்**
**பருவ முயற்சி அளவிற் பயத்தலும்**
**மருவிய நன்னில மாண்பாகும்மே”**

பெருமை முதலாகக் கூறப்படும் நிலத்தின் இயல்புகள் ஆசிரியரின் இயல்பாக அமையும்.

| நிலம் | ஆசிரியர் |
|---|---|
| 1. ஓரிடத்தில் நின்று அளவிட முடியா உருவப் பெருமையுடையது | பிறரால் அறிய முடியாத கல்வி பெருமை உடைமை |
| 2. எவ்வளவு சுமை ஏற்றினாலும் கலங்காது | எத்துணை பெரிய கல்வியாளன் வரினும் கலங்காது வாதம் புரிதல் |
| 3. குத்தினும் வெட்டினும் பொறுத்திக்கொள்வது | மாணாக்கரும் பிறரும் செய்யும் குற்றங்களைப் பொறுத்தல் |
| 4. உழவரின் உழைப்புக்கு ஏற்பப்பயன் அளிப்பது | மாணாக்கரின் முயற்சிக்கு ஏற்பப் பயன்படுதல் |

**மலையின் மாண்புகள்**

**“அளக்கலாக அளவும் பொருளும்**
**துளக்கலாக நிலையும் தோற்றமும்**
**வறப்பினும் வளம்தரும் வண்மையும் மலைக்கே”**

அளவு முதலாகக் கூறப்படும் இயல்புகள் மலையின் மாட்சிமைகளாகும். இவற்றிற்கு உவமையாகும்படி ஆசிரியர் இயல்பு அமையும்.

| மலை | ஆசிரியர் |
|---|---|
| 1. அளக்க முடியாத அளவுடையது | அளவில்லாக் கல்வியறிவு உடைமை |
| 2. அளக்க முடியாப் பொருள்வளம் உடையது | பன்னூல் புலமை உடைமை |
| 3. எத்தகையவராலும் அசைக்க முடியாது | பிற புலவராலும் சொல்ல முடியாத கல்வி அறிவுடைமை |
| 4. தொலைவில் உள்ளவர் காணும்படியான உயரம் உடையது | தொலைவில் உள்ளவரும் அறியும் கல்விப் புகழுடைமை |
| 5. வானம் வறண்டு பொய்ப்பினும் சுனைகளால் நீரைத்தரும் கொடைத் தன்மையுடையது | தான் வறுமை அடைந்தாலும் மாணவர்களுக்கு கல்வி கொடுக்கும் வள்ளன்மை உடைமை |

**நிறைகோல் (தராசு) மாண்புகள்**

**“ஐயம் தீரப் பொருளை உணர்த்தலும்**
**மெய்ந்நடு நிலையும் மிகுநிறை கோற்கே”**

எடையைக் காட்டல் நடுவுநிலைமை ஆகியவை நிறைகோலின் இயல்புகள். ஆசிரியரின் இயல்பு இதற்கு உவமையாகும்.

| நிறைகோல் | ஆசிரியர் |
|---|---|
| 1. பொருள் அளவை ஐயம் தீரத் தெளிவாகக் காட்டுதல் | கல்வியை ஐயமறக் கற்றுத்தருதல் |
| 2. எப்பக்கமும் சாயாமல் நடுநிற்றல் | வேண்டியவர் வேண்டாதவர் என்று எவர் பக்கமும் சாயாது நடுநிற்றல் |

**மலரின் மாண்புகள்**

**“மங்கலம் ஆகி இன்றியமையாதது**
**யாவரும் மகிழ்ந்து மேற்கோள மெங்கிப்**
**பொழுதின் முகமலர் உடையது பூவே”**

நற்செயலுக்கு உரியதால் முதலான குணங்கள் மலரின் மாட்சிகளாகும். இவற்றிற்கு உவமையாகும்படி ஆசிரியர் இயல்பு அமையும்.

| மலர் | ஆசிரியர் |
|---|---|
| 1. மங்கலக் காரியங்களுக்கு உரியது | நன்மையான செயல்களுக்குரியவர் |
| 2. தானின்றி எச்செயலும் நடைபெறாச் சிறப்புடையது | ஆசிரியர் இன்றி எச்செயலும் நடைபெறாமை |
| 3. எல்லோரும் விரும்பிச் சூடும் தன்மை கொண்டிருத்தல் | அனைவராலும் போற்றப்படுகின்ற குணமுடைமை |
| 4. மென்மைத் தன்மையுடையது | எல்லோரும் எளிதில் நெருங்கி அன்பு பாராட்டல் |
| 5. உரிய காலத்தில் மலர்தல் | எப்போதும் முக மலர்ச்சியுடைமை |

**ஆசிரியர் ஆகாதார் இயல்பு**

1. நல்லாசிரியருக்குக் கூறப்பட்ட நற்குணங்களும் கல்வி கற்பிக்கும் ஆற்றலும் இல்லாமை 2. இழிந்த குணங்களை இயல்பாகக் கொண்டிருத்தல் 3. பொறாமை 4. பேராசை 5. வஞ்சகம் உடைமை 6. மாணவர்களைக் கண்டுதான் அஞ்சுதல், தன்னைக் கண்டு மாணவர்கள் அஞ்சும்படி பேசுதல் 7. கழற்குடம் மடற்பனை, பருத்திக்குண்டிகை, முடந்தெங்கு போன்ற மாறுபட்ட தன்மை உடையராதல் இவையே ஆசிரியர் ஆகாதார்க்கு உடைய இலக்கணம் ஆகும்.

**1. கழற்குடத்தின் தன்மை**

| கழற்குடத்தின் தன்மை | ஆசிரியர் ஆகாதவர் |
|---|---|
| 1. முன் இட்ட காய்களைப் பின்னும் பின் இட்டதை முன்னுமாக மாற்றித்தருவது | முன் கூற வேண்டியதைப் பின்னும் பின் கூற வேண்டியதை முன்னும் கூறி இடர்பட வைப்பர் |
| 2. பெய்த காய்களை விரைவில் வெளிப்படுத்துவது | கற்போர் மனத்தில் கொள்ள முடியாதபடி விரைவாகக் கூறுவர் |

**2. மடற்பனை**

ஏறமுடியாதபடி இன்னல் செய்யும். மட்டைகளை உடையது. தானே தரக்கொளின் அன்றித் தன்பால் மேவிக் கொளக்கொடா அன்றித் தன்பால் இடத்தது மடற்பனை.

| மடற்பனை | ஆசிரியர் ஆகாதவர் |
|---|---|
| 1. பழங்களைத் தானே கொடுப்பதன்றி விரும்பிய நேரத்தில் விரும்பிய வகையில் ஏறிப் பறித்துக் கொள்ள இடந்தராது. | தானே முன்வந்து கற்றுக்கொடுப்பது அன்றி பிறர் தன்னை நெருங்கிக் கற்கவரின் அவர்க்குக் கற்றுக் கொடுக்க மாட்டார் |

### 3. பருத்திக்குண்டிகை

பஞ்சைத் தூய்மை செய்து அதைப் பாதுகாத்தல் பொருட்டு அடைத்து வைக்கும் சிறிய வாயை உடைய குடுக்கை.

| பருத்திக்குண்டிகை | ஆசிரியர் ஆகாதவர் |
|---|---|
| 1. உட்கொள்ளும்போது பஞ்சைச் சிறிது சிறிதாக ஏற்றுக்கொள்ளும் | தான் கற்றக் காலத்தில் மிகவும் வருந்தித் துன்பப்பட்டுச் சிறிது சிறிதாகவே கற்றிருப்பா் |
| 2. கொடுக்கும்போதும் சிறிது சிறிதாகவே எடுக்க இடங்கொடுக்கும். | பிறருக்குக் கற்பிக்கும்போது மிகவும் வருந்தித் துன்பப்பட்டுச் சிறிது சிறிதாகவே கற்றுக்கொடுப்பா் |

### 4. முடத்தெங்கு

தன் வீட்டு எல்லைக்குப் (வேலிக்கு) புறமாக வளைந்து வளா்ந்த தென்னையே முடித்தொங்கு ஆகும்.

| முடத்தெங்கு | ஆசிரியர் ஆகாதவர் |
|---|---|
| 1. நீா்ப்பாய்ச்சி உரம் இட்டு வளா்ப்பவருக்குப் பயன்படாமல் அடுத்தவருக்குப் பயன்களைத் தருவது | பொருள் கொடுத்து வழிபடுபவா்களை விடுத்துப் பிறருக்குக் கற்றுக் கொடுப்பவா். |

### கற்பிக்கும் தன்மை

ஆசிரியா் மாணவருக்கு பாடத்தைச் சொல்லித் தரும் முறையே நுவலும் திறன் ஆகும்.

**“ஈதல் இயல்பே, இயலம்பும் காலைக்**
**காலமும் இடனும் வாலிதின் நோக்கிச்**
**சிறிந்துழி இருந்துதன தெய்வம் வாழ்த்தி**
**உரைக்கப்படும் பொருள் உள்ளத்து அமைத்து**
**விரையான் வெகுளாள் விரும்பி முகமலா்ந்து**

**கொள்வோன் கொள்வகை அறிந்து அவன் உளங்கொளக்**
**கோட்டமில் மனத்தில் நூல் கொடுத்தல் என்ப"**

1. நல்ல இடத்தையும் ஏற்ற காலத்தையும் தேர்ந்தெடுத்தல் 2. தான் மாணவர்களாக காணும்படியாகவும் தன்னை மாணவர்கள் காணும்படியாகவும் மேம்பட்ட இடத்தில் இருத்தல் 3. கடவுளைத் தொழுத பின்னரே கற்பிக்கத் தொடங்குதல் 4. கற்பிக்கப் போகும் பொருளைத் தன் மனத்துள் முன்னரே நன்றாக நிறைத்து வைத்தல் 5. பொறுமையுடனும் 6. சினம் இல்லா இனிய முகத்துடனும் 7. விருப்பத்தோடும் கற்பித்தல் 8. மாணாக்கரின் மனநிலை அறிந்து அதற்கு ஏற்றபடி எடுத்துரைத்தல் 9. தன் மனம் போனாமலும் மாணவர் மனம் கோணாமலும் நூலைக் கற்றுக்கொடுத்தல். இவையே ஆசிரியர் மாணாக்கர்க்குக் கற்றுக் கொடுக்கும் முறையாகும்.

**மாணவர்**

மாணவர் என்பது இருபாற்பொதுச் சொல். இது ஆண், பெண் என்னும் இருவரையும் குறிக்கும். மாணவர் என்ற சொல்லுக்கு மாண்புடையவர் என்று பொருள் மாணவனை நன்னூலார் கொள்வோன் எனக் குறிப்பிடுகிறார். நூலை மனத்தில் ஏற்றுக்கொள்வதால் கொள்வோன் என்பது காரணப்பெயராகும்.

நூலைக் கற்பிக்கும் ஆசிரியர், 1. தன் மகன் 2. தன் ஆசிரியர் மகன் 3. அரசர் மகன் 4. மிகுந்த பொருளைக் கொடுப்பவள் 5. தன்னை வழிபடுபவன் 6. தான் உரைப்பதை விரைந்து ஏற்கும் அறிவுடையவன் ஆகியோர்க்கு நூலைக் கற்பிப்பார்.

**மாணாக்கர் வகைகள்**

நூலைக் கற்கும் மாணவர்கள் அவர்களின் கற்கும் தன்மைக்கு ஏற்ப மூவகையாகப் பாகுபடுத்துவர்.

1. தலை மாணாக்கர் அன்னத்திற்கும் பசுவிற்கும் ஒப்பாவர்.

2. இடை மாணாக்கர் மண்ணையும் கிளியையும் ஒத்தவர்.

3. கடை மாணாக்கர் ஓட்டைக்குடம், ஆடு, எருமை, நெய்யரியை (பன்னாடை) போன்றவர்கள் ஆவார்.

**அன்னம் ஆவே மண்ணொடு கிளியே**
**இல்லிக்குடம் ஆடு எருமை நெய்யரி**
**அன்னர் தலை இடை கடைமாணாக்கர்.**

**தலை மாணக்கர்**

| | |
|---|---|
| 1. அன்னம்: பாலும் நீரும் கலந்திருப்பின் பாலை உண்டு நீரை நீக்கும் | ஆசிரியர் கூற்றிலிருந்து தேவையானவற்றை எடுத்துக்கொண்டு தேவையற்றதை விட்டுவிடுவர் |
| 2. பசு: நல்ல புல்லைக்காணின் விரைந்து மேய்ந்து பின்னர் அசைபோட்டு விழுங்கும் | ஆசிரியரிடம் கேட்ட பாடத்தைச் சிறிது சிறிதாக நினைவுக்குக் கொண்டு வந்து சிந்தித்து மனதில் நிறுத்துவர் |

**இடை மாணாக்கர்**

| | |
|---|---|
| 1. மண்: உழைப்பிற்கேற்ப மண் விளைவினைக் கொடுக்கும் | ஆசிரியரின் உழைப்பிற்கு ஏற்ற அறிவைப் பெறுவர் |
| 2. கிளிப்பிள்ளை: சொன்னதை மட்டும் சொல்லும் | ஆசிரியரின் உழைப்பிற்கு ஏற்ற அறிவைப் பெறுவர் |

**கடை மாணாக்கர்**

| | |
|---|---|
| 1. ஓட்டைக்குடம்: இல்லிக்குடம் நீரை ஊற்றும்போதே வெளியிடும் | பாடம் கேட்கும்போதே மனத்திற் கொள்ளாமல் விட்டுவிடுவர் |
| 2. ஆடு: ஓரிடத்தில் மேய்ந்து வயிறு நிரம்பாது அலைந்து திரியும். | ஓர் ஆசிரியனிடம் முழுமையாகக் கல்லாது பலரிடமும் சென்று முழுமையல்லாத அறிவுடன் இருப்பர். |
| 3. எருமை: நல்ல நீரை கலக்கிக் குடிக்கும் | ஆசிரியரின் உள்ளத்தை வருந்தச் செய்து கற்பர். |
| 4. நெய்யரி (பன்னாடை) நல்ல பொருளை விட்டு அழுக்கைத் தேக்கிக் கொள்ளும். | நல்லதை விட்டு தேவையற்றதை மனத்தில் நிறுத்துவர். |

**மாணாக்கர் ஆகாதவர்**

1. கள்குடிப்பவன் 2. சோம்பேறி 3. பெரியோரை மதிக்காதவன் 4. காமுகன் 5. திருடன் 6. நோய்வாய்ப்பட்டவன் 7. மிகுந்த வறுமையுடையவன் 8. மாறுபட்டுப் பேசுபவன் 9. கோபக்காரன் 10. எப்பொழுதும் உறங்குபவன் 11. அறிவுக்கூர்மை அற்றவன் 12. பழைய நூல்களைக் கண்டு மனம் தடுமாறுபவர் 13. தான் என்ற வீரம் (அகந்தை) பேசுபவன் 14. பாவத்தொழில் செய்பவன் 15. பொய் பேசுபவன் ஆகியோருக்கு ஆசிரியர் நூலைக் கற்றுக்கொடுத்தல் கூடாது.

**சிறப்புப்பாயிரம்**

குறிப்பிட்ட நூலுக்குரிய வரலாற்றைக் கூறுவது சிறப்புப்பாயிரம். இது பதினொரு செய்திகளை வெளிப்படுத்தும். அவற்றுள் முதல் எட்டும் இன்றியமையாதன. பின் மூன்றும் சிறப்பில ஆயினும் வரலாற்றிற்குப் பெரிதும் உதவுவன.

1. நிலை எழுதியவனின் பெயர் 2. நூலின் வழி 3. நூல் வழங்கும் நாட்டின் எல்லைகள் 4. நூலின் பெயர் 5. தொகை வகை விரியுள் ஒன்றாதல் 6. நூல் கூறும் பொருள் 7. நூலைக் கேட்டதற்கு உரியர் 8. நூலைக் கேட்பதால் உண்டாகும் பயன் ஆகிய எட்டையும் பொருந்தக் காட்டுவதே சிறப்புப் பாயிரத்தின் இலக்கணமாகும்.

9. நூல் செய்த காலம் 10. நூலை அரங்கேற்றியும் அவைக்களம் 11. நூல் செய்தற்குரிய காரணம் ஆகிய இம்மூன்றையும் சேர்த்துப் பதினொன்றாகக் கூறுவர்.

**நூலுக்கு பெயர் அமையும் விதம்**

1. முதல் நூலால் பெயர் பெற்றவை – பாரதம், இராமாயணம்
2. ஆக்கியோனால் பெயர் பெற்றவை – அகத்தியம், தொல்காப்பியம்
3. அளவால் பெயர் பெற்றவை – பன்னிருபடலம், நாலடி நானூறு
4. மிகுதியால் பெயர் பெற்றவை – களவியல் போன்றவை
5. பொருளால் பெயர் பெற்றவை – அகப்பொருள், புறப்பொருள்
6. செய்வித்தோனால் பெயர் பெற்றவை – சாதவாகனம், வீரசோழியம்
7. தன்மையால பெயர் பெற்றவை – சிந்தாமணி, நன்னூல்
8. இடுகுறியால் பெயர் பெற்றவை – நிகண்டு, கலைக்கோட்டுத் தண்டு

**பிற காரணங்களால் அமையும் பெயர்கள்**

1. முதற்குறிப்பு - ஆத்திசூடி, கொன்றைவேந்தன்
2. இடம் - களவளி நாற்பது
3. காலம் - கார் நாற்பது
4. ஆக்கியோனின் ஆசிரியர் - நேமிநாதம்

5. உவமை - திரிகடுகம், சிறுபஞ்சமூலம்

**நூல் யாப்பு**

யாப்பு என்பது பொதுவாக வெண்பா, ஆசிரியப்பா போன்ற செய்யுள் வகையைக் குறிக்கும் சிறப்புப் பாயிரத்துள் ஒன்றான யாப்பு என்பதற்குத் தொடர்ச்சி என்பது பொருளாகும். அவ்விரண்டிற்கும் மாறானது நூல் யாப்பு, இது நூல் யாக்கப்படும் (செய்யப்படும்) முறையைக் குறிப்பதாகும். முதல் நூலை அடிப்படையாகக் கொண்டு வழிநூல் அமைத்தலைச் சிறப்பிப்பதே நூல் யாப்பாகும்.

**நூல் யாப்பின் வகைகள்**

1. விரிந்து கிடப்பவற்றைத் தொகுத்துச் சொல்லுதல் 2. தொகையாய்க் கிடப்பவற்றை விரித்துச் சொல்லுதல் 3. தொகுத்தும் விரித்தும் சொல்லுதல் 4. ஒரு மொழியில் உள்ள நூலை வேறு மொழியில் பெயர்த்துக் கூறுதல் என்னும் இந்நான்கு கூறுகளை உள்ளடக்கியதாகும்.

**சிறப்புப் பாயிரம் செய்தற்கு உரியர்**

1. தனக்கு நூலைக் கற்பித்த ஆசிரியன் 2. தன்னுடன் பாடம் கேட்டான் 3. தன்னுடைய மாணாக்கான் 4. தான் செய்த நூலுக்கு உரை எழுதும் தகுதி படைத்தவன் ஆகிய நால்வருள் ஒருவர் சிறப்புப்பாயிரத்தை செய்தற்கு உரியார்.

**பாயிரத்தின் இன்றியமையாமை**

ஆயிரம் உறுப்புக்களைக் கொண்டதாய்ப் பரந்து விரிந்த நூலாக இருப்பினும் பாயிரத்தைப் பெறாவிடில் அது நூலாகாது.

**பாயிரத்தின் சிறப்பு**

1. மாளிகைக்கு ஓவியமும் 2. பெரிய நகரத்திற்குக் கோபுரமும் 3. அசைகின்ற மூங்கில் போன்ற தோளை உடைய பெண்ணுக்கு அணியும் அழகு சேர்ப்பன. அவற்றைப் போலக் கருதி, நுண்ணிய பொருளைக் கூறும் பாயிரங்களை எவ்வகைப்பட்ட நூல்களுக்கும் முன்னர் வைத்தனர் பெரியோர். ஆதலால் முதல் பாயிரம் இல்லாதது நூலாகாதாம்.

# எழுத்ததிகாரம்

எழுத்தின் அகத்திலக்கணம் புறத்திலக்கணம் என்னும் இருவகை இலக்கணங்களையும் உணர்த்தும் அதிகாரம்.

இவ்வதிகாரத்தில் 1. எழுத்தியல் 2. பதவியல் 3. உயிரீற்றுப் புணரியல் 4. மெய்யூற்றுப் புணரியல் 5. உருபு புணரியல் என்னும் ஐவகை இயல்கள் விளக்கம் பெறுகின்றன.

பாடம்-3

## 1. எழுத்தியல்

எழுத்தின் ஐந்திலக்கணத்தை உணர்த்தும் இயல்.

**கடவுள் வணக்கமும் அதிகாரத் தொடக்கமும்**

**பூமலி யசோகின் புனைநிழ யமர்ந்த**
**நாள்முகற் றொழுது நன் கியம்புவ னெழுத்தே. (1)**

பூக்கள் நிறைந்த அசோக மரத்தினது அழகிய நிழலில் எழுந்தருளிய நான்கு திருமுகங்களுடைய கடவுளை (அருகதேவனை) வணங்கி எழுத்திக்கணத்தை நன்றாகச் சொல்வேன் என்பார் நன்னூலார். நன்கியம்புவன் என்று நுதலிப்புகுதல் என்னும் உத்தியின் வாயிலாக எழுத்ததிகார் விளக்குகிறார் நன்னூலார்.

**எழுத்திலக்கணத்தின் பகுப்பு பன்னிரண்டு**

**எண்பெயர் முறைபிறப்பு உருவம் மாத்திரை**
**முதலீ றிடைநிலை போலி யென்றா**
**பதம்புணர்ப் பெனப்பன் னிருபாற் றதுவே. (2)**

எழுத்துக்களின் கணக்கும், பெயரும், முறையையும், பிறத்தலும், வடிவமும், ஒலிக்கும் அளவும், மொழிக்கு முதலில் நிற்றலும், மொழிக்கு இறுதியில் நிற்றலும், மொழிக்கு நடுவில் நிற்றலும், போலியும் என்றும் பதமும் புணர்ச்சியும் என்றும் பன்னிரண்டு வகையினை உடையதாகும் எழுத்திலக்கணம்.

### 1. எண்

**எழுத்து இன்னதென்பதும் அதன் வகையும்**

**மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி**
**எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே. (3)**

சொல்லுக்கு முதற்காரணமாகின்ற அணுக்கூட்டத்தின் காரியமாகிய ஓசை எழுத்தாகும். அவ்வெழுத்தும் முதலெழுத்தும் சார்பெழுத்தும் என்ற இருவகைத்தாகும்.

**முதலெழுத்தின் வகையும் விரியும்**

**உயிரு முடம்புமா முப்பது முதலே. (4)**

உயிரெழுத்துப் பன்னிரண்டும், மெய்யெழுத்துப் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துக்களும் முதலெழுத்தாகும்.

**சார்பெழுத்தின் வகை பத்து**

**உயிர்மெய் ஆய்தம் உயிரளபு ஒற்றளபு**
**அ.ஃகிய இஉஐ ஔ ம.ஃகான்**
**தனிநிலை பத்துஞ் சார்பெழுத் தாகும். (5)**

உயிர்மெய்யும், முற்றாய்தமும், உயிரளபெடையும், ஒற்றள பெடையும், குறுகிய இகரமும் (குற்றியலிகரம்), குற்றியலுகரமும், ஐகாரக்குறுக்கமும், ஔகாரக்குறுக்கமும், மகரக்குறுக்கமும், ஆய்தக்குறுக்கமும் ஆகிய பத்தும் சார்பெழுத்தின் வகையாம்.

**சார்பெழுத்தின் விரி**

**உயிர்மெய் யிரட்டுநூற் றெட்டுய ராய்தம்**
**எட்டுவி ரளபெழு மூன்றொற் றளபெடை**
**ஆறே ழ.ஃகு மிம்முப் பாளேழ்**
**உகர மாறாறைகான் மூன்றே**
**ஔகா னொன்றே ம.ஃகான் மூன்றே**
**ஆய்த மிரண்டொரு, சார்பெழுத் துறுவிரி**
**ஒன்றொழி முந்நூற் றெழுபா னென்ப. (6)**

உயிர்மெய் இருநூற்றுப்பதினாறும், முற்றாய்தம் எட்டும், உயிரளபெடை இருபத்தொன்றும், ஒற்றளபெடை நாற்பத்திரண்டும், குற்றியலிகரம் முப்பத்தேழும், குற்றியலுகரம் முப்பத்தாறும், ஐகாரக்குறுக்கம் மூன்றும், ஔகாரக் குறுக்கம் ஒன்றும், மகரக்குறுக்கம் மூன்றும், ஆய்தக்குறுக்கம் இரண்டும் ஆக சார்பெழுத்தினது மிக்கவிரி முந்நூற்றறுபத்தொன்பது ஆகும்.

## 2. பெயர்

**பெயரின் பொதுவிலக்கணம்**

**இடுகுறி காரணப் பெயர்பொதுச் சிறப்பின (7)**

இடுகுறிப் பெயருங் காரணப்பெயருமாகிய இரண்டும் பல பொருளுக்குப் பொதுப் பெயராயும் ஒவ்வொரு பொருளுக்கே சிறப்புப் பெயராயும் வருவனவாம்.

எனவே இடுகுறிப் பொதுப்பெயர், இடுகுறிச் சிறப்புப்பெயர், காரணப் பொதுப்பெயர், காரணச் சிறப்புப்பெயர் எனப்பெயர் நால்வகைப்படும் என்பர்.

உதாரணம், மரம் - இடுகுறிப் பொதுப்பெயர்

பனை, பலா - இடுகுறிச் சிறப்புப்பெயர்

அணி - காரணப் பொதுப்பெயர்

வளை, சிலம்பு- காரணச் சிறப்புப்பெயர்

## எழுத்துக்களின் பெயர்

**உயிரும் மெய்யும்**

**அம்முத லீரா ஆவி கம்முதல்**
**மெய்ம்மூ வாறென விளம்பினார் புலவர். (8)**

அகரம் முதலிய பன்னிரண்டும், உயிரெழுத்து. ககரம் முதலிய பதினெட்டும் மெய்யெழுத்து என்று விளம்பினார் அறிவுடையோர்.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ, உயிர் 12

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன், மெய் 18

**குறில் 5**

**அவற்றுள்**
**அ, இ, உ, எ ஒக் குறி லைந்தே (9)**

உயிர்மெய் என்ற அவற்றுள் அ, இ, உ, எ, ஒ இவ்வைந்தும் குற்றெழுத்தாம்.

**நெடில் 7**

**ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ நெடில் (10)**

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ இவ்வேழும் நெட்டெழுத்தாம்.

## 3. சுட்டு

**அ. இ உம் முதல் தனிவரிற் சுட்டே (11)**

அ இ உ இம்மூன்றும் மொழிக்கு முதலில் தனித்து சுட்டுப்பொருளைக் காட்டி வந்தால் சுட்டெழுத்தாம்.

முதல் எனப் பொதுப்படச் சொன்னதனால் மொழிக்கு அகத்தும் புறத்தும் வருமெனக் கொள்ளல் வேண்டும். அகத்துறப்பு பதத்தினுள்ளாகவே சுட்டெழுத்து நிற்பது. புறத்துறுப்பு பதத்திற்கு வெளியாகச் சுட்டெழுத்து நிற்பது.

| | |
|---|---|
| அவன் | அக்கொற்றன் |
| இவன் - அகச்சுட்டு | இம்மனிதன் - புறச்சுட்டு |
| உவன் | உவ்வீடு |

அகரம் தூரத்திலுள்ள பொருளையும், இகரம் சமீபத்திலுள்ள பொருளையும் உகரம் நடுவிலுள்ள பொருளையும் குறித்தற்கு உதவும்.

**வினா 5**

**எ யா முதலும் ஆ ஓ ஈற்றும்**
**ஏயிரு வழியும் வினாவா கும்மே. (12)**

எகரமும் யாவும் மொழிக்கு முதலிலும், ஆகாரமும், ஓகாரமும் மொழிக்கு இறுதியிலும், ஏகாரம் இரண்டிடத்திலும் மொழிக்கு முதலிலும் இறுதியிலும் தனித்து வினாப்பொருளைக் காட்டிவந்தால் வினாவெழுத்தாம்.

(உம்) எவன் - எ, யா முதலிலே அகத்து வந்தன

யாவன் அகவினா

எக்கடவுள் - எ, யா முதலிலே புறத்து வந்தன

யாங்கனம் புறவினா

பொன்னனா - ஆ, ஓ, ஈற்றிலே புறத்து வந்தன

பொன்னனோ (ஈற்றுவினா புறத்து மாத்திரமே வரும்)

ஏவன் - ஏ முதலில் அகத்தும், ஈற்றில் புறத்தும்

பொன்னனே வந்தது

**வல்லினம் 6**

**வல்லினங் க ச ட த ப ற வென வாறே. (13)**

க ச ட த ப ற என்ற இவ்வாறு எழுத்துக்களும் வன்மையாக ஒலிக்கின்ற வருக்கம்.

**மெல்லினம் 6**

**மெல்லினம் ங ஞ ண ந ம ன வென வாறே. (14)**

ங ஞ ண ந ம ன என்ற ஆறு எழுத்துக்களும் மென்மையாக ஒலிக்கின்ற வருக்கம்.

**இடையினம் 6**

**இடையினம் ய ர ல வ ழ ள வென வாறே. (15)**

ய ர ல வ ழ ள என்ற இவ்வாறும் வல்லின மெல்லினங்கட்கு நடுத்தரமாக ஒலிக்கின்ற வருக்கம்.

வல்லினம் பிறக்குமிடமாகிய மார்பிற்கும், மெல்லினம் பிறக்குமிடமாகிய மூக்கிற்கும் இடையினமாகிய கழுத்தினின்றும் பிறத்தல் பற்றி இடையெழுத்தென பெயர் பெற்றது என்றும் கூறுவர்.

**இனவெழுத்து**

**ஐ ஒள இ உச் செறிய முதலெழுத்து**
**இவ்விரண் டோரின மாய்வரல் முறையே. (16)**

ஒத்த இனமில்லாத ஐகார ஒளகாரங்கள், ஈகார ஊகாரங்கட்கு இனமாகிய இகர உகரங்களையே தமக்கும் இனமாகப் பொருந்த முதலெழுத்துக்கள் இரண்டிரண்டு ஓரினமாகி வருதல் தொன்றுதொட்டு வரும் முறைமையாம். ஆதலால் அவை இனவெழுத்து எனப் பெயர்பெறும்.

(உம்) அ-ஆ, இ-ஈ, உ-ஊ, எ-ஏ, (இ)-ஐ, ஒ-ஓ, (உ)-ஒள எனவும் க-ங, ச-ஞ. ட-ண, த-ந, ப-ம, ற-ன, எனவும் வருக இடையெழுத்தாறும் ஓரினம்.

**இனமென்றதற்கு காரணம்**

**தான முயற்சி யளவு பொருள் வடிவு**
**ஆனவொன் றாதியோர் புடையொப் பினமே. (17)**

பிறப்பிடமும், முயற்சியும், மாத்திரையும், பொருளும், உருவமும் ஆகிய இவற்றுள் ஒன்று முதலாகிய சில ஒத்திருத்தல் இனமாததற்குக் காரணமாம்.

தானத்தாலும் முயற்சியாலும் ஒத்து வருவன உயிரினமெல்லாம் முயற்சியாலும் அளவாலும் ஒத்து வருவன. இடையினம் ஒழிந்த மெய்கள் பொருளால் ஒத்துவருவன. அஆ, இஈ, உஊ, எஏ, ஒஓ, கங, சஞ, தந, பம, றன முதலியன.

அது, ஆது; இங்கு, ஈங்கு; உங்கு, ஊங்கு; எது, ஏது; ஒடு, ஓடு; குளக்கரை, குளங்கரை; தடச்சோலை, தடஞ்சோலை; படம், பணம்; பாழ்த்தூறு, பாழ்ந்தூறு; அப்பு, அம்பு; நற்கு, நன்கு எனச் சிலபொருள் ஒத்துவருதல் காண்க.

## 3. முறை

**சிறப்பினு மினத்தினுஞ் செறிந்தீண் டம்முதல்**
**நடத்தல் தானே முறையா கும்மே (18)**

சிறப்பினாலும், இனத்தினாலும் ஒன்றன் பின் ஒன்று பொருந்தி இவ்வுலகத்தில் அகரம் முதலாகத் தொன்றுதொட்டு வழங்குதலே எழுத்துக்கள் நிற்கும் முறையாகும்.

## 4. பிறப்பு

### பிறப்பின் பொது இலக்கணம்

**நிறையுயிர் முயற்சியி னுள்வளி துரப்ப**
**எழுமணுத் திரளுரங் கண்ட முச்சி**
**மூக்குற் றிதழ்நாப் பல்லணத் தொழிலின்**
**வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே (19)**

ஒலியெழுத்திற்கு வேண்டுங் காரணங்களிற் குறைவின்றி நிறைந்த உயிரினது உச்சரிக்க வேண்டுமென்னும் முயற்சியால், உள்ளே நின்ற காற்றானது எழுப்ப, எழுகின்ற அணுக்கூட்டம், மார்பும் கழுத்தும் தலையும் மூக்குமாகிய நான்கிடத்தையும் முதலில் பொருந்தி, பின்பு உதடும் நாக்கும் பல்லும் வாயுமாகிய நாக்கினுடைய முயற்சி வேறுபாட்டினால், வேறுவேறு வகைப்பட்ட எழுத்தாகிய ஓசைகளாய் தோன்றுதல் பிறப்பாகும்.

### முலெழுத்துக்களின் பிறப்பிடம்

**அவ்வழி**
**ஆவி யிடைமை யிடமிட றாகும்**
**மேவுமென்மை மூக்கு உரம்பெறும் வன்மை (20)**

மேற்கூறிய வழியால் பிறக்குமிடத்து, உயிரெழுத்துக்கட்கும் இடையினத்திற்கும் இடம் கழுத்தாகும். மெல்லினம் மூக்கினிடமாகப் பொருந்தும். வல்லினம் மார்பினிடமாகப் பொருந்தும்.

### முதலெழுத்துக்கட்கு முயற்சி வகையாற் பிறப்பு

**அவற்றுள்**
**முயற்சியுள் அ ஆ அங்காப்புடைய (21)**

மேல் இடம் வகுக்கப்பட்ட முதலெழுத்துக்களுள், அ ஆ இரண்டும் முன் சொன்ன நால்வகை முயற்சிகளுள் அங்காத்தலை உடையன வாய்ப்பிறக்கும்.

**இஈ எஏ ஐ அங் காப்போடு**
**அண்பல் முதல்நா விளிம்புற வருமே (22)**

இ, ஈ, எ, ஏ, ஐ இவ்வைந்தும் வாய்திறத்தலுடனே மேல்வாய்ப் பல்லை அடிநாக்கினது ஓரமானது பொருந்த பிறக்கும்.

**உ, ஊ, ஒ, ஓ, ஔ இதழ் குவிவே (23)**

உ, ஊ, ஒ, ஓ, ஔ இவிவைந்தும் இதழ் குவிதலினால் பிறக்கும்.

**கஙவுஞ் சஞவும் டணவு முதலிடை**
**நுனிநா வண்ண முறமுறை வருமே (24)**

ககரமும் ஙகரமும் சகரமும் ஞகரமும், டகரமும் ணகரமும் முறையே நாக்கின் அடியும் நடுவும் கடையும் மேல்வாயின் அடியையும் நடு வையும் கடையையும் பொருந்தப் பிறக்கும்.

**அண்பல் லடிநா முடியுறத் தந வரும் (25)**

மேல்வாய் பல்லின் அடியை நாக்கு நுனி பொருந்த தகரமும் நகரமும் பிறக்கும்.

**மீகீ ழிதழுறப் பம்மப் பிறக்கும் (26)**

மேலுதடும் கீழுதடும் பொருந்தப் பகரமும் மகரமும் பிறக்கும்

**அடிநா வடியண முறயத் தோன்றும் (27)**

நாக்கினடியானது மேல்வாயடியைப் பொருந்த யகரம் பிறக்கும்

**அண்ண நுனிநா வருட ரழவரும் (28)**

மேல்வாயை நாக்கின் நுனியானது தடவ ராகமும் ழகரமும் பிறக்கும்.

**அண்பல் முதலு மண்ணமு முறையின்**
**நாவிளிம்பு வீங்கி யொற்றவும் வருடவும்**
**லகார ளகாரமா யிரண்டும் பிறக்கும் (29)**

மேல்வாய்ப்பல்லின் அடியையும், மேல்வாயையும், முறையே நாவின் ஓரமானது தடித்துப் பொருந்தவும் தடவவும் லகாரமும் ளகாரமும் பிறக்கும்.

**மேற்பல் லிதழுற மேவிடும் வவ்வே (30)**

மேல்வாய்ப் பல்லோடு கீழுதடு பொருந்த வகரமானது பிறக்கும்

**அண்ண நுனினா நனியுறில் றனவரும் (31)**

மேல்வாயை நாக்குநுனி மிகப்பொருந்தின் றகரமும் னகரமும் பிறக்கும்.

**சார்பெழுத்து இடமும் முயற்சியும்**

**ஆய்தக் கிடந்தலை யங்கா முயற்சி**
**சார்பெழுத் தேனவுத் தம்முத லனைய (32)**

ஆய்வெழுத்துக்குப் பிறப்பிடம் தலையாம், முயற்சி வாயைத் திறந்த ஆய்தம் நீங்கலான மற்றைச் சார்பெழுத்துக்களும் இடமுயற்சி வகைகளினால் தம்தம் முதலெழுத்துக்களை ஒப்பனவாம்.

**பிறப்புக்கு புறநடை**

**எடுத்தல் படுத்தல் நலித லுழப்பின்**
**திரிபுந்த தத்தமிற் சிறிதுள வாகும் (33)**

பலவெழுத்திற்குப் பிறப்பு ஒன்றாகச் சொல்லப்பட்டனவாயினும், உயர்த்தி உச்சரித்தாலும், தாழ்த்தி உச்சரித்தாலும், நடுத்தரமாக உச்சரித்தலும் ஆகிய எழுத்திற்கு உரிய ஒலி முயற்சி வகையினால் ஒன்றற்கு ஒன்று பிறப்பு வேறுபாடுகளும் அவ்வற்றுள் சிறிது சிறிது உளவாம்.

**உயிர்மெய் 216**

**புள்ளிவிட் டவ்வொடு முன்னுரு வாகியும்**
**ஏனை யுயிரோ டுருவு திரிந்தும்**
**பெயரொடு மொற்றுமுன் னாய்வரு முயிர்மெய் (34)**

மெய் அகரவுயிரோடு கூடியபொழுது, புள்ளியைவிட்டு அவ்விட்டவடிவே வடிவாகியும், ஆமுதலிய மற்றை உயிர்களோடு கூடிய பொழுது புள்ளிவிடுதல் மாத்திரமேயன்றி வடிவு வேறுபட்டும், உயிர்மாத்திரையே மாத்திரையாய், வரிவடிவில் உயிரின் வடிவை ஒழித்து மெய்யெழுத்து விகாரப்பட்ட வடிவே வடிவாய், உயிரும் மெய்யும் ஆகிய இரண்டிடத்தும் பிறந்த உயிர்மெய் என்னும் பெயருடனே மெய்யினொலி முன்னும் உயிரினொலி பின்னுமாகி உயிர்மெய்யெழுத்து வரும்.

பன்னிரண்டு உயிரும் பதினெட்டு மெய்யின் மேலும் தனித்தனி ஏறிவருதலால், உயிர்மெய் இருநூற்றுப் பதினாறாம் க்+அ=க க்+ஆ=கா முதலியன.

**முற்றாய்தம் 8**

**குறியதன் முன்ன ராய்தப் புள்ளி**
**உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே (35)**

மூன்று புள்ளி வடிவாகிய ஆய்தவெழுத்தானது குற்றெழுத்தின் முன்னதாய், உயிரோடு கூடிய வல்லெழுத்தாறனுள் ஒன்றன் மேலதாகியே வரும்

(உம்) எ∴கு, க∴சு, ஒன்ப∴து, ப∴றி

## 5. உருவம்

**தொல்லை வடிவின வெல்லா வெழுத்து மாண்டு**
**எய்து மெகர வொகர மெய் புள்ளி (36)**

எல்லா எழுத்துக்களும் பல்வேறு வகைப்பட்ட எழுதி வழங்கும் பழைய வடிவையுடையனவாம். அவ்வாறு வழங்குமிடத்து எகர உயிரும், ஒகரவுயிரும், மெய்களும் புள்ளியைப் பெறும்.

(உ-ம்) எ ஒ க்ங்ச்ஞ்ட்ண்த்ந்ப்ம்ய்ர்ல்வ்ழ்ள்ற்ன்.

என வரும். எகர ஒகரங்களைப் புள்ளிட்டெழுதுதல் இக்காலத்தல் இல்லை.

## 6. மாத்திரை

### எழுத்துக்களின் மாத்திரை

**மூன்று உயிரளபு இரண்டாம் நெடில் ஒன்றே**
**குறிலோடு ஐஔக் குறுக்கம் ஒற்றளபு**
**அரை ஒற்று இஉக் குறுக்கம் ஆய்தம்**
**கால் குறள் ம.்.கான் ஆய்தம் மாத்திரை (37)**

மாத்திரை உயிரளபெடைக்கு மூன்றாகும், நெட்டெழுத்திற்கு இரண்டாகும், குற்றெழுத்திற்கும், ஐகாரக்குறுக்கத்திற்கும், ஔகாரக்குறுக்கத்திற்கும், ஒற்றளபெடைக்கும், தனித்தனியே ஒன்றாகும். மெய்யெழுத்திற்கும், குற்றியலிகரத்திற்கும் குற்றியலுகரத்திற்கும் முற்றாய்தத்திற்கும் தனித்தனியே அரையாகும். மகரக்குறுக்கத்திற்கும் ஆய்தக் குறுக்கத்திற்கும் காலாகும்.

### மாத்திரை இன்னதென்பது

**இயல்பெழு மாந்த ரிமைநொடி மாத்திரை (38)**

மனிதருடைய இயற்கையாய் உண்டாகின்ற கண்ணிமைப்பொழுதும் கைநொடிப் பொழுதும் தனித்தனி ஒரு மாத்திரை என்னும் காலவரையறைப் பொழுதாம்.

### மாத்திரைக்குச் சிறப்புவிதி

**ஆவியு மொற்று மளவிறந் திசைத்தலும்**
**மேவு மிசைவிளி பண்டமாற் றாதியின் (39)**

இராகமும், அழைத்தலும், பண்டமாற்றலும் முதலானவிடத்து உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் முன் குறிப்பிட்ட அளவைக்கடந்து அதிகமாக ஒலித்தலையும் பொருந்தும்.

## 7. முதல் நிலை

### மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்

**பன்னீ ருயிரும் கசதந பமவய**
**ஞஙவீ ரைந்துயிர் மெய்யு மொழிமுதல் (40)**

பன்னிரெண்டு உயிரெழுத்துக்களும், கசதநபமவயஞங என்னும் பத்து உயிர் மெய்யெழுத்துக்களும் சொல்லுக்கு முதலாகும்.

(உ-ம்) அடை, ஆடை, இடை, ஈடு, உடை, ஊக்கம், எடு, ஏடு, ஐயம், ஒன்று, ஓடு, ஔவை எனவும்

களி, சற்று, தளிர், நலம், படை, மலை, வளம், யவனர், ஞமலி, அங்ஙனம் எனவும் வரும்.

**வகரத்துச் சிறப்புவிதி**

**உ ஊ ஒ ஓ வலவொடு வம்முதல் (41)**

உ ஊ ஒ ஓ இந்நான்கு மல்லாத எட்டு உயிரோடும் கூடிய வகர மெய் சொல்லுக்கு முதலாகும்.

வண்டு, வாழை, வினை, வீடு, வெளி, வேழம், வையம், வௌவால்.

**யகரத்துச் சிறப்புவிதி**

**அ ஆ உ ஊ ஒ ஔ யம்முதல (42)**

அ ஆ உ ஊ ஒ ஔ இந்த ஆறு உயிரோடும் கூடிய முதல் யகர மெய் சொல்லுக்கு முதலாகும்.

(உ-ம்) யவனர், யானை, யுகம், யூதம், யோகம், யௌவளம் (யூதம்-கூட்டம்)

**ஞகரத்துச் சிறப்புவிதி**

**அ ஆ எ ஒவ்வொ டாகு ஞம்முதல் (43)**

அ ஆ எ ஒவ்வொரு இந்நான்கு உயிரோடும் கூடி ஞகரமெய் சொல்லுக்கு முதலாகும்.

(உ-ம்) ஞமலி-நாய், ஞாலம்-உலகம் ஞெகிழி-கொள்ளிக்கட்டை, ஞொள்கல் (இளைத்தல்)

**ஙகரத்திற்குச் சிறப்புவிதி**

**சுட்டியா வெகர வினாவழி யவ்வை**
**ஒட்டி ஙவ்வு முதலா கும்மே (44)**

மூன்று சுட்டும், யாவினாவும் எகரவினாவும் ஆகிய ஐந்தனுடைய பின்னே, அகரத்தைச் சேர்ந்து, ஙகரமெய்யும் சொல்லுக்கு முதலாம்.

(உ-ம்) அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம் முதலாகும் என்ற பத்து உயிர்மெய்யுள் வகரம் முதலிய நான்கையும் எடுத்துச் சிறப்புவிதி கூறவே, மற்றைய கசதநபம என்றும் ஆறு மெய்களும் பன்னிரண்டு உயிரோடுங் கூடி மொழிக்கு முதலாகும்.

(உ.ம்)

கனி, காய், கிளி, கீரை, குடம், கூடு, கெண்டை, கேள்கைதை, கொடை, கோடு, கௌவை;

சமர், சாந்து, சிறுமை, சீர், சுரை, சூது, செக்கு, சேவல், சையம், சொல், சோறு, சௌகரியம்;

தந்தை, தாய், தினை, தீமை, துணி, தூது, தெற்கு, தேன், தையல், தொண்டை, தோடு, தௌவை;

நன்மை, நாடு, நிலம், நீர், நுனி, நூல், நெஞ்சு, நேர், நைதல், நொச்சி, நோக்கம், நௌவி;

படை, பால், பிடி, பீடு, புகழ், பூண்டு, பெடை, பேடு, பைதல், பொன், போர், பௌவம்;

மனை, மாலை, மின்னல், மீன், முனை, மூப்பு, மெலிவு, மேனி, மையல், மொழி, மோடு, மௌவல்;

## 8. ஈற்றுநிலை

**மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள்**

**ஆவி ஞன நமன யரலவ ழள மெய்**
**சாயு முகர நாலாறு மீறே (45)**

தனித்தும் மெய்யோடு கூடியும் வரும் பன்னிரண்டு உயிர்களும் ஞணநமன யரல வழள இப்பதினொரு மெய்களும் குற்றியலுகரமும் ஆகிய இருபத்து நான்கு எழுத்துக்களும் மொழிக்கு இறுதியாகும்.

(உ.ம்) அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ எனவும் விள, பலா, களி, தீ, விடு, பூ, சே, ஏ, தே, பனை, நொ, போ, வெள எனவும்.

உரிஞ், மண், பெருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், புகழ், வாள், அஃது எனவும் வரும்.

(அ-பசு, ஊ-மாமிசம், ஏ-அம்பு, ஐ-அழகு, ஒ-ஒத்தல், ஓ-மதகு-நீர் தாங்கும் பலகை, ஔ-பற்றுதல் அல்லது அவை, சே-எருது, தே-தெய்வம், நொ-வருந்து, உரிஞ்-உராய்தல், பொருந்-பொருந்துதல் அல்லது ஒருவகைப்பாட்டு, வேய்-மூங்கில், தெவ்-பகை)

**சிலவற்றுக்குச் சிறப்புவிதி**

**குற்றுயி ரளவி னீறா மெகரம்**
**மெய்யோடே லாதொந் நவ்வொ டாமௌக்**
**ககர வகரமோ டாகு மென்ப (46)**

அ இ உ எ ஒ என்கின்ற உயிர்க்குற்றெழுத்துக்கள் ஒரெழுத்தொருமொழியாய் ஈறாதலன்றி அளபெடையிலும் வரிவடிவில் அறிகுறியாகத் தனித்து ஈறாகும். எகரம் மெய்யோடு கூடி ஈறாகாது. ஒகரம் நகரமெய் யொற்றுடனே கூடி ஈறாகும். ஔகரம் ககர வகரமெய்களிரண்டுடன் கூடி ஈறாகும் என்பர் அறிவுடையோர்.

(உம்) பலாஅ, தீஇ, பூஉ, சேஎ, கைஇ, கோஒ, கௌஉ எனவும் நொ, கௌ, வௌ எனவும் வரும். (கௌ-வாயினாற் பற்று, வௌ-கொள்ளையிடு)

**உயிர்மெய்க்கு முதலும் ஈறும்**

**நின்ற நெறியே யுயிர்மெய் முதலீறே (47)**

மெய் முன்னும் உயிர்பின்னுமாக ஒலித்து நின்றவழியே உயிர்மெய்க்கும், மெய் முதலாகும் உயிர் ஈறாகும்.

எனவே உயிரும் மெய்யும் உயிர்மெய்யொழிந்த ஆய்தம் முதலிய ஒன்பது சார்பெழுத்துக்களும் ஓரெழுத்தாகையால் அவற்றுக்கு முதலும் ஈறும் அவையேயாமென்பது பெறப்படும்.

## 9. இடைநிலை

**மொழிக்கு இடையில் வரும் எழுத்துக்கள்**

**கசதப வொழித்த வீரேழன் கூட்டம்**
**மெய்ம்மயக் குடனிலை ரழவொழித் தீரெட்டு**
**ஆகுமிவ் விருபால் மயக்கு மொழியிடை**
**மேவு முயிர்மெய்ம் மயக்கள வின்றே (48)**

பதினெண் மெய்களில் கசதப என்னும் நான்கையும் நீக்கிய மற்றைப் பதினான்கு மெய்களும் பிறமெய்களோடு கூடுங்கூட்டம் வேற்றுநிலை மெய்ம்மயக்கமாகும். ர ழ என்னும் இரண்டையும் நீக்கி மற்றைப் பதினாறு மெய்களும் தம்மொடு கூடுங்கூட்டம் உடனிலை மெய்ம்மயக்கமாகும். இவ்விரண்டு வகை மயக்கமும் ஒருமொழிக்கு நடுவிலும் தொடர்மொழிக்கு நடுவிலும் வரும். உயிரும் மெய்யும் மெய்யுடன் உயிரும் மாறி மயங்கும் மயக்கத்திற்கு அளவில்லை; வேண்டியவாறு மயங்கும்.

இந்நூற்பாவால் மெய்யுடன் மெய்மயங்கும் பொழுது கசதப என்னும் நான்கும் பிறமெய்யோடு மயங்காவாத் தம்மொடு தாமே மயங்குமென்பதும், ர ழ என்னுமிரண்டும்

தம்மொடுதாம் மயங்காவாய்த் தம்மொடு பிறவே மயங்கும் என்பதும், மற்றைப் பன்னிரண்டு மெய்களும் தம்மொடு தாமும் பிறவும் மயங்கும் என்பதும் பெறப்படும்.

உயிரும் மெய்யும் மயங்குவதற்கு உதாரணம் - அல், புள் என உயிருடன் மெய் மயங்கின. கா, பூ என மெய்யுடன் உயிர்மயங்கின. மெய்யுடன் மெய்மயங்குவதற்கு உதாரணம் பின்வரும் நூற்பாக்களால் உணரலாம்.

**வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்குச் சிறப்புவிதி**

**ஙம்முன கவ்வாம் வவ்முன் யவ்வே (49)**

ஙகர மெய்யின் முன் ககரமும், வகர மெய்யின்முன் யகரமும் மயங்கும்.

(உம்) பங்கு, தெவ்யாது

**ஞ ந முன் தம்மினம் யகரமொ டாகும் (50)**

ஞகர நகர மெய்களின் முன் அவற்றுக்கு இனமாகிய சகர தகரங்களும், யகரமும், மயங்கும்.

ஞகர மெய்யின்முன் சகரமும் யகரமும் நகரமெய்யின் முன் தகரமும் யகரமும் மயங்குமென்பர்.

(உம்) பஞ்சு, உரிஞ்யாது, பந்து, பொருந்யாது.

**டறமுன் கசப மெய்யுடன் மயங்கும் (51)**

டகர றகர மெய்களின் முன் கசப என்கின்ற மூன்று மெய்களும் கூடி மயங்கும்.

(உம்) வெட்கம், மாட்சி, திட்பம், கற்க, பயிற்சி, கற்பு

**ணனமுன் னினங் கச ஞபமய வவ்வரும் (52)**

ணகர னகர மெய்களின் முன் அவற்றிற்கு இனமாகிய டகர றகரங்களும், கசஞபமயவ இவ்வேழு மெய்களும் மயங்கும். ணகரமெய்யின்முன் டகரமும், கசஞபமய வக்களும் னகர மெய்யின்முன் றகரமும் கசஞபமய வக்களும் மயங்கும்.

(உம்) விண்டு, எண்கு, வெண்சோறு, வெண்ஞமலி, பண்பு வெண்மை, மண்யாது, மண்வலிது, கன்று, புன்கு, நன்செய், புன்ஞமலி, இன்பம், நன்மை, பொன்யாது, பொன்வலிது.

**மம்முன் பயவ மயங்கு மென்ப (53)**

மகர மெய்யின்முன் பயவ இம்மூன்று மெய்களும் இணங்கும் என்று சொல்வர்.

(உம்) நம்பன், கலம்யாது, கலம்வலிது

**யரழ முன்னர் மொழிமுதன் மெய்வரும் (54)**

யரழ இம்மூன்று மெய்களின் முன் மொழிக்கு முதலாமென்ற பத்து மெய்களும் மயங்கும்.

(உ.ம்) பொய்கை, கொய்சகம், எய்து, செய்நர், ஆய்பு, சேய்மை, ஆய்வு-பாய்நெகிழி, சேர்க, வார்சிலை, ஒர்தும் சேர் நர், மார்பு, சீர்மை, ஆர்வம், போர்யானை, நேர் ஞெகிழி, மூழ்கி, வீழ்சிலை, வாழ்தல், வாழ்நன், சூழ்ப, கீழ்மை, வாழ்வு, வீழ்யானை, வாழ்நண்டு.

வேய்ங்குழல், ஆர்ங்கோடு, பாழ்ங்கிணறு என யரழ ஒற்றின் முன் ஙகரம் தனிமெய்யாய் மயங்குதல் மேல் யரழவொற்று என்னும் நூற்பாவால் பெறப்படும்.

**லளமுன் கசப வய வொன் றும்மே (55)**

லகர ளகர மெய்களின் முன் கசபவய இவ்வைந்து மெய்களும் மயங்கும்.

(உ.ம்) நல்கி, வல்சி, சால்பு, செல்வம், கல்யாணம், வெள்கி நீள்சிலை, கொள்ப, வேள்வி, வெள்யானை.

**உடனிலை மெய்ம்மயக்கத்திற்குச் சிறப்புவிதி**

**ரழவல்லன தம்முற் றாமுட னிலையும் (56)**

ரகர ழகரமல்லாத மற்றைப் பதினாறு மெய்களும், தமக்குமுன் தாமே வந்து உடன்நின்று மயங்கும்.

உடனிலை மெய்ம்மயக்கமாவது தனக்கு முன் தான்மயங்குதல் என்ற இலக்கணம் இங்கு விளக்கப்பட்டது.

(உ.ம்) சுக்கு, அங்ஙனம், அச்சம், மஞ்ஞை, பட்டு. திண்ணம், பத்து, வெந்நீர், அப்பன், அம்மை, மெய்யன், அல்லி, தெவ்வர், பள்ளம், காற்று, அன்னை.

**தனிமெய்யுடனே தனிமெய்யாய் மயங்குவனவும்**

**மொழிக்கு உறுப்பாக மயங்காதனவும்**

**யரழவொற் றின்முன் கசதபஙஞநம**
**ஈரொற் றாம்ரழத் தனிக்குறி லணையா (57)**

யரக என்னும் மூன்று மெய்களின் முன்னே கசதபஙஞநம இவ்வெட்டு மெய்களும், உயிர்மெய்யாகி மயங்குதலும் அல்லாமல் தாமும் மெய்யாய் நின்று இரண்டு ஒற்றாயும் மயங்கும், ரகழ ழகர மெய்கள், மொழிக்கு உறுப்பாகாத் தனிக்குற்றெழுத்தின் பின்னே வந்து மயங்காவாம்.

(உ.ம்)

காய்க்க, ஈர்க்கு, வாழ்க்கை;

பாய்ச்சினான், உணர்ச்சி, சூழ்ச்சி;

தேய்த்தல், போர்த்தல், வாழ்த்தினான்;

வாய்ப்பு, கூர்ப்பு, காழ்ப்பு;

வேய்ங்குழல், ஆங்கோடு, பாழ்ங்கிணறு;

தேய்ஞ்சது, கூர்ஞ்சிறை, பாழ்ஞ்சுனை;

காய்ந்தனம், நேர்ந்தனம், வாழ்ந்தனம்;

மெய்ம்பு, ஈர்ம்பனை, பாழ்ம்பதி.

'அணையா' என்ற ரழக்களுக்கு உதாரணம் காட்டலாகாமை உணர்தல் வேண்டும்.

**செய்யுளில் ஈரொற்றாய் நிற்கும் எழுத்துக்கள்**

**லளமெய் திரிந்த னணமுன் மகாரம்**
**நைந்தீ ரொற்றாஞ் செய்யு ளெள்ளே (58)**

பாட்டினுள் லகார மெய்கள் திரிந்த னகார ணகார மெய்களின் முன் வருகின்ற மகரமெய்யானது முன் சொன்னவாறு குறுகி அந்த மெய்களுடனே ஈரொற்று மயக்கமாம்.

(உம்) "திசையறி மீகானும் போன்ம்"
"மயிலியின் மாதர் மருண்ம்"

**முதனிலை இறுதிநிலை இடைநிலைகட்குப் புறநடை**

**தம்பெயர் மொழியின் முதலும் மயக்கமும்**
**இம்முறை மாறியு மியலு மென்ப (59)**

எழுத்துக்களின் பெயர்களைச் சொல்லுமிடத்து மொழிமுதலில் நிற்றலும் மொழியிடையே நிற்றலும் முன்பு சொன்ன இலக்கணம் பிறழ்ந்தும் வரும் என்று சொல்வர் அறிவுடையோர்.

எனவே எழுத்துக்கள் வேறுபொருள் குறியாமல் தம்மையே குறித்து நிலைமொழிகளாய்ப் புணருமிடத்து, மொழி முதற்கு விதித்தனவும் விலக்கியனவுமாகிய எல்லாவெழுத்துக்களும் இடைநின்று மயங்குமென்பதும் ஆயிற்று. இப்படி எல்லா எழுத்துக்களும் தனித்தனி அதற்கு அதுவே முதலாமெனவே ஈற்றிற்கு விதிக்கப்பட்டவும் விலக்கப்பட்டனவுமாகிய எல்லா எழுத்துக்களும் தனித்தனி அதற்கு அதுவே ஈறாமெனத் தானே விளங்குதலின் ஈறும் என மிகைபடக் கூறாமல் விட்டார்.

(உம்) அவற்றுள் லள.்.கான் முன்னா் யவவுந் தோன்றும் இதில் லகரமானது முதலாகியும் அவற்றுள் என்றதன் இறுதியிலே நின்ற ளகரமெய்யோடு மயங்கியும் வந்தது. கெப்பெரிது இதில் எகரம் மெய்யோடு, ஈறாய் வந்தது.

## 10. போலி

**இறுதிப்போலி**

**மகர விறுதி ய.்.றிணைப் பெயரின்**
**னகரமோ டுறழா நடப்பன வுளவே (60)**

பால்பகாவ.்.றிணைப் பெயர்களிடத்து ஈற்றிலே நின்ற மகரமெய் னகரமெய்யோடு ஒத்து நடப்பவை உண்டு. அது போலி எனப்படும்.

(உம்) அகம்-அகன், கலம்-கலன், நிலம்-நிலன், போலியானது ஒரு சொல்லில் ஓரெழுத்து உள்ளவிடத்தில் அவ்வெழுத்தக்க ஈடாக வேறோர் எழுத்து நின்றாலும் பொருள் வேறுபடாமல் ஒத்திருப்பது. போலி போல நிற்பது. அது மொழியின் முதல் இடை கடை என மூவகைப்படும்.

முதற்போலி இடைப்போலிகளின் பின் முறையே சொல்ல வேண்டிய இவ்விறுதிப்போலியை முன்னே சொன்னதால்.

சுரும்பு-சுரும்பர், வண்டு-வண்டர், சிறகு-சிறகர், இடக்கு-இடக்கர், வெற்பு-வெற்பர் எனச்சில குற்றியலிகரப் பெயரினிறுதி உகரத்திற்கு அர் என்பது போலியாயல் வருதலும், பந்தல்-பந்தர், சாம்பல்-சாம்பர், குடல்-குடர் எனச் சில பெயரினிறுதி லகரமெய்க்கு ரகரமெய் போலியாய் வருதலும், திறம்-திறல், மறம்-மறல், பக்கம்-பக்கல், கூவல்-கூவம் எனச் சில பெயரினிறுதி மகரமெய்க்கு லகரமெய் போலியாய் வருதலும், மதில்-மதிள் எனச் சிறுபான்மை லகரத்துக்கு ளகரம் போலியாய் வருதலும் அமையும்.

**முதற்போலியும் இடைப்போலியும்**

**அ இ முதலிடை யொக்குஞ் சஞயமுன் (61)**

அகரமும் ஐகாரமும் சொல்லுக்கு முதலிலும் நடுவிலும் சகரஞகர யகரங்களுக்கு முன் தம்முன் வேறுபாடில்லாமல் போலியாய் வரும்.

(உம்)

| **முதற்போலி** | **இடைப்போலி** |
|---|---|
| பசல் - பைசல் | அரசு - அரைசு |
| மஞ்சு - மைஞ்சு | இலஞ்சி - இலைஞ்சி |
| மயல் - மையல் | அரயர் - அரையர் |

அ ஐ ஒக்கும் எனப் பொதுப்படக் கூறியவதனால், வைச்ச-வச்ச ஐஞ்சு, அஞ்சு, பைய பய எனச் சகர ஞகர யகரங்களின் முன் ஐகாரத்துக்கு அகரம் போலியாய் வருதலும் கொள்க.

**இடைப்போலி**

**ஐகான் யல்விழி நவ்வொடு சில்வழி**
**ஞ.்கா நுறழு மென்மரு முளரே (62)**

சொல்லுக்கு நடுவில் சிலவிடத்து ஐகாரத்தின் பின்னும் யகர மெய்யின் பின்னும் நகர மெய்யோடு ஞகரமெய் போலியாய் வரும்.

(உ.ம்)

மைந்நின்ற - மைஞ்நின்ற

கைந்நின்ற - கைஞ்நின்ற

ஐந்நூறு - ஐந்நூறு

செய்ந்நின்று - செய்ஞ்ஞின்ற

சேய்தலூர் - சேய்ஞலூர் - வழக்கு

இனி உரையின் வழியாய் நயம்-ஞயம், நாஞ்சில் - ஞாஞ்சில், நேயம்-ஞேயம் என மொழிமுதல் நகரத்திற்கு ஒகரமும், ஒண்டு ஞெண்டு என மொழிமுதல் அகரத்துக்கு எகரமும் போலியாய் வரும்.

ஐந்து – அஞ்சி, உய்ந்தனன் - உய்ஞ்சனன் நகர தகரங்கட்கு ஞகர சகரங்களும்.

பித்து – பிச்சு, வைத்த – வைச்ச எனத் தகரத்துக்கு சகரம் போலியாய் வருதலும், நேயம் - நேசம், கயம்-கசம் என யகரத்துக்கு சகரம் போலியாய் வருதலும் உணர்தல் வேண்டும்.

**எழுத்துக்களுக்குப் புறனடை**

**சந்தியக்கரம்**

**அம்மு னிகரம் யகர மென்றிவை**
**எய்தி னையொத் திசைக்கு மவ்வொடு**
**உவ்வும் வவ்வும் ஔவோ ரன்ன (63)**

அகரத்தின்முன் இகரமும், யகர மெய்யும் என்று சொல்லப்பட்ட இவை தம்முன் ஒத்துக் பொருந்தினால் ஐ என்னும் நெட்டெழுத்து ஒலிக்கும், அகரத்தோடு உகரமும்

வகரமெய்யும் தம்முன் ஒத்து ஒரு தன்மையனவாகப் பொருந்தினால் ஔ என்னும் நெட்டெழுத்து ஒலிக்கும்.

யகர வகரமெய் நடுவிற் கலக்குமெனக் கொள்க. அய்இ-ஐ அவ்உ-ஔ சில எழுத்துக்கள் கூடி வேறோரெழுத்துப் போன்று ஒலித்தலாதலால் இதனைப் போலியைச் சார வைத்தார்.

அகரத்தின்முன் இகரமும் யகரமெய்யும் என்கின்ற இவ்வெழுத்துக்கள் வருமாயின் ஐகாரத்தை ஒத்து நடக்கும். அகரத்தின் முன், உகரமும் வகரமெய்யும் வருமாயின் ஔகாரத்தை ஒத்து நடக்கும்.

யகர வகரங்கள் தனித்தும் வரும்.

(உ_ம்)

| | | |
|---|---|---|
| வைத்தியன் | - | வயித்தியன் |
| கைடபன் | - | கையீடபன் எனவும் |
| வையம் | - | வய்யம் |
| ஐவனம் | - | அய்வனம் எனவும் |
| பௌத்தர் | - | பவுத்தர் |
| கௌரி | - | கவுரி எனவும் |
| ஔவை | - | அவ்வை |
| வௌவுதல் | - | வவ்வுதல் எனவும் வரும். |

**எழுத்தின் சாரியைகள்**

**மெய்க ளகரமும் நெட்டு யிர் காரமும்**
**ஐயெனக் கானு மிருமைக் குறிலில்**
**விரண்டொடு காரமுமாஞ் சாரியை பெறும் (64)**

தனி மெய்கள் அ என்னும் சாரியையும், உயிர்நெடிகள் காரம் என்னும் சாரியையும், ஐகார, ஔகாரங்கள் காரம் என்னும் சாரியையுடன் கான் என்னும் சாரியையும், உயிர்க்குறிலும் உயிர்மெய்க் குறிலும் காரம் கான் என்னும் இவ்விரண்டுடன் கரம் என்னும் சாரியையும் ஆகின்ற சாரியைகளைப் பெறும்.

**எழுத்தியலுக்குப் புறநடை**

**மொழியாய்த் தொடரிலு முன்னனைத் தெழுத்தே (65)**

இவ்வெழுத்துக்கள் பதமாயினும், அப்பதம் தம்மொடும் உருபோடும் புணர்ந்தாலும் முன் சொல்லப்பட்ட அப்பத்திலக்கணத்தையும் உடையனவாம்.

பாடம்-4

# 2. பதவியல்

எழுத்தின் புறத்திலக்கணம் இரண்டில் பதத்தின் இலக்கணத்தைச் சொல்லும் இயல், இவ்வியலுக்கு ஆதாரம் பெரும்பாலும் வடமொழியாதலால் பதவியல் எனப் பெயரிட்டார் நன்னூலார்.

இவ்வியலில் பதம் இன்னதென்பதும் அதன் வகையும், ஓரெழுத்தொருமொழி தொடரெழுத்துமொழிகள், பகாப்பதம், பகுபதம், பகுபதஉறுப்பு, பகுதி, விகுதி, இடைநிலை, வடமொழி யாக்கம் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.

**பதம் இன்னதென்பதும் அதன் வகையும்**

**எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருள்தரின்**
**பதமா மதுபகாப்ப பதம்பகு பதமென**
**இருபா லாகி யியலு மென்ப (1)**

எழுத்துக்கள் தாமே ஒவ்வொன்றாகத் தனித்தாயினும், இரண்டு முதலாகத் தொடர்ந்தேயாயினும் பொருளைத் தருமாயின் அது பதமாகும். அப்பதம் பகாப்பதமென்றும் பகுபதமென்றும் இருவகையாய் அமையும் என்பர் புலவர்.

பகாப்பதம் - பிரிக்கக் கூடாத பதம்.

**ஓரெழுத்து மொழிகள்**

**உயிர்மலி லாறுந் தபநவி லைந்தும்**
**கவசலி னாலும் யவ்வி லொன்றும்**
**ஆகு நெடில்நொது வாங்குறி விரண்டோடு**
**ஓரெழுத் தியல்பத மாறேழ் சிறப்பின (2)**

உயிர் வருக்கத்திலும் மவ்வருக்கத்திலும் அவ்வாறும், தவ்வருக்கத்திலும் பவ்வருக்கத்திலும் நவ்வருக்கத்திலும் ஐயைந்தும், கவ்வருக்கத்திலும் எவ்வருக்கத்திலும் சவ்வருக்கத்திலும் நந்நான்கும், யவ்வருக்கத்தில் ஒன்றும் ஆகும். நெட்டெழுத்தாகிய மொழி நாற்பதும் நொவ்வும் துவ்வுமாகும். குற்றெழுத்தாகிய மொழி இரண்டுடனே ஓரெழுத்தாகிய மொழிகள் நாற்பத்திரண்டும் சிறப்புடையனவாம்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ எனவும், மா, மீ, மு, மே, மை, மோ எனவும், தா, தீ, தூ, தே, தை எனவும், பா, பூ, பே, பை, போ எனவும், நா, நீ, நே, நை, நோ எனவும், கா, கூ, கை, கோ எனவும், வா, வே, வை, வெள எனவும், சா, சீ, சே, சோ எனவும், யா எனவும், நொ, து எனவும் வரும்.

**தொடரெழுத்து மொழிகள்**

**பகாப்பத மேழும் பகுபத மொன்பதும்**
**எழுத்தீ றாகத் தொடரு மென்ப (3)**

பகாப்பதங்கள் இரண்டெழுத்து முதல் ஏரெழுத்துக்களும், பகுபதங்கள் இரண்டெழுத்து முதல் ஒன்பது எழுத்துக்களும் எல்லையாகத் தொடரும் என்று சொல்வர்.

(உம்) அணி, கலம், பொருப்பு, இறும்பூது, குங்கிலியம்,

உத்திரட்டாதி எனப் பகாப்பதமும்;

கூனி, கூனன், அறிஞன், பொருப்பன் அம்பலவன்,

அரங்கத்தான், உத்திராட்டத்தான், உத்திரட்டாதியான்

எனப் பகுபதமும் வரும்.

**பகாப்பதம்**

**பகுப்பாற் பயனற் றிடுகுறி யாகி**
**முன்னே யொன்றாய் முடிந்தியல் கின்ற**
**பெயர்வினை இடையுரி நான்கும் பகாப்பதம் (3)**

பிரிக்கப்படுதலினாலே பகுதி விகுதி முதலிய பயனில்லாமல், காரணமில்லாமல் இடப்பட்ட குறியாய், அனாதிகாலமாய் ஒரே தன்மையனவாகி முடிந்து நடக்கின்ற, பெயர், வினை, இடை, உரி நான்கும் பகாப்பதங்களாகும்.

எனவே பகாப்பதம் நான்கு வகைப்படும்.

(உம்) கலம், சோறு, நெருப்பு, காற்று – பெயர்ப்பகாப்பதம்

நட, வா, உண், தின், பார் - வினைப்பகாப்பதம்

மன், கொல், போல், கற்று - இடைப்பகாப்பதம்

உறு, கழி, நனி, தவ, கூர் - உரிப்பகாப்பதம்

**பகுபதம்**

**பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழிலின்**
**வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே (4)**

பொருளும் இடமும் காலமும் உறுப்பும் குணமும் தொழிலும் ஆகிய இந்த ஆறு பெயர்களையும் அடியாகக் கொண்டு பிறக்கின்ற பெயர்ச்சொற்களும், தெரிநிலையாக வாயினுங் குறிப்பாகவாயினுங் காலத்தைக் கொள்ளுகின்ற

வினைச்சொற்களும் பகுப்பதங்களாம். எனவே பெயர் வினை எனப் பகுப்பதங்கள் இரண்டு வகைப்படும். இடைச்சொல்லிலும் உரிச்சொல்லிலும் பகுபதம் இல்லை.

பொழுதுகொள் வினைப்பகுபதம் எனவே தெரிநிலை குறிப்பு என்னும் இருவகை வினையாலனையும் பெயர்களும் பகுபதமா மென்பது பெறப்படும்.

(உ-ம்) பொன்னன் - பொருட்ப் பெயர்ப்பகுபதம்

நாடன் - இடப் பெயர்ப்பகுபதம்

திருவோணத்தான் - காலப் பெயர்ப்பகுபதம்

கண்ணன் - சினைப் பெயர்ப்பகுபதம்

கரியன் - குணப் பெயர்ப்பகுபதம்

தட்டான் - தொழிற் பெயர்ப்பகுபதம்

நடந்தான், நடந்த, நடந்து, நடவான் - தெரிநிலை வினைப்பகுபதம்

பொன்னன், பெரிய, மெல்ல, அல்லன் - குறிப்பு பகுபதம்

நடந்தான், நடந்தவன், நடவாதவன் - தெரிநலை வினையாலணையும் பெயர்

பொன்னன், பொன்னவன், இல்லாதவன் - குறிப்பு வினையாலணையும் பெயர்

1. பெயர்ப்பகுபதம் காலங்காட்டாமல் வேற்றுமை யுருமை ஏற்றுவரும்
   (உ-ம்) பொன்னனை (பொன்னையுடையவனை) வணங்கினான்
2. குறிப்புவினைமுற்றுப் பகுபதம் காலத்தைக் குறிப்பாகக் காட்டி வேற்றுமை யுருபை ஏலாது வரும்.
   (உ-ம்) இவன் இப்போது பொன்னன், பொன்னை யுடையவனாகயிருக்கிறான்.
3. குறிப்பு வினையாலணையும் பெயர்ப்பகுபதம் - காலத்தைக் குறிப்பாகக் காட்டி வேற்றுமை யுருபை ஏற்றுவரும்.
   (உ-ம்) பண்டு பொன்னனை முன்னே பொன்னை யுடையவனாயிருந்தவைனைப் பின்பு ஏழையாகக் கண்டேன்

1. தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம் - காலத்தை வெளிப்படையாகக் காட்டி வேற்றுமையுருபை ஏலாது வரும்.
   (உ-ம்) பொன்னன் நடந்தான்.
2. தெரிநிலை வினையாலணையும் பெயர்ப்பகுபதம் - காலத்தை வெளிப்படையாகக் காட்டி வேற்றுமையுருபை ஏற்றுவரும்.
   (உ-ம்) நடந்தானைத் தடுத்தேன் (இது நடந்தவன் என்று வரும்) இவையே இவ்விரண்டுக்கும் வேறுபாடாம்.

**பகுபத உறுப்பு**

**பகுதி விகுதி யிடைநிலை சாரியை**
**சந்தி விகார மாறினு மேற்பவை**
**முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும் (6)**

முதல்நிலையும், இறுதிநிலையும், இடைநிலையும், சாரியையும், சந்தியும் விகாரமும் ஆகிய ஆறு உறுப்பினுள்ளும், பொருளமைதிக்குப் பொருந்துபவைகளை நினைத்து அறிவுரையோர் கூட்டி முடிக்க எல்லாப் பகுபதங்களும் முடிவுபெறும்.

(உ.ம்) கூனி+கூன்+இ = எனப் பகுதி விகுதிகளால் முடிந்தது

வலைஞன் வலை+ஞ்+அன் = எனப் பகுதி இடைநிலை விகுதிகளால் முடிந்தது.

உண்டன் உண்+ட்+அன்+அன் =எனப் பகுதி இடைநிலை சாரியை விகுதிகளால் முடிந்தது

படித்தனன் படி+த்+த்+அன் எனப் பகுதி சந்தி இடைநிலை சாரியை விகுதிகளால் முடிந்தது.

நடந்தனன் நட+ந்+த்+அன்+அன் எனப் பகுதி, சந்தி, இடைநிலை, சாரியை விகுதி

இவ்வைந்தும் பெற்று சந்தியால் வந்த தகரவல்லொற்று மெல்லொற்றாதலாகி விகாரமும் பெற்று முடிந்தது.

இயற்கையாகப் பகுபதங்களின் முதலில் நிற்பது பகுதி என்றும் அவ்வாறு நிற்கும் பகுதியின் பொருளைப் பின் நின்று வேறுபடுத்துவது விகுதி என்றும், பகுதி விகுதிகளின் இடையில் நிற்பது இடைநிலை என்றும், பகுதி விகுதி முதலியவற்றைச் சார்ந்து இயைந்து வருவது சாரியையென்றும், புணர்ச்சி விதியாலுண்டாகின்ற தோன்றல் திரிதல் கெடுதல்கள் என்ற மூன்றும் சந்தி என்றும், செய்யுளிலக்கணத்துக்கு ஏற்ப வருகின்ற வலித்தல் முதலிய ஒன்பதும் விகரமென்றும் கொள்ளல் வேண்டும்.

**பகுதிக்குப் பொதுவிதி**

**தத்தம்**
**பகாப் பதங்களே பகுதி யாகும் (7)**

பெயர்ப் பகுபதங்களுள்ளும் வினைப் பகுப்பதங்களுள்ளும் அதன் தன் முதலில் நிற்கின்ற பகாப்பதமே பகுதியாம்.

(உ.ம்) பொன்ன, ஊரன், திருவோணத்தன், பல்லவன், கரியன், கூத்தன் எனப் பெயர்ப்பகுபதங்கட்கு முறையே பொருள் முதலிய அறுவகைப் பெயரும் பகுதியாய் வந்தன.

அவன், எவன், பிறன் எனப் பெயர்ப்பகுபதங்கட்கு இடைச்சொற்கள் பகுதியாய் வந்தன.

கடியன எனப் பெயர்ப்பகுபதத்திற்கு உரிச்சொல் பகுதியாய் வந்தது.

பெயர் பகுபதத்திற்குச் சிறுபான்மை வினையும் பகுதியாம் (உம்) அறிஞன்.

தெரிநிலைவினைப் பகுபதங்கட்குப் பெரும்பான்மை வினைச்சொற்களும் சிறுபான்மை பெயர்ச்சொல் இடைச்சொல் உரிச்சொற்களும் பகுதிகளாம். (உம்) நடந்தான், வந்தான் - வினைச்சொற்கள் பகுதியாய் வந்தன.

கடைக்கணித்தான், காதலித்தான் - பெயர்ச்சொற்கள் பகுதியாய் வந்தன

போன்றான், என்றான் - இடைச்சொற்கள் பகுதியாய் வந்தன

சான்றான், கூர்த்தான் - உரிச்சொற்கள் பகுதியாய் வந்தன.

**பாண்புப்பகுதிகட்குச் சிறப்புவிதி**

**செம்மை சிறுமை சேய்மை தீமை**
**வெம்மை புதுமை மென்மை மேன்மை**
**திண்மை யுண்மை நுண்மை யிவற்றெதிர்**
**இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே (8)**

செம்மை முதல் நுண்மை ஈறாகச் சொல்லப்பட்ட பதினொன்றும், இவைகட்கு எதிரான வெண்மை முதலானவைகளும், இவை போல்வன பிறவும் பண்புப் பொருளினின்றும் வேறுபொருள் பகுக்கப்படாத நிலையையுடைய பதங்களாகும்.

**பண்புப்பகுதியின் விகாரங்கள்**

**ஈறு போதல் இடையுகரம் இய்யாதல்**
**ஆதி நீடல் அடியகரம் ஐயாதல்**
**தன்னொற் றிரட்டல் முன்னின்ற மெய் திரிதல்**
**இனமிகல் இனையவும் பண்பிற் கியல்வே (9)**

இறுதியிலுள்ள மை விகுதி, போதலும், நடுவில் நின்ற உகரம் இகரமாதலும், முதலில் நின்ற குறில் நெடிலாதலும், முதலில் நின்ற அகரம் ஐகாரமாதலும், தன் பண்புப்பகுதியின் மெய்நடுவே மிகுதலும், மை விகுதிக்கு முன்னே நின்ற மெய் வேறொரு மெய்யாதலும், வருகின்ற வல்லெழுத்துக்கு இனமான மெல்லெழுத்து மிகுதலும் இவை போல்வன பிறவும் அப்பண்புச்சொற்களுக்கு இயற்கையாம்.

(உம்) நல்லன், சிறுபொருள், நன்மை, சிறுமை என்பவற்றின் மை விகுதி போயிற்று.

கரியன், சிறியிலை, கருமை என்பவற்றின் மை விகுதி போய் உகரம் இகரமாயிற்று.

பாசி, மூதூர் - பசுமை என்பவற்றின் மை விகுதி போய் ஆதி நீண்டது.

பைந்தார் பசுமை என்பதன் மை விகுதி போய் நடுவே நின்ற உயிர் மெய்யுங் கெட்டு முதலிலிருந்து அகரம் ஐகாரமாகி வருமெழுத்திற்கு இனவெழுத்து மிக்கது.

குற்றி, நட்டாறு குறுமை, நடுமை என்பவற்றின் மை விகுதி போய் தன் ஒற்று இரட்டியது.

செய்யன், வெவ்வுயிர் செம்மை வெம்மை என்பவற்றின் மை விகுதி போய் முன்னின்ற மகரமெய் திரிந்தது.

**தெரிநிலை வினைப்பகுதிக்குச் சிறப்புவிதி**

**நடவா மடி சீ விடு கூவே வை**
**நொ(ப்)போ வெள உரிஞ் உண் பொருந்திடும் தின்**
**தேய் பார் செல் வவ் வாழ் கேள் அ.்.கு என்று**
**எய்திய இருபான் மூன்றா மீற்றவுஞ்**
**செய்யெ ளேவல் வினைப்பகாப் பதமே (10)**

நட என்பது முதல் அ.்.கு என்பது ஈறாகப் பொருந்திய இருபத்து மூன்றாகிய ஈற்றையுடைய இவை முதலிய சொற்களெல்லாம், செய்யென்னும் வாய்ப்பாட்டு ஒருமையேவலும் மற்றைத் தெரிநிலை வினைகளின் பகாப்பதமாகிய பகுதியுமாம்.

சொல்லுக்கு இறுதியில் நிற்கும் இருபத்துநான்கு எழுத்துக்களுள் எகரம் வினாவிடைச் சொல்லிலும் அளபெடையிலும் தன்னை உணர்த்துமிடத்திலும் ஈறாவதல்லாமல், மற்றைச் சொற்களின் இறுதியல் நில்லாதாதலால், அதனை ஒழித்து இருபான் மூன்றா மீற்ற என்றார். பகுதியைப் பற்றி விளக்கும் இவ்விடத்தில் ஏவல் வாய்ப்பாடு பட வருதலால் அதனையும் உடன் கூறினார்.

ஒருமை ஏவலாக வருவதற்கு (உம்)

நட, வா, உண், தின், அ.்.கு என வரும்

மற்றை வினைப் பகுதியாக வருவதற்கு (உம்)

நடந்தான், வந்தான், மடிந்தான், சீத்தான் விட்டான், கூவினான், வெந்தான், வைதான், நொந்தான், போயினான், வெளவினான், உரிஞினான், உண்டான், திருமினான், தின்றான், தேய்ந்தான், பார்த்தான், சென்றான். வாழ்ந்தான், கேட்டன், அ.்.கினான் என வரும்.

இங்குக் காட்டிய நட, வா முதலியன வெல்லாம் தன்வினைப் பகுதிகள் பிறவினைபகுதிகள் வரும் சூத்திரத்தால் காட்டப்பெறும். தன்வினையாவது – தானே நேராகத் தொழிலைச் செய்வது பிறவினையாவது - மற்றொருவனைக் கொண்டு தான் செய்விப்பது.

கிட, சுர, பற, கல முதலிய அகரவீற்று வினைப் பகுதிகளெல்லாம் இங்கு எடுத்துக்காட்டிய 'நட' என்னும் அகரவீற்று வாய்ப்பாட்டிலும் இவ்வாறே எல்லா ஈற்றுப் பிறபகுதிகளும் இங்குக்காட்டிய அவ்வவ்வீற்று வாய்ப்பாடுகளிலும் அடக்கப்படுமென அறிக.

தெரிநிலை வினைப்பகுதிகள் விகுதியோடு புணரும்போது தொழுதான், உண்டான் எனச் சில இயல்பாதலன்றியும், செல், சேரல், கொள், கோடல் என முதல் நீண்டும், தா தந்தான், வே வெந்தான் எனத் தனிநெடில் குறுகியும், சா செத்தான் என முதல் ஆகாரம் எகரமாகியும், கொணா கொணர்ந்தான் என முதலெழுத்து அயலெழுத்துக் குறுகி ரகரமெய் விரிந்தும், விரிவு விராவினான் என நடுக்குறில் நீண்டும், முழுகு-முழுகினான், மூழ்கினான், விழு-விழுந்தான்-வீழ்ந்தான் என இயல்பும் விகாரமுமாக விகற்பித்தும். வாக-வருகின்றான், அலமா-அலமருகின்றான் என நெடில் குறுகி ஒருயிர்மெய் விரிந்தும், கல்-கற்றான், கேள்-கேட்டான் என ஈற்றுமெய் வருமெய்யாகத் திரிந்தும், செல் சென்றான், கொள் கொண்டான் என ஈற்றுமெய் வருமெழுத்திற்கு இனமாகத் திரிந்தும் இன்னும் இவ்வாறு பலவிகாரமடைந்தும் வரும்.

கா, சா, தா இவை முறையே காத்தான், செத்தான், தந்தான் என்றும் கல், நில், புல், சொல் இவை கற்றான், நின்றான், புல்லினான் சொன்னான் என்றும் ஒருதன்மையனவான பகுதிகள் பலவிதமான விகாரப்படுதலால், செய்யுள் வழக்கத்தையும், உலக வழக்கத்தையும் பார்த்துப் புணர்ச்சி விகாரமும் செய்யுள் விகாரமும் கொண்டு அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

## விகுதி

**அன் ஆன் அள் ஆள் ஆர் ப(ம்)மார்**
**அ ஆ கு டு து று என் ஏன் அல் அன்**
**அம் ஆம் எம் ஏம் ஓம் (ஓடு) உம் ஊர்**
**க ட த ற ஐ ஆய் இ(ம்) மின் இர் ஈர்**
**ஈயர் க ய உம் என்பவும் பிறவும் சிலவே (11)**

அன் முதல் முப்பத்தேழாகச் சொல்லப்பட்டவைகளும், இவைபோல்வன பிறவும் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதங்களின் விகுதிகளாம். பெயர்ப்பகுபதங்களிலும் அவற்றுள் சில விதிகளாம்.

(உ_ம்)

அன், ஆன் - நடந்தனன், நடந்தான் - ஆண்பாற் படர்க்கை

அள், ஆள் - நடந்தனள், நடந்தாள் - பெண்பாற் படர்க்கை

அர், ஆர் - நடந்தனர், நடந்தார் - பலர்பால் படர்க்கை

ப மார் - நடப்ப, நடமார் - பலர்பால் படர்க்கை

அ, ஆ நடந்தன, நடவா பலவின்பாற் படர்கை

| | | |
|---|---|---|
| கு, டு | - உண்கு, உண்டு | |
| து, று | - நடந்து, சேறு | ஒருமைத்தன்மை |
| என், ஏன் | - நடந்தனென், நடந்தேன் | |
| அல், அன் | - நடப்பல், நடப்பன் | |

| | | |
|---|---|---|
| அம், ஆம் | - நடப்பம், நடப்பாம் | |
| எம், ஏம் | - நடப்பெம், நடப்பேம் | |
| ஓம் | - நடப்போம் | பன்மைத்தன்மை |
| கும், டும் | - உண்கும், உண்டும் | |
| தும், றும் | - நடந்தும், சேறும் | |

| | | |
|---|---|---|
| ஐ, ஆய் | - நடந்தனை, நடந்தாய் | ஒருமை |
| இ | - சேறி (செல்வாய்) | முன்னிலை |

| | | |
|---|---|---|
| மின் | - நடமின் | பன்மை முன்னிலை |
| இர், ஈர் | - நடந்தனிர், நடந்தீர் | |

| | | |
|---|---|---|
| ஈயர், க | - நிலீயர், நடக்க | வியங்கோள் |
| ய | - வாழிய | |

உம் நடக்கும் செய்யுமென் முற்று இவையெல்லாம் தெரிநிலை வினைமுற்றுக்கள்.

டு, து, று விகுதிகள் ஒன்றன்பாலில் வருவதற்கு உதாரணம் குறுந்தாட்டு, குறுகியதாளையுடையது நடந்தது, போயிற்று.

குறிப்பு வினைமுற்றுக்கள், குறிப்பாகக் காலங்காட்டு வனவாதலால் இந்த விகுதிகளுள்ளே தாமே காலங்கெட்டும் விகுதிகளொழிந்த அன், ஆன், அள், ஆள், அர், ஆர், அ, டு, து, று, என், ஏன், அம், ஆம், எம், ஏம், ஓம், ஐ, ஆய், இ, இர், ஈர் என்னும் விகுதிகளோடு வருமெனக் கொள்க.

(உம்) கரியன், கரியான், கரியள், கரியாள், கரியர், கரியார், கரியன, குறுந்தாட்டு, கரியது, குழையிற்று, கரியென, கரியேன, கரியம், கரியெம், கரியேம், கரியோம், கரியை கரியாய், வில்லி, கரியிர், கரியீர்.

பெயரினும் சில என்றதனால் இவ்விகுதிகளுள் அன், ஆன், அன், ஆள், அர், ஆர் மார், து, அ, ஐ, இ என்பவைகளுடன் மன், மான், கள், வை, தை, கை, பி, முன், அல், ள், வ், ர் என்பனவும் பிறவும் பெயர் விகுதிகளாம்.

(உம்) குழையன், வானத்தான், குழையள், வானத்தாள், குழையர், வானத்தார், தேவிமார் யாது குழையன, கண்ணறை, பொன்னி, வடமன், கோமான், கோக்கள், அவை எந்தை, எங்கை, எம்பி, எம்முன், தோன்றல், பிறன், பிறள், பிறர் அவ் தெரிநிலைப் பெயரெச்ச விகுதிகள்: அம், உம் என்பன

(உம்) நடந்த, நடக்கின்ற, நடக்கும்

குறிப்புப் பெயரெச்ச விகுதி அ ஒன்றேயாம்.

(உம்) பெரிய

உம் விகுதி இடைநிலை ஏற்காமல் தானே எதிர்காலங்காட்டுதலால் குறிப்புப் பெயரெச்சத்திற்கு வராது.

தெரிநிலை வினையெச்ச விகுதிகள் உ, இ, ய், பு, ஆ, ஊ, என அ, இன், ஆல், கால், கு, இய, இயர், வான், பான், பாக்கு, கடை, கண், வழி, இடத்து, உம், மல், மை, மே என்பனவும் பிறவுமாம். இவற்றுள் இறுதியில் கூறிய மல், மை, மே என்னும் விகுதிகள் எதிர்மறையில் வரும்.

(உம்) நடந்து, ஓடி, போய், உண்குபு, உண்ணா, உண்ணு, உண்ணூ, உண்ணென, உண்ண, உண்ணின், உண்டால், உண்டக்கால், உணற்கு, உண்ணிய, உண்ணியர், வருவான், உண்பாள், உண்பாக்கு, செய்தக்கடை, செய்தக்கண், செய்தவழி, செய்தவிடத்து, காண்டலும், உண்ணாமல், உண்ணாமை உண்ணாமே.

**குறிப்பு வினையெச்ச விகுதிகள்**

அ, றி, து, ஆல், மல், கால், கடை, வழி, இடத்து என்பனவும் பிறவுமாம்.

(உ.ம்) மெல்ல, அன்றி, அல்லது, அல்லால், அல்லாமல், அல்லாக்கால், அல்லாக்கடை, அல்லாவழி, அல்லாவிடத்து.

**தொழிற்பெயர் விகுதிகள்**

தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, மை, து, ஆல், இல் என்பனவும் பிறவுமாம்.

(உ.ம்) நடத்தல், ஆடல், வாட்டம், கொலை, நடக்கை பார்வைப்போக்கு, நடப்பு, வரவு, மறதி, உணர்ச்சி கல்வி, விக்குள் (விக்குதல்) சாக்காடு, கோட்பாடு, தேற்றரவு, வாரானை, நடவாமை, பாய்த்து, தழால், எழில். மை என்னும் தொழிற்பெயர் விகுதி நடந்தமை நடக்கின்றமை என இறந்தகால இடைநிலை நிகழ்கால இடைநிலைகளோடு கூடியும் து என்னும் தொழிற்பெயர் விகுதி நடந்து, நடக்கின்றது, நடப்பது என முக்கால இடைநிலைகளோடு கூடியும் வரும். இவையெல்லாம் விகுதி பெற்ற தொழிற்பெயர்.

இனி இவ்விகுதிகளில் ஒன்று புணர்ந்து கெட்டுப் பகுதிமாத்திரமாய் நிற்கும் தொழிற்பெயர்களும், விகுதி புணர்ந்து கெடும்போது பகுதி விகாரபட்டு நிற்குத் தொழிற் பெயர்களும் உண்டு. அவை முறையே முதநிலைத்தொழிற் பெயரென்றும், முதநிலைதிரிந்த தொழிற்பெயரென்றும் கூறப்படும்.

(உ.ம்) அடி, அறி, உரை, கெடு முதநிலைத் தொழிற்பெயர்

கோள், கேடு, இடையீடு முதநிலைதிரிந்த தொழிற்பெயர் பண்புப்பெயர் விகுதிகள்

மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், நர், பம் என்பனவும் பிறவுமாம்.

(உ.ம்) நன்மை, தொல்ல, மாட்சி, மாண்பு, மழவு, நன்கு, நன்றி, நன்று, நலம், நன்னர், திட்பம்.

இ, ஐ, அம் என்னும் மூன்று விகுதிகளும் வினைமுதற் பொருளையும் செயப்படு பொருளையும், கருவிப்பொருளையும் உணர்த்தும் (வினை முதற்பொருள் கருத்தாப் பொருள்)

(உ.ம்) அலரி, பறவை, எச்சம் வினைமுதற்பொருள்

ஊருணி, தொடை, நீத்தம் செயப்படு பொருள்

மண்வெட்டி, பார்வை, நோக்கம் கருவிப்பொருள்

அலர்வது அலரி (பூ) பறப்பது பறவை: எஞ்சுவது எச்சம் சந்ததி இவற்றில் வினைகளின் எழுவாயே பொருளாதல் காண்க. ஊரரால் நீருண்ணப்படுவது ஊருணி: தொடுக்கப்படுவது தொடை (மாலை): நீந்தப்படுவது நீத்தம. இவற்றில் வினைகளின்

செயல்படு பொருளே பொருளாதல் காண்க. மண்ணை வெட்டுவதற்கு கருவியானது மண்வெட்டி, பார்த்ததற்குக் கருவியானது பார்வை (கண்): நோக்குதற்குக் கருவியானது நோக்கம் (கண்): இவற்றில், வினைகளின் கருவியே பொருளாதல் காண்க.

இம்மூவகை விகுதிகளும் பகுதியோடு புணர்ந்து கெடுதலும் உண்டு. (உம்) காய், தளிர், பூ, கனி, நிரை, நரை, அலை என்பவைகளில் வினைமுதற் பொருளுணர்த்து விகுதி புணர்ந்து கெட்டது.

உண், புண், கோள், உரி, துணி, மடி என்பவைகளில் செயப்படு பொருளுணர்த்தும் விகுதி புணர்ந்து கெட்டது. விடு, ஒழி என்ற விகுதிகள் துணிவுப்பொருளை உணர்த்தும்.

(உம்) செய்துவிட்டான், விட்டொழிந்தான்

கொள் என்ற விகுதி தற்செயலை உணர்த்தும்

(உம்) அடித்துக்கொண்டான்

படு, உண் விகுதிகள் செயப்பாட்டு வினைப்பொருளை உணர்த்துமு்

(உம்) கட்டப்பட்டான், கட்டுண்டான்

மை என்ற விகுதி தன்மைப் பொருளை உணர்த்தும்

(உம்) பொன்மை, ஆண்மை

இரு, இடு, உறு என்பன தமக்கென வேறு பொருளின்றி பகுதி பொருள் விகுதியாய் வரும். இவற்றைத் துணைவினை என்பர்.

(உம்) எழுந்திருக்கின்றான், உரைத்திடுகின்றான், சொல்லுறுகின்றான்.

**பலபொருள் குறிக்கும் விகுதிகள் பின்வருமாறு**

அ - 1. வினையெச்ச விகுதி: செய்ய, மெல்ல

2. பெயரெச்ச விகுதி: செய்த, பெரிய

3. பலவின்பால் படர்க்கை விகுதி: வந்தன, கொடியன

4. வியங்கோள் விகுதி: எழுந்தருள (எழுந்தருள்க)

அம் - 1. தன்மைப்பன்மை விகுதி: நடந்தனம், பெரியம்

2. தொழிற்பெயர் விகுதி: ஆட்டம்

3. பண்புப்பெயர் விகுதி: நலம்

4. வினைமுதற்பொருள் விகுதி: எச்சம்

5. செயப்படுபொருள் விகுதி: நீத்தம்

6. கருவிப்பொருள் விகுதி: நோக்கம்

அல் - 1. தொழிற்பெயர் விகுதி: செயல்

2. தன்மை ஒருமை விகுதி: நடப்பல்

3. உடன்பாட்டு வியங்கோள் விகுதி: எனல்

4. எதிர்மறை வியங்கோள் விகுதி: கொளல்

5. எதிர்மறை ஏவல் விகுதி: உண்ணல்

6. வினைமுதற்பொருள் விகுதி: தோன்றல்

அன் - 1. ஆண்பாற் படர்க்கைப் பெயர்விகுதி: அறிஞன்

2. ஆண்பாற் படர்க்கைப் வினைவிகுதி: வந்தனன்

3. தன்மையொருமை விகுதி: செய்வன்

4. ஒன்றன்பாற்படர்க்கைப் பெயர்பகுதி: வலியன், கடுவன்

ஆ - 1. பலவின்பாற்படர்க்கை விகுதி: நடவா

2. வினையெச்ச விகுதி: செய்யா

ஆல் - 1. தொழிற்பெயர் விகுதி: ஓரால்

2. தெரிநிலை வினையெச்ச விகுதி: உண்டால்

3. குறிப்புவினையெச்ச விகுதி: அல்லால்

4. எதிர்மறை ஏவலொருமை விகுதி: மறால்

ஆன் - 1. ஆண்பாற் படர்க்கைப் பெயர்விகுதி: பெரியான்

2. ஆண்பாற் படர்க்கைப் வினைவிகுதி: வந்தான்

3. ஒன்றன்பாற் படர்க்கைப் பெயர்விகுதி: கேட்டான்

இ - 1. ஆண்பாற் படர்க்கைப் பெயர்விகுதி: வில்லி

2. பெண்பாற் படர்க்கைப் பெயர்விகுதி: பொன்னி

3. ஒன்றன்பாற் படர்க்கைப் பெயர்விகுதி: நாற்காலி, பலகனி

4. முன்னிலை பொருமை விகுதி: வருதி (வருவாய்)

5. வினையெச்ச விகுதி: ஓடி

6. வினைமுதற் பொருள்விகுதி: அலரி

7. செயப்படு பொருள் விகுதி: ஊருணி

8. கருவிப்பொருள் விகுதி: மண்வெட்டி

9. ஏவலொருமை விகுதி: காட்டுதி (காட்டு)

10. வியங்கோள் விகுதி: காட்டி

இர் - 1. பலர்பாற் படர்க்கைப் பெயர்விகுதி: கேளிர், மகளிர்

2. முன்னிலை பன்மை விகுதி: நடந்தளிர்

3. ஏவல்பன்மை விகுதி: வருதிர்

உ - 1. வினையெச்ச விகுதி: நடந்து

2. தொழிற்பெயர் விகுதி: வரவு

ஊ - 1. ஏவற்பன்மை விகுதி: வாரும்

2. படர்க்கை வினைமுற்று விகுதி: செய்யும்

3. பெயரெச்ச விகுதி: நடக்கும் (மனிதன்)

4. வினையெச்ச விகுதி: செய்தலும் (போனான்)

ஐ - 1. முன்னியையொருமை விகுதி: செய்தனை

2. தொழிற்பெயர் விகுதி: விலை

3. பண்புப்பெயர் விகுதி: தொல்லை

4. வினைமுதற்பொருள் விகுதி: பறவை

5. செயப்படுபொருள் விகுதி: தொடை

கு - 1. பண்புப்பெயர் விகுதி: நன்கு

2. பிறவினை விகுதி: போக்கு

3. தொழிற்பெயர் விகுதி: போக்கு

கை - 1. தொழிற்பெயர் விகுதி: வருகை

2. முறைப்பெயர் விகுதி: தங்கை

சி - 1. பண்புப்பெயர் விகுதி: மாட்சி

2. தொழிற்பெயர் விகுதி: காட்சி

து - 1. ஒன்றன்பாற் படர்க்கை வினைவிகுதி: நடந்தது

2. ஒன்றன்பாற் படர்க்கைப் பெயர்விகுதி: கைத்து கைப்பொருள்

3. பிறவினைவிகுதி: நடத்து

4. தொழிற்பெயர் விகுதி: பாய்த்து (பாய்தல்)

5. தன்மையொருமை விகுதி: வந்து (வந்தேன்)

6. எதிர்மறை வினையெச்ச விகுதி: அல்லது.

பு - 1. பண்புப்பெயர் விகுதி: நண்பு

2. தொழிற்பெயர் விகுதி: படிப்பு

3. வினையெச்ச விகுதி: செய்பு (செய்து)

மார் - 1. பலர்பால் படர்க்கைப் பெயர் விகுதி: குருமார், கன்னிமார்

2. பலர்பால் படர்க்கை வினைமுற்று விகுதி: கொண்மார் (கொள்வார்)

மை - 1. பண்புப்பெயர் விகுதி: நன்மை

2. தொழிற்பெயர் விகுதி: செய்தமை

3. வினையெச்ச விகுதி: செய்யாமை

4. தன்மைப் பொருளுணர்த்தும் விகுதி: பெண்மை, பொன்மை

வி - 1. தொழிற்பெயர் விகுதி: கேள்வி

2. பிறவினைப்பகுதி: செய்வி

று - 1. ஒன்றன்பாற் படர்க்கை வினைமுற்று விகுதி: போயிற்று

2. பண்புப்பெயர் விகுதி: நன்று

3. தன்மை யொருமை விகுதி: சென்று

4. பிறவினைப்பகுதி: பயின்று

## இடைநிலை

**பெயர்ப்பகுபத இடைநிலை**

**இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலின்**
**பகுதி விகுதி பகுத்திடை நின்றதை**
**வினைப்பெய ரல்பெயர்க் கிடைநிலை யெனலே. (12)**

இலக்கிணத்தைப் பார்த்து, அவ்விலக்கியத்திற்கு இலக்கணம் சொல்ல வேண்டுதலால், பகுதியையும் விகுதியையும் பிரித்து நடுவில் ஏதேனும் நின்றால் அதனை, வினையாலணையும் பெயரல்லாத பெயர்ப் பகுபதங்கட்கு இடைநிலை என்று சொல்லுக.

மேற்கூறப்படும் வினைப் பகுபத இடைநிலைகாலங் காட்டுதல் போலப் பெயர்ப்பகுபத இடைநிலை காலங்காட்டாதாயினும், முதனிலை இறுதிநிலைகளாகிய பகுதி விகுதிகட்கு இடையில் நிற்றலால் இடைநிலை எனப்பட்டது.

(உ.ம்) அறிஞன். கவிஞன், இளைஞன், பகைஞன் - ஞகர இடைநிலை

இடைச்சி, வலைச்சி, புலைச்சி – சகர இடைநிலை

பொருநன், செய்குநன் - நகர இடைநிலை

வினைப்பகுபத இடைநிலை

**இறந்தகால இடைநிலை**

**தடறவொற் றின்னே யைம்பால் மூவிடத்து**
**இறந்த காலந் தருந்தொழி லிடைநிலை (13)**

தகர, டகர, றகர மெய்களும், இன் என்பதும், ஐந்து பால்களிலும் மூன்று இடங்கிலும் இறந்தகாலத்தைக் காட்டுகின்ற வினைப்பகுபதங்களின் இடைநிலைகளாம்.

(உ.ம்) நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது, நடந்தன, நடந்தேன், நடந்தேம், நடந்தாய், நடந்தீர், உண்டான், சென்றான், சென்றான், உறங்கினான்.

**நிகழ்கால இடைநிலை**

**ஆநின்று கின்று கிறுமு விடத்தின்**
**ஐம்பால் நிகழ்பொழு தறைவினை யிடைநிலை (14)**

ஆநின்று கின்று கிறு இம்மூன்றும், மூன்று இடங்களிலும் ஐந்து பால்களிலும், நிகழ்காலத்தைக் காட்டுகின்ற வினைப்பகுப்பதங்களின் இடைநிலைகளாகும். (உ.ம்) நடவாநின்றான், நடக்கின்றான், நடக்கிறான்.

**எதிர்கால இடைநிலை**

**பவ்வ மூவிடத் தைம்பா லெதிர்பொழுது**
**இசைவினை யிடைநிலை யாமிவை சிலசில (15)**

பகரமெய்யும், வகரமெய்யும், மூன்று இடங்களிலும் ஐந்து பால்களிலும் எதிர்காலத்தைக் காட்டுகின்ற வினைப்பகுபதங்களின் இடைநிலைகளாம். இந்த மூன்றுகால இடைநிலைகளும் சில வினைப்பகுப்பதங்கட்கு இல்லை.

(உ.ம்) நடப்பான், வருவான்

**காலங்காட்டும் விகுதி**

**றவ்வொ டுகர வும்மைநிகழ் பல்லவும்**
**தவ்வொ டிறப்பு மெதிர்வும் டவ்வொடு**

**கழிவுங் கவ்வோ டெதிர்புமின் னேவல்**
**வியங்கோ ளிம்மா ரெதிகவும் பாந்தம்**
**செலவோடு வரவுஞ் செய்யுநிகழ் பெதிர்வும்**
**எதிர்மறை முன்மையு மேற்கு மீங்கே (18)**

றகர மெய்யோடு கூடிய உகரமும் உம்மும் (று, றும் என்னும் விகுதிகள்) நிகழ்காலம் ஒழிந்த இறந்தகால எதிர்காலங்களையும் தகர மெய்யோடு கூடிய உகரமும் உம்மும் (து, தும் என்பன) இறந்தகாலத்தையும், எதிர்காலத்தையும், டகரமெய்யோடு கூடிய உகரமும் உம்மும் (டு, டும்) என்பன இறந்தகாலத்தையும், சகரமெய்யோடு கூடிய உகரமும் உம்மு் (கு, கும்) என்பன எதிர்காலத்தையும், மின், விகுதியும் மற்றை ஏவல் விகுதிகளும் வியங்கோள் விகுதிகளும், இகர விகுதியும், மார்விகுதியும், எதிர்காலத்தையும், பகரவிகுதி இறந்த காலத்தையும், எதிர்காலத்தையும், செய்யுமென்னும் வாய்ப்பாட்டு முற்றின் விகுதி நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் எதிர்மறை ஆகார விகுதி மூன்று காலங்களையும் ஏற்று வரும்.

இங்குக் காட்டிய விகுதிகளுள் கு டு து று என்பவை தன்மை யொருமைக்கும், கும், டும், தும், றும் என்பவை தன்மைப் பன்மைக்கும் மின் ஏவற்பன்மைக்கும், ஏவல்-முன்னிலைக்கும் வியங்கோல்-ஐம்பால் மூவிடத்திற்கும் இ-முன்னிலையொருமைக்கும், மார் ப என்பவை படர்க்கைப் பலர்பாலுக்கும், உம் பலர் பாலொழிந்த நான்கு பால்கட்கும், ஆ-படர்க்கைப் பலவின் பாலுக்கும் உரியனவாதல் மேல் வினையியலில் விளங்கும்.

(உம்) சென்று (சென்றேன்), சென்றும் (சென்றோம்), இறப்பு

சேறு (செல்வேன்), சேறும் (செல்வோம்)... எதிர்வு

வந்து (வந்தேன்), வந்தும் (வந்தோம்)... இறப்பு

வருது (வருவேன்) வருதும் (வருவோம்)... எதிர்வு

உண்டு (உண்டேன்) உண்டும் (உண்டோம்)... இறப்பு

உண்டு (உண்பேன்) உண்கும் (உண்போம்) எதிர்பு

உண்மின், உண்ணீர், உண்ணும், உண்ணாய், உண்

வாழ்க, வாழிய, வாழியர்
சேறி (செல்வாய்) — எதிர்வு
உண்மனார் (உண்பார்)

உண்ப (உண்டார்) என்ப (என்றார்) - செலவு

உண்ப (உண்பார்) என்ப (என்பார்) – வரவு

உண்ணும்…………….. நிகழ்வு, எதிர்வு

உண்ணா…………….. இறப்பு, நிகழ்வு, எதிர்வு

சென்றி, செல்லா நின்றி என வருமாயின் இடைநிலை காலங்காட்டிய இகரவீற்றனவாம்.

கு, டு, று என்னும் மூன்று உயிர்மெய்யீற்றுச் சில பகுதிகள், தம் மொற்று இரட்டி இறந்தகாலங்காட்டும்.

(உ.ம்) புக்கான், தொக்கான், போட்டான், விட்டான், உற்றான், பெற்றான்

யகரவொற்றிடைநிலை இறந்தகாலமும், ஆகிடந்து, ஆவிருந்து என்னும் இரண்டு இடைநிலைகளும் நிகழ்காலமும், சகரவொற்றிடைநிலை எதிர்காலமும் காட்டும்.

(உ.ம்) போயது: உண்ணா கிடந்தான், உண்ணா விருந்தான், செய்கேன். இசின் என்பது இறந்தகால இடைநிலையாயும், மகரமெய்யும் மன் என்பதும் எதிர்கால இடைநிலைகளாயும் செய்யுளில் வரும்.

(உ.ம்) என்றிசினோர், என்மார் என்மனார்.

ஈங்கே என்ற மிகயால், காண்டும் (காண்போம்) என டும் விகுதி எதிர்காலங்காட்டுதலையும், வருதி வருகின்றாய் என இகரவிகுதி நிகழ்காலங்காட்டுதலையும், பெயரெச்ச வினையெச்சங்களில் இடைநிலையின்றி விகுதி காலங்காட்டுதலையும் அமைத்துக்கொள்க.

பகுதி விகுதி என்னும் சூத்திரம் முதல் இச்சூத்திரம் வரையிலும் பகுபதங்களை மேலோர் முடித்தவாறு முடித்துக்காட்டுவது முடித்துக்காட்டல் என்னும் உத்தி. முன்னைத் தமிழ் நூல்களில் இல்லாதவைகளை இவ்வாசிரியர் தாமே பகாப்பதம் பகுபதமென் முன்னே நாட்டி இச்சூத்திரம் வரையிலும் அவற்றிற்கு இலக்கணங்கூறி நிறுத்தியது தானாட்டித் தனது நிறுப்பு என்னும் மதம் (தானே ஒரு பொருளை எடுத்துத் தாபித்து அதனை இடந்தோறும் நிலை நிறுத்தல்).

## வடமொழி ஆக்கம்

**ஆரியமொழி தமிழில் வருதல்**

**இடையில் நான்கு மீற்றி லிரண்டும்**
**அல்லா வச்சை வருக்க முதலீறு**
**யவ்வாதி நான்மை ளவ்வாகு மையைம்**
**பொதுவெழுத் தொழிந்த நாலேழுந் திரியும் (19)**

ஆரிய மொழியுள் ‘அச்’ என்று வழங்குகின்ற உயிர் பதினாறனுள் நடுவிலுள்ள நாலெழுத்துக்களும், கடையிலுள்ள இரண்டும் நீங்கலாக அச்சு என வழங்கும். அ, ஆ, இ, ஈ, உ, எ, ஏ, ஒ, ஔ என்னும் பத்து உயிர்களும், அல் என்றும் வழங்கும் மெய் முப்பத்தேழுள் க, ச, ட, த, ப என்னும் ஐந்தும் வருக்கங்களினுடைய முதலிலுள்ள க, ச, ட, த, ப என்னும் ஐந்து ஈற்றிலுள்ள ங, ஞ. ண, ந, ம என்னும் ஐந்தும், ய, ர, ல, வ என்னும் நான்கும், ளகரமும் ஆகிய இருபத்தைந்து எழுத்துக்களும் ஆரியத்திற்கும் தமிழுக்கும் உள்ள பொதுவெழுத்துக்களாம். இவை ஒழிந்த இருபத்தெட்டு எழுத்துக்களும் ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்களாய்த் தமிழில் தமக்கு ஏற்ற பொதுவெழுத்துக்களாகத் திரிந்து வரும்.

ஆரியமொழியுள் உயிரெழுத்துப் பதினாறு

தமிழுக்கும் ஆரியத்திற்கும் பொது உயிர் - 6+4=10

மெய் வருக்கம் - 5+5=10

| | |
|---|---|
| வல்லினம் | 5 |
| மெல்லினம் | 5 |
| இடையினம் | 4 |
| | +1 |
| | 25 |

மெய்யெழுத்து முப்பத்தேழாவன

| | |
|---|---|
| ஆரியத்திற்கே உரிய சிறப்பெழுத்துக்கள் | 6 |
| மெய் | 22 |
| | 28 |

தமிழுக்கே உரிய சிறப்பெழுத்துக்கள்

உயிர் - 2 (எ,ஒ)

மெய் - 3 (ற, ன, ழ)

ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொதுவாகவுள்ள எழுத்தாலாகிய விகாரமின்றித் தமிழில் வந்து வழங்கும் வடமொழி தற்சமம் எனப்படும். (உம்) அமலம், கமலம், காரணம், குங்குமம்.

ஆரியத்திற்கே உரிய சிறப்பெழுத்தாலும் பொதுவும் சிறப்புமாகிய ஈரெழுத்தாலுமாகித் திரிதல் முதலிய விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்கும் வடமொழி தற்பவனம் எனப்படும்.

சுகி, போகி, சுத்தி - இவை சிறப்பெழுத்தாலாகி விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்கும் தற்பவமொழி. அரி, அரண், சமயம், ஞானம் இவை ஈரெழுத்தாலுமாகிய விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்கும் தற்பவமொழி.

**ஆரியவெழுத்துத் தமிழில் விகாரப்படுதல்**

**அவற்றுள்**
**ஏழாமுயி ரிய்யும் இருவு மைவருத்தத்து**
**இடையில் மூன்று மவ்வம் முதலும்**
**எட்டே யவ்வும் முப்பது சயவும்**
**மேலொன்று சடவும் இரண்டு சதவும்**
**மூன்றே யகவும் ஐந்திரு கவ்வும்**
**ஆவீ றையும் ஈயீ றிகரமும் (20)**

முன்னர்த் திரியும் என்ற சிறப்பெழுத்துக்கள் ஏழாமுயிரானது (இரு) இகரமாகவும் இருவாகவும், ஐந்து வருக்கங்களிலும் இடைகின்ற மும்மூன்று எழுத்துக்களும் அந்தந்த வருக்கத்தின் முதலெழுத்துக்களாகவும், எட்டாவது மெய் (ஜ) சகரமாகத் திரிதல் மாத்திரமேயன்றி யகரமாகவும், முப்பதாமெய் (ச) மொழிமுதலிறுதகளில் சகரமாகவும், நடுவில் சகரமாகவும் யகரமாகவும், முப்பத்தொன்றாம் மெய் (ஷ) முதலில் சகரமாகவும், இடை கடைகளில் டகரமாகவும் முப்பத்திரண்டாம்மெய் (ஸ) முதலில் சகரமாகவும் இடையில் சகரமாகவும் தகரமாகவும், முப்பத்து மூன்றாமெய் (ஹ) முதலில் ஏறிநின்ற உயிராகவும் இடையில் சகரமாகவும், முப்பத்தைந்தாமெய் (&) இரண்டு சுகரமாகவும், பொவெழுத்துக்களில் மொழி இறுதி ஆகாரமானது ஐகாரமாகவும் மொழி இறுதி ஈகாரமானது இகரமாகவும் திரியும்

(உம்)

இடபம்
விருத்தம் } ஏழாம் உயிர் இ, இரு எனத் திரிந்தது.

நகம் (உகிர்)
நாகம் (பாம்பு)
மேகம்
சவி (ஒளி)
விசயம் } ஐந்து வருக்கத்திலும் இடைநின்ற மும்மூன்று எழுத்துக்களும் அவ்வவ்வருக்கத்தின் முதலெழுத்தாகத்

| | |
|---|---|
| சடிதி<br>பீடம்<br>சடம்<br>கூடம் (மறைவானது)<br>தலம்<br>தினம்<br>தரை | முதலெழுத்தாகத் திரிந்தன |

| | |
|---|---|
| பலம் (பயன்)<br>பலம் (வலிமை) | |
| பாரம் | |
| யமதக்ளி (மொழிமுதல்)<br>பங்கயம் (மொழியிடை)<br>சங்கரன் (மொழிமுதல்)<br>ஆசை (மொழியிறுதி) | ஜ -யகரமாகத் திரிந்தது<br>ஸ -சகரமாகவும் யகரமாகவும் திரிந்தது |
| பாசம்<br>தேயம் (மொழியிடை) | |
| &ண்முகன் (மொழிமுதல்) | & -சகரமாகவும் டகரமாகவும் திரிந்தது |
| விடயம் (மொழியிடை கடை)<br>பாடை | |

| | |
|---|---|
| சபை (மொழிமுதல்)<br>வாசம் (மொழிமுதல்)<br>மாதம் (மொழியிடை) | ஸ- சகரமாகவும் திரிந்தது |
| அரி, ஆரம்<br>இமம், ஏமம் (மொழிமுதல்)<br>மோகம் (மொழியிடை) | ஹ உயிராகவும் ககரமாகவும் திரிந்தது |

பக்கம் - & இரண்டு ககரமாகத் திரிந்தது

மாலை – ஆகாரவீறு ஐகாரமாகத் திரிந்தது

புரி - ஈகாரவீறு இகரமாகத் திரிந்தது

**வடமொழி விகாரம்**

**ரவ்விற் கம்முத லாமுக் குறிலும்**
**லவ்விற் கிம்முத லிரண்டும் யவ்விற்கு**
**இய்யு மொழிமுத லாகிமுன் வருமே (21)**

ஆரியமொழி தமிழில் வரும்பொழுது ரகரத்தை முதலிலேயுடைய மொழிக்கு அ இ உ என்னும் மூன்று குற்றெழுத்துக்களில் ஒன்றும், யகரத்தை முதலிலே உடைய மொழிக்கு இகரமும் மொழிக்கு முதலாகி அம் மூன்றெழுத்துக்களுக்கு முன்னே வரும்.

(உம்) ரங்கம் - அரங்கம்

ரத்னம் - அரத்னம்

ராமன் - இராமன்

ரவி - இரவி

ரோமம் - உரோமம்

ரோகினி - உரோகினி எனவும்

லாபம் - இலாபம்

ல&ணம் - இலக்கணம்

லோபம் - உலோபம்

லோகம் - உலோகம்

யமன் - இயமன்

ய&ன் - இயக்கன் எனவும் வரும்

**இணைந்தியல் காலை யரலக் கிகரமும்**
**மவ்வக் குகரமும் நகரக் ககரமும்**
**மிசைவரும் ரவ்வழி யுவ்வு மாம்பிற (22)**

ஆரியமொழியுடன் இரண்டெழுத்து இணைந்து ஓரெழுத்தைப் போல நடக்கும் போத, பின்னின்ற யகர, ரகர, லகரங்கட்கு இகரமும், மகர வகரங்கட்கு உகரமும்,

நகரத்திற்கு அகரமும் முன்னே வரும். இணைந்து முன்நின்ற ரகரத்திற்குப் பின் உகரமும் வரும். இணைந்து வருதலை சம்புக்தாட்சரம் என்பர்.

(உம்) வாக்யம் - வாக்கியம்

வக்ரம் - வக்கிரம்

சுக்லம் - சுக்கிலம்

பத்மம் - பதுமம்

பக்வம் - பக்குவம்

ரத்நம் - அரத்னம் - நகரக்கு அகரம்

அர்த்தம் - அருத்தம் ரல்வழி உ.

பிற என்றதனால், ரத்னம்-இரத்தினம், சக்கரம்-சக்ரம், வாக்-வாக்கு, விராட்-விராட்டு, சத்-சத்து இவை முதலாகிய தோன்றலும். சக்தி-சத்தி, காவ்யம் - காப்பியம், பர்வதம்-பருப்பதம், ஸ்வயம்பூ-சுயம்பு, உத்பலம்-உற்பலம், ஸ்வயம்வரம் - சுயம்வரம், திநம்-தினம், பாபம்-பாவம், கல்பம்-கற்பம், சம்பகம்-சண்பகம், அக்நி-அங்கி, பங்க்தி-பந்தி, அஸ்த்ரம்-அச்சிரம், சூர்ணம்-சுண்ணம், கர்மம்-கன்மம், கர்ணன்-கன்னன், பஸ்மம்-பற்பம், ஸமரம்-சமர், அமர், சுமம் இவை முதலாகிய கெடுதலும் கொள்க.

**ற ன ழ எ ஒவ்வு முயிர்மெய் யுயிரளபு**
**அல்லாச் சார்புந் தமிழ்பிற பொதுவே (23)**

முதலும் சார்புமாகிய தமிழெழுத்து நாற்பதில் ற ன ழ எ ஒ இவ்வைந்து முதலெழுத்துக்களும், உயிர்மெய்யும் உயிரளபெடையுமல்லாத சார்பெழுத்து எட்டும் தமிழுக்கே சிறப்பெழுத்துக்களாம். ஒழிந்த இருபத்தேழு எழுத்துக்களும் தமிழுக்கும் ஆரியத்திற்கும் பொதுவெழுத்துக்களாம்.

பாடம்-5

# 3. உயிர்ஈற்றுப் புணரியல்

உயிரெழுத்துக்களை இறுதியிலுடைய நிலைமொழிகளோடு உயிர்முதலும் மெய்ம்முதலுமாகிய வருமொழிகள் புணரும் விதத்தைச் சொல்லும் இயல்.

இவ்வியலுள் புணர்ச்சி இன்னதென்பதும், பொருட்புணர்ச்சியும் எழுத்துப்புணர்ச்சியும், பொதுப்புணர்ச்சியும், உயிரின்முன் வல்லினம் புணர்தலும் அகரவீற்றுக்குச் சிறப்புவிதியும், ஆகார வீற்றுச் சிறப்புவிதியும், இகர வீற்றுச் சிறப்பு விதியும், ஐகாரவீற்றுச் சிறப்புவிதியும், ஈகார வீற்றுச் சிறப்பு விதியும், உகரவீற்றுச் சிறப்புவிதியும், ஐகாரவிற்றுச் சிறப்புவிதியும் கூறப்பட்டுள்ளன.

**புணர்ச்சி இன்னதென்பது**

**மெய்யு யிர் முதலீ றாமிரு பதங்களும்**
**தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்**
**பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிகள்**
**இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே (1)**

மெய்யையும் உயிரையும் முதலும் இறுதியாக உடைய பகாப்பதம் என்ற இரண்டு பதங்களும், தன்னொடுதானும் பிறிதொடு பிறிதுமாய், ஆவ்வழிப் பொருளினாலாவது வேற்றுமைப் பொருளினாலாவது பொருந்துமிடத்து நிலைமொழியும் வருமொழியும் இயல்பாகவாயினும் விகாரமாகவாயினும் பொருந்துவது புணர்ச்சியாம்.

**புணர்ச்சி நான்கு வகைப்படும் அவை முறையே**

1. உயிரீற்றின் முன் உயிர் முதல்மொழி புணர்தல்
2. உயிரீற்றின் முன் மெய்ம் முதல்மொழி புணர்தல்
3. மெய்யீற்றின் முன் உயிர் முதல்மொழி புணர்தல்
4. மெய்யீற்றின் முன் மெய்ம் முதல்மொழி புணர்தல்

என அமையும்.

| | | |
|---|---|---|
| (உம்) | மெய்ம்முதலுயிரீறு | – மணி+அழகு உயிர்முன் உயிர் |
| | உயிர்முதலுயிரீறு | – நிலம்+வலிது மெய்ம்முன் மெய் |
| | உயிர்முதல் மெய்யீறு | – மணி+பெரிது உயிர்முன் மெய் |
| | மெய்ம்முதல் மெய்யீறு | – நிலம்+அழகிது மெய்ம்முன் உயிர் |

தன்னொடு தான் பொருந்துதலாவது பகுபதத்தொடு பகுபதமும், பகாப்பதத்தொடு பகாப்பதமும் புணர்தல் பிறிதொரு பிறிது பொருந்துலாவது, பகுப்பதத்தொடு, பகாப்பதமும், பகாப்பதத்தொடு பகுபதமும் புணர்தல்.

(உம்) அவன்+வந்தான் - பகுபதத்தொடு பகுபதம்

பொன்+கலம் - பகாப்பதத்தொடு பகாப்பதம்

பென்னன்+கை - பகுபதத்தொடு பகாப்பதம்

கிளி+அழகிது - பகாப்பதத்தொடு பகுபதம்

**பொருட்புணர்ச்சி**

**வேற்றுமை அல்வழி**

**வேற்றுமை யைமுகுத லாறா மல்வழி**
**தொழில்பண் புவமை யும்மை அன்மொழி**
**எழுவாய் விளியீ ரெச்சமுற் றிடையுரி**
**தழுவு தொடரடுக் கெளவீ ரேழே (2)**

வேற்றுமைப் புணர்ச்சியாவது, ஐ, ஆல், கு, இன், அது, கண் என்கின்ற ஆறு உருபுகளும் இடையில் மறைந்தாயினும் வெளிப்பாடாயினும் வரப் பதங்கள் பொருந்துந் தொடர்ச்சியாம். அல்வழிப் புணர்ச்சியாவது வினைத்தொகையும், பண்புத்தொகையும், உவமைத்தொகையும், உம்மைத்தொகையும், அன்மொழித்தொகையும், எழுவாய்த்தொடரும், விளித்தொடரும், பெயரெச்சத் தொடரும், வினையெச்சத் தொடரும், தெரிநிலை வினைமுற்றுத் தொடரும், குறிப்புவினைமுற்றுத் தொடரும், இடைச்சொற்றொடரும், அடுக்குத் தொடரும் என்ற பதினான்காம். ஐ முதலிய ஆறு வேற்றுமை உருபுகள் இடையில் மறைந்து நிற்க நிலைமொழி வருமொழியோடு புணர்வது வேற்றுமைத் தொகைநிலை என்றும், அவ்வுருபுகள் வெளிப்பட்டு நிற்கப் புணர்வது வேற்றுமைத் தொகாநிலை யென்றுங் கூறப்படும். அல்வழியில் வினைத்தொகை முதலிய ஐந்தும் தொகைநிலைகள், மற்றை ஒன்பதும் தொகாநிலைகள்.

(உம்)

**வேற்றுமைப்புணர்ச்சி**

| தொகை | விரி |
|---|---|
| நீர்குடித்தான் - ஐ | நீரைக்குடித்தான் |
| கல்லெறிந்தான் - ஆல் | கல்லால் எறிந்தான் |
| மன்னன் மகன் - மகன் கு | மன்னனுக்கு மகன் |

| | |
|---|---|
| மலை வீழருவி - இன் | மலையின் வீழருவி |
| பொன்னன்கை - அது | பொன்னனது கை |
| வீடு புகுந்தான் - கண் | வீட்டின்கண் புகுந்தான் |

**அல்வழிப்புணர்ச்சி**

1. வினைத்தொகை - கொல்யானை (கொன்ற யானை, கொல்கின்ற யானை, கொல்லும் யானை)
2. பண்புத்தொகை - கருங்குதிரை (கருமையாகிய குதிரை)
   இருபெயரொட்டுப் பண்புத்தொகை – பனைமரம் (பனையாகிய மரம்)
3. உவமைத்தொகை – மதிமுகம் (மதிபோன்றமுகம்)
4. உம்மைத்தொகை – கபிலபரணர் (கபிலனும் பரணனும்)
5. அன்மொழித்தொகை – கருங்குழல் (கருமையாகிய கூந்தலை உடையவள் வந்தாள்)
6. எழுவாய்த்தொடர் - பொன்னன் வந்தான்
7. விளித்தொடர் - பொன்னா வா
8. பெயரெச்சத்தொடர் - வந்த மன்னன் பெரிய மன்னன்
9. வினையெச்சத் தொடர்- வந்துப்போனான் மெல்லப்போனான்
   தொகாநிலைத்தொடர்
10. தெரிநிலைவினை முற்றுத்தொடர் - வந்தான் பொன்னன்
11. குறிப்பு வினைமுற்றுத்தொடர் - குழையன் கொற்றன்
12. இடைச்சொற்றொடர் - மற்றொன்று
13. உரிச்சொற்றொடர் - நனிபேதை
14. அடுக்குத்தொடர் - பாம்பு பாம்பு

இவை தழுவுதொடர், எனவே, அவ்விரு வழியிலும் தழாத்தொடரும் சில உள என்றாராயிற்று. நீர்க்குடம் என்பது நீரையுடைய குடம் என விரிதலால், நீர் என்பது உடைய என்பதைத் தழுவிக் குடம் என்பதைப் பொருளால் தழுவாமல் தொடர்ந்ததனல் இது தழாத்தொடராகிய வேற்றுமைத்தொகை வருவது இவ்வாறு தொக்கு உருபும் பயனும் உடன் தொக்க தொகை எனப்படும். (உருபும் பொருளும் உடன் தொக்க தொகை எனினும் ஒக்கும்).

மரத்தைச் சாத்தன் வெட்டினான் என்பதில் மரத்தை என்பது வெட்டினான் என்பதைத் தழுவிச் சாத்தன் என்பதைப் பொருளால் தழுவாமல் தொடந்ததனால் இது

தழாத்தொடராகிய வேற்றுமைவிரி. 'சுரையாழ அம்மிமிதப்ப' என்பது சுரை மிதப்ப அம்மி அழ எனக் கூட்டப்படுதலால், சுரை என்பது ஆழ என்பதையும் அம்மி என்பதை மிதப்ப என்பதையும் பொருளால் தழுவாமல் தொடர்ந்தன. இவை தாழத்தொடராகிய அல்வழிப்புணர்ச்சி, தழாத் தொடராவது நிலைமொழியானது வருமொழியோடு பொருட்பொருத்தமுறத் தழுவாத தொடர். பொருட்பொருத்தமுறத் தழுவியதொடர் தழுவுதொடர்.

**உருபும் பயனும் உடன்தொக்கதொகை**

இரண்டாம் வேற்றுமை - நீர்க்குடம் (நீரையுடைய குடம்)

மூன்றாம் வேற்றுமை - பொற்குடம் (பொன்னாலாகிய குடம்)

நான்காம் வேற்றுமை - நோய் மருந்து (நோய்க்குத் தரும்மருந்து)

ஐந்தாம் வேற்றுமை - மலையருவி (மலையினின்று விழும் அருவி

ஆறாம் வேற்றுமை - தசரதராமன் (தசரதனது மகனாகிய ராமன்)

ஏழாம் வேற்றுமை - காட்டுப்புலி (காட்டில் உள்ள புலி)

எட்டு வேற்றுமைகளுள் முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் பெயரும், பெயரின் விகாரமுமேயன்றித் தமக்கென வேறு உருபு இல்லாமையால், அவ்விரண்டையும் எழுவாய், விளி என்ற அல்வழியில் சேர்த்து அவைவொழிந்த ஆரையுமே வேற்றுமை என்றார். அடுக்கும் தழுவுதொடராயினும் ஒரு சொல்லே அடுக்கி வருதலால் மற்றையவைபோலத் தழுவுதொடரன்றென்பதை அறிவித்தற்கு அதனை இறுதியில் வைத்தார்.

**எழுத்துப்புணர்ச்சி**

**இயல்பு புணர்ச்சி**

**விகார மனைத்தும் மேவல தியல்பே (3)**

வரும் சூத்திரத்திற்சொல்லப்படும் விகார வகை முழுவதையும் அடையாதது இயல்பு புணர்ச்சியாம்.

(உ-ம்) மணி+பெரிது=மணிபெரிது

புகழ்+அழகு=புகழழகு

**விகாரப் புணர்ச்சி**

**தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்**
**மூன்றும் மொழி மூவிடத்து மாகும் (4)**

எழுத்தாவது சாரியையாயவது தோன்றுதலும், ஓ எழுத்து மற்றோர் எழுத்தாக வேறுபடுதலும் உள்ள எழுத்துக்கெடுதலும் விகாரப்புணர்ச்சியாம், இம்மூன்றுவகை விகாரங்களும், நிலை மொழி வருமொழிகளின் முதல் இடை, கடை என்னும் மூன்று இடத்திலும் வரும்.

(உம்) பூ+கொடி=பூங்கொடி – வருமொழி முதலில் மெய் தோன்றிற்று.

அல்+திணை=அ.்.றிணை – வருமொழி முதலிலும் நிலை மொழியீற்றிலும் உள்ள மெய்கள் திரிந்தன.

நிலம்+வலயம்=நிலவலயம் - நிலைமொழி யீற்றுமெய் கெட்டது.

ஆறு+பத்து=அறுபது - நிலைமொழி முதலுயிர்திரிந்து வருமொழீ யிடையொற்றுக்கெட்டது.

பனை+காய்=பனங்காய் - நிலைமொழி ஈற்றுயிர் கெட்டு அம்சாரியை தோன்றி அழன் ஈறு திரிந்தது.

ஒன்பது+பத்து=தொன்னூறு – நிலைமொழி வருமொழிகள் மூன்றிடத்தும் விகாரப்பட்டன.

**செய்யுள் விகாரம்**

**வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்**
**விரித்தல் தொகுத்தலும் வருஞ் செய்யுள் வேண்டுழி (5)**

மெல்லொற்றை வல்லொற்றுக்களும், வல்லொற்றை மெல்லொற்றுக்களம் குற்றெழுத்தை நெட்டெழுத்தாக்கலும், நெட்டெழுத்தை குற்றெழுத்தாக்கலும், இல்லாத எழுத்தை வருவித்தலும், உள்ள எழுத்தை நீக்கலும் செய்யுளிடத்து அமைக்க வேண்டுமிடத்து வரும்.

(உம்)

1. ‘‘முகத்தை வரூஉங் காலம்’’ - முந்தை என்பது வலிந்து நின்றது
2. ‘‘தண்டையினக்கிளி’’ - தட்டை என்பது மெலிந்து நின்றது
3. ‘‘கற்பக நீழல்’’ - நிழல் என்பது நீண்டு நின்றது
4. ‘‘நன்றென்றேன் தியேன்’’ - தீயேயென்பது குறுகி நின்றது
5. ‘‘நெல்விளையும்மே’’ - விளையுமே என்பது மகரமெய்விரிந்து நின்றது.
6. நீ நாடு கென - நா. கெவென வென்பது அகரத்தொக்கு நின்றது.

புணர்ச்சி விகாரத்தும் செய்யுள் விகாரத்தும் வேறுபாடு புணர்ச்சி விகாரம், நிலைமொழி வருமொழி உலகவழக்குச் செய்யுள் வழக்கு என்னும் இரண்டுக்கும் உரியதாம். செய்யுள் விகாரம் செய்யுளில் மாத்திரமே வரும், உலக வழக்கில் வராது, இது தனிமொழி தொடர் மொழி இரண்டுக்கும் பொது.

**ஒருவழி மூவழிக் குறைதலு மனைத்தே (6)**

ஒரு சொல்லினுடைய முதல் இடை கடை என்னும் மூன்றில் ஓரிடத்து குறைந்து வருதலும் அச்செய்யுள் விகாரமாகும்.

(உம்) மரையிதழ் - தாமரை என்பது முதல் குறைந்தது

ஓதி முதுபோத்து - ஓந்தி என்பது இடை குறைந்தது

நீலுண் துகிலிகை - நீலம் என்பது கடைக் குறைந்தது

தொகுத்தல் விகாரம் பகுபதத்திலும், முதலிடைகடைக்குறை விகாரங்கள் பகாபதத்திலும் வருமென வேறுபாடு கொள்க.

**புணர்ச்சி விகாரத்தில் வரும் ஐயத்தை நீக்குதல்**

**ஒரு புணர்ச்சிக்கு இரண்டு மூன்று முறப்பெறும் (7)**

ஒரு புணர்ச்சிக்கே, ஒரு விகாரமேயன்றி இரண்டு விகாரங்களும் மூன்று விகாரங்களம் வரப்பெறும்.

(உம்) யானை+கொம்பு=யானைக்கொம்பு - தோன்றல்

நிலம்+பனை=நிலப்பனை - கெடுதலும் தோன்றலும்

பனை+காய்=கனங்காய் - கெடுதலும் தோன்றலும் திரிதலும்

**பொதுப்புணர்ச்சி**

**உயிரீற்றுக்கும் மெய்யீற்றுக்கும் பொது**

**எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும்**
**முன்வரு ஞநமய வக்க ளியல்புங்**
**குறில்வழி யத்தனி யைந்நொது முன்மெலி**
**மிகலுமா ணளனல வழிநத் திரியும் (8)**

இருபத்து நான்கு எழுத்துக்களையும் இறுதியாகவுடைய எல்லாவகைச் சொற்களுக்கும் முன்னே வருகின்ற ஒகர நகர மகர யகர வகரங்கள் இயல்பாதலும், தனிக்குற்றெழுத்தின் பின் நின்ற யகர மெய்கும், ஓரெழுத்தொரு மொழியாகிய உயிர் உயிர்மெய் என்னும் ஐகாரத்திற்கும், ஓரெழுத்தொருமொழியாகிய நொ என்பதற்கும் து

என்பதற்கும் முன்வருகின்ற ஞகரமகரங்கள் மிகுதலும் ஆகும். ணகர, ளகர, னகர, லகர மெய்களின் பின்வருகின்ற நகரமானது திரியும்.

புணரியலில் அல்வழி வேற்றுமைகளில் ஒன்றை வெளிப்படையாக வாயினும் குறிப்பாகவாயினும் கூறாத இடங்களில் எல்லாம் அவ்விரண்டையுங் கொள்ளல் வேண்டும்.

ஞநமயவக்கள் என்றது மெல்லின இடையினங்களில் மற்றை எழுத்துக்கள் மொழிக்கு முதலாகா வாதலால் பின்வரும் சூத்திரங்களில் வலி, மெலி, இடை என்பனவும் அந்தந்த இனங்களில் மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களையே குறிக்கும்.

(உ.ம்) 1. அல்வழி வேற்றுமை

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| இன+ஞாயிறு=இனஞாயிறு | வலி+ஒமலி=வலிஒமலி |
| பனை+நீண்டது=பனைநீண்டது | பூ+நீட்டி=பூநீட்சி |
| பொன்+மெலிது=பொன்மெலிது | மண்+மாட்சி=மண்மாட்சி |
| வேர்+யாது=வேர்யாது | கல்+யானை=கல்யானை |
| எ.்.கு+வலிது=எ.்.குவலிது | வாள்+வலிமை=வாள்வலிமை |

ஓ நமய வக்கள் இயல்பாயின.

2. அல்வழி வேற்றுமை

| அல்வழி | வேற்றுமை | |
|---|---|---|
| மெய்+ஞான்றது=மெய்ஞ்ஞான்றது | ஞாற்சி=மெய்ஞ்ஞாற்சி | குறில் |
| மெய்+நீண்டது=மெய்ந்நீண்டது | நீட்சி=மெய்ந்நீட்சி | |

வழிய

| | | |
|---|---|---|
| மெய்+மாண்டது=மெய்ம்மாண்டது | மாட்சி=மெய்ம்மாட்சி | |
| கை+ஞான்றது=கைஞ்ஞான்றது | ஞாற்சி=கைஞ்ஞாற்சி | தனி ஐ |
| நீண்டது=கைந்நீண்டது | நீட்சி=கைந்நீட்சி | |
| மாண்டது=கைம்மாண்டது | மாட்சி=கைம்மாட்சி | |

குறில் வழி யதனி ஐ முன்மெய் மிக்கன.

நொ+ஞொள்ளா+நொஞ்ஞொள்ளா து+ஞெள்ளா+துஞ்ஞெள்ளா

நாகா =நொந்நாகா நாகா =துந்நாகா

மாடா =நொம்மாடா மாடா =தும்மாடா

நொ, து, முன் மெலி மிக்கன. இவை வினையாதலால் அல்வழி நொ-வருந்து, து- உண், இவை இரண்டும் ஒருமை ஏவல் ஞெள்ளா முதலியன விளிப்பெயர்.

| 3. அல்வழி | வேற்றுமை |
|---|---|
| மண்+நீண்டது=மண்ணீண்டது | மண்+நீட்சி=மண்ணீட்சி |
| முள்+நீண்டது=முண்ணீண்டது | முள்+நீட்சி=முண்ணீட்சி |
| பொன்+நீண்டது=பொன்னீண்டது | பொன்+நீட்சி=பொன்னீட்சி |
| கல்+நீண்டது=கன்னீண்டது | கல்+நீட்சி=கல்னீட்சி |

ண, ள, ன, ல வழி ந திரிந்தது.

**பொதுப்பெயர் உயர்திணைப் பெயர் ஈறு**

**பொதுப்பெய ருயர்திணைப் பெயர்க ளீற்றுமெய்**
**வலிவரி னியல்பாம் ஆவி யரமுன்**
**வன்மை மிகா சில விகாரமா முயர்திணை (9)**

இருதிணைகட்கும் பொதுவான பெயர்களும், உயர்திணைப் பெயர்களும் இறுதியிலுள்ள மெய்கள், வருமொழி முதலில் வல்லெழுத்து வந்தால் இயல்பாகும். பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்களின் ஈற்றில் வருகின்ற உயிரெழுத்துக்களின் முன்னும் யகர ரகர மெய்களின் முன்னும் வருகின்ற, வல்லெழுத்துக்கள் மிகாவாம். இவ்வாறன்றி, மெய்யீறும் உயிரீறுமாகிய சில உயர்திணைப் பெயர்கள் நாற்கணங்களோடும் புணருமிடத்து, நிலைமொழி வருமொழிகள் விகாரப்பட்டு வருதலும் உண்டு.

பொதுப்பெயராவது: உயர்திணை அ∴றிணை இரண்டுக்கும் பொதுவாய் வரும் பெயர்.

பொதுப்பெயர் விரவுப்பெயர் என்பன ஒருபொருட்சொற்கள், நாற்கணமாவன: வன்கணம், மென்கணம், இடைக்கணம், உயிர்க்ணம்.

வல்லினம் வந்தால திரிதற்கு உரிய நிலைமொழி யீற்று மெய்யெழுத்துக்கள் (ண், ள், ன், ல்) திரியாமல் இயல்பாதல் பற்றி ஈற்றுமெய் இயல்பாகும் என்றும், ஆவியரக்களின் முன் மிகுதற்கு உரிய வருமொழி முதல் வல்லெழுத்துக்கள், மிகாமல் இயல்பாதல் ப்றி வன்மைமிகா என்றும் பிரித்துக் கூறினார்.

(உ.ம்)

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| ஆண்+குறியன்=ஆண்குறியன் | ஆண்+கை=ஆண்கை |
| ஆண்+சிறிது=ஆண்சிறிது | ஆண்+செவி=ஆண்செவி |
| சாத்தன்+தீயன்=சாத்தன்றீயன் | சாத்தன்+தலை=சாத்தன்றலை |
| நான்+சிறியேன்=நான்சிறியேன் | சாத்தன்+புறம்=சாத்தன் புறம் |

எனப் பொதுப் பெயரீற்று மெய் வலிவர இயல்பாயின.

‘சாத்தன்’ என்பது ஒரு தெய்வத்தின் பெயராதலானும் மனிதர்க்கும் விலங்குக்கும் பெயராக இடப்படுதலாலும், இருதிணை பொதுப்பெயராம்.

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| அவள்+குறியள்=அவன்குறியள் | தையல்+பெருமை=தையல்பெருமை |
| மகன்+சிறியன்=மகன் சிறியன் | மகன்+தலை=மகன்றலை |
| குரிசில்+பெரியன் =குரிசில்பெரியன் | வேள்+சிறுமை=வேள் சிறுமை |

என உயர்திணைப் பெயரீற்று மெய் வலிவர இயல்பாயின.

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| பிள்ளை+சிறியன் =பிள்ளைசிறியன் | சாத்தி+கை=சாத்திக்கை |
| பிள்ளை+சிறிது=பிள்ளைசிறிது | சாத்தி+செவி=சாத்திசெவி |
| நீ+குறியை=நீகுறியை | தாய்+தலை=தாய்தலை |
| நீர் +குறியீர் =நீர்குறியீர் | தாய் +பொருள் =தாய்பொருள் |

எனப் பொதுப் பெயரீற்று ஆவி யகர ரகரமுன் வன்மை மிகாவாயின.

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| நம்பி+குறியன் =நம்பிகுறியன் | நங்கை+தலை=நங்கைதலை |
| சேய் +சிறியன் =சேய்சிறியன் | சேய் +சிறுமை=சேய்சிறுமை |
| அவர் +பெரியர் =அவர்பெரியர் | அவர் +பெருமை=அவர்பெருமை |

என உயர்திணைப் பெயரீற்று ஆவி, யகர, ரகர முன் வன்மை மிகாவாயின.

3. சில விகாரமனா உயர்திணை என்றற்கு, வருமொழி முதலெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமும் கொள்ளப்பட்டன.

(உம்)

கபிலன் +பரணன் =கபிலபரணன்

நம்பி+கொற்றன் =நம்பிக்கொற்றன்

வடுகன் +நாதன் =வடுகநாதன்

அரசன் +வள்ளல் =அரசவள்ளல்

விராடன் +அரசன் =விராடவரசன்

ஆசிவகர் +பள்ளி =ஆசிவகப்பள்ளி

மக்கள் +குணம் =மக்கட்குணம்

நளன் +வெண்பா =நளவெண்பா

குமரன் +கோட்டம் =குமரக்கோட்டம்

என இருவழியும் உயர்திணையுள் சில தமக்கு ஏற்றபடி விகாரமாயின.

**வினாப்பெயர் முன்னும் விளிப்பெயர் முன்னும் வல்லினம்**

**ஈற்றியா வினாவிளிப் பெயர்முன்வலி யியல்பே (10)**

இறுதியில் வருகின்ற ஆ ஓ எ என்னும் மூன்று வினா வெழுத்துக்களுக்கும் யா என்னும் வினாப்பெயர்க்கும், உயிரீறும் மெய்யீறுமாகிய விளிவேற்றுமைப் பெயர்களுக்கும் முன்வருகின்ற வல்லெழுத்துக்கள் இயல்பேவாம்.

(உம்) அல்வழி வேற்றுமை

1. அவனா கொற்றனோ சாத்தனே கொண்டான் =அவனாகொண்டான்

சென்றான் =அவனோ சென்றான்

தந்தான் =அவனா தந்தான்

போனினான் =அவனா போயினான்

என ஈற்று வினாமுன் வலி இயல்பாயின.

2. அல்வழி வேற்றுமை

யா +குறியன =யாகுறியன தந்தான் =யாதந்தான்

சிறியன =யாசிறியன பார்த்தான் =யாபார்த்தான்

என யா வினாமுன் வலி இயல்பாயின.

3. பொன்னா +கொள் =பொன்னாகொள் தோழி+தா =தோழீதா

பிள்ளாய் +செல் =பிள்ளாய் செல் மக்காள் +போம் =மக்காள் போம்

என விளிப்பெயர் முன் வலி இயல்பாயின.

ஈற்றுவினா மூன்றும் விளிப்பெயரும் அல்வழி, யாவினாப் பெயர் அல்வழி வேற்றுமை இரண்டுக்கும் பொது.

**முன்னிலை வினை முன்னும், ஏவல் முன்னும் வல்லினம்**

**ஆவி யரழ விறுதிமுன் னிலைவினை**
**ஏவல்முன் வல்லின மியல்பொடு விகற்பே (11)**

உயிரையும், யரழ என்னும் மூன்று மெய்களையும், ஈறாக உடைய முன்னிலை வினைமுற்றுக்களுக்கும் என வினைமுற்றுக்களுக்கும், முன்வருகின்ற ‘கசதப்பக்கள்’ இயல்புடனே விகற்பமுமாம். ஒன்றுக்கே இயல்பாயும் மிக்கும் வரும்.

முன்னிலை வினைக்கும், ஏவல் வினைக்கும் வேறுபாடு, முன்னிலை வினை நடந்தாய், நடக்கின்றாய் நடப்பாய் என்றாற் போல மூன்று காலத்தும் தனித்தனி வருவதாய் முன்னிற்கும் பொருளினது தொழிலை உணர்த்தி ஏவற்பொருள் படாதது என்றும், ஏவல்வினை நட நடமின் நடவும் என்றாற்போல எதிர்காலத்து மாத்திரமே வருவதாய் முன்னிற்கும் பொருளைக் கட்டளையிடுவது என்றும் வேறுபாடு காணப்படும். ஏவலெல்லாம் முன்னிலை வினையாம். முன்னிலை வினையெல்லாம் ஏவலாகா.

விகற்பமானது ஒரு புணர்ச்சிக்கே ஒருகால் ஒருவகையாகவும் மற்றொருகால் வேறுவகையாகவும் வருவது.

1. உண்டனை உண்டாய் கொற்ற=உண்டனைகொற்ற தேவா=உண்டனைதேவா

சாத்தா=உண்டாய் தாத்தா புலவா =உண்டாய் புலவா

உண்பீர் கொற்றரே=உண்பீர்கொற்றரே தேவரே=உண்பீர்தேவரே

சாத்தரே=உண்பீர்சாத்தரே புலவரே=உண்பீர் புலவரே

என ஆவியா இறுதி முன்னிலை வினைமுன் வலி இயல்பாயின. ழகரமெய்யீற்றுவிகுதி இல்லாமை பற்றி ழகரமெய் முன்னிலை, வினைக்கு ஈறாகாமையல், அதற்கு உதாரணம் இல்லை.

முன்னிலை வினைமுன் விகற்பித்தல் வந்தவிடத்துக்கொள்க.

2. வா +கொற்ற =வாகொற்ற சேர் +தேவா =சேர்தேவா

பாய் +சாத்தா =பாய்சாத்தா வாழ் +புலவா =வாழ்புலவா

என ஆவி யரழ இறுதி ஏவல் வினைமுன் வலி இயல்பாயின.

நட + கொற்ற = நடகொற்ற நடக்கொற்றா - ஏவல்வினைமுன்

எய் + கொற்றா = எய்கொற்ற எய்கொற்றா - வலிவிகற்பித்தன

இவையெல்லாம் வினைமுற்றுத் தொடராதலால், அல்வழிப் புணர்ச்சி

**உயிரீற்றுச் சிறப்புப் புணர்ச்சி**

புணரியல் மூன்றனுள் உயிரீற்றுப் புணரியல் முதலாதலால் அதில் முதற்பதினொரு சூத்திரங்களால் இதுவரையிலும் புணர்ச்சிவிதியை உயிரீற்றுக்கும் மெய்யீற்றுக்கும் பொதுப்படக் கூறி இனி உயிரீற்றுப் புணர்ச்சிச் சிறப்புவிதி கூறுகின்றார்.

**உயிர்முன் உயிர் புணர்ச்சி**

**இஈ ஐவழி யவ்வும் ஏனை**
**உயிர்வழி வவ்வும் ஏமனில் விருமையும்**
**உயிர்வரி னுடம்படு மெய்யென் றாகும் (12)**

வருமொழி முதலில் உயிர் வந்தால், இகர ஈகார ஐகாரங்களின் பின்னே, யகரமெய்யும், அ ஆ உ ஊ ஒ ஓ ஔ என்னும் இவ்வேழு உயிர்களின் பின்னே வகரமெய்யும், ஏகாரத்தின் பின்னே இவ்விரண்டும் உடன்படு மெய்யாகவரும்.

உடன்படுமெய்: நிலைமொழி ஈற்றிலும் வருமொழி முதலிலும் நின்ற உயிர்களை உடம்படுத்தும் மெய்.

(உம்) அல்வழி வேற்றுமை

மணி+அழகிது=மணியழகிது +அழகு =மணியழகு - இஈஐ முன் யகரம் வந்தது.

தீ +அழகிது =தீயழகிது } +அழகு =தீயழகு

மலை +அழகிது =மலையழகிது } அழகு =மலையழகு

2. விள +அழகிது =விளவழகிது +அழகு =விளவழகு
பலா +அழகிது =பலாவழகிது +அழகு =பலாவழகு
கடு +அழகிது =கடுவழகிது +அழகு =கடுவழகு
பூ +அழகிது =பூவழகிது +அழகு =பூவழகிது
} மற்றை உயிர்களின் முன் விகாரம் வந்தது

நொ +அழகிது =நொவ்வழகிது +அழகு =நொவ்வழகு

கோ +அழகிது =கோவழகிது +அழகு =கோவழகு
கௌ +அழகிது =கொளவழகு +அழகு =கௌவழகு

அவனே +அழகன் =அவனேயழகன் என இடைச்சொல் ஏமுன் யகரமும்,

ஏ+எலாம் =ஏவெலாம், சே+உழவு =சேவுழவு, தே +அடியார் =தேவடியார் எனப் பெயர்ச்சொல் ஏமுன் இருவழியும் வகரமும்

சே+அடி =சேயடி, சேவடி எனச் செம்மை என்னும் பண்புப்பெயரின் விகாரமாகிய 'சே' முன் யகரமும் வகரமும் உடம்படு மெய்யாக வந்தன.

**எகரவினா முன்னும் சுட்டு முன்னும் நாற்கணமும் புணர்தல்**

**எகர வினாமுச் சுட்டின் முன்னர்**
**உயிரும் யகரமு மெய்தின் வவ்வும்**
**பிறவரி னவையுந் தூக்கிற் சுட்டு**
**நீளின் யகரமுந் தோன்றுதல் நெறியே (13)**

எகர வினாவிடைச் சொல்லுக்கும், மூன்று சுட்டிடைச் சொற்களுக்கும், முன்னே உயரும் யகரமும் வந்தால், வகர மெய்யும், யகரமொழிந்த மெய்கள் வந்தால் அவ்வந்த மெய்களும், செய்யுளில் சுட்டெழுத்து நீளுமிடத்து யகரமெய்யும் மிகுதல் முறையாம்.

(உம்) 1. அணி =எவவ்ணி யானை =எவ்யானை எகரவினா முச்சுட்டின் முன்னர் உயிரும் யகரமும் வர வகரமெய் தோன்றிற்று.

| | | | |
|---|---|---|---|
| எ | குதிரை =எக்குதிரை | நாடு =எந்நாடு | பிற அவ்வந்தமெய் தோன்றின |
| அ | சேனை =எச்சோனை | மனை =எம்மனை | |
| இ | தண்டு =எத்தண்டு | விதம் =எவ்விதம் | |
| உ | படை =எப்படை | ஙனம் =எஙஙனம் | |

ஞாலம் =எஞ்ஞாலம்

3. ஆ இடை ஆயிடை சுட்டு நீண்டவிடத்து யகரம் தோன்றிற்று.

இவையெல்லாம் இடைச்சொற்றொடராதலால் அல்வழிப்புணர்ச்சி.

மேலும் யாங்ஙனம் என யா வினாவின் முன்னும், ஆங்ஙனம், ஈங்ஙனம், ஊங்ஙனம் என நீண்ட சுட்டின் முன்னும் ஙகரம் மிகுதலும், ஈது, அங்கு, ஈங்கு, ஊங்கு, ஆண்டு, ஈண்டு என சுட்டுப்பெயர் நீளலும், 'விண்வத்துக் கொட்டும்' விண்+அத்து =விண்வத்து, 'செல்வழிச்செல்க' என மெய்யீற்றின் முன் உயிர்வர இப்படி உடம்படு மெய்யல்லாத வகரம் பெறுதலும் கொள்க, இவ்வாறு மெய்யீற்றின் முன்வரும் வகரத்தை மெய்யீற்றுடம்படும்மெய் என்பார் நச்சினார்க்கினியர்.

**குற்றியலிகரத்தின் முன்னும் சில முற்றியலிகரத்தின் முன்னும் உயிரும் யகரமும் புணர்தல்**

**உயிர்வரி னுக்குறள் மெய்விட் டோடும்**
**ய வ்வரி னிய்யாம் முற்றுமற் றோரொவழி (14)**

குற்றியலுகரமானது வருமொழி முதலில் உயிர் வந்தால் தனக்கு இடமாகிய மெய்யை விட்டு கெடும் வருமொழி முதலில் யகரம் வந்தால் அவ்வுகரம் இகரமாகத் திரியும் முற்றியலுகரமும் ஒவ்வோரிடத்து அவ்வாறேயாகும். உயிர்வர உகரங் கெடுதலும் யகரம்வர உகரம் இகரமாகத் திரிதலும் அவ்விரண்டு விதியையும் பெறும்.

உக்குறள் - மாத்திரை குறுகிய உயரம்

(உம்) குற்றியலுகரம் முற்றியலுகரம்

வரகு+அருமை=வரகருமை கதவு+அருமை=கதவருமை (வேற்றுமை)

வரகு+யாது=வரகியாது கதவு+யாது=கதவியாது (அல்வழி)

**உயிரின் முன் வல்லினம் புணர்தல்**

**இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்**
**கசதப மிகும் விதவாதன மன்னே (15)**

இயல்பினாலாவது, விதியினாலாவது மொழிக்கு ஈறாக நின்ற உயிர்களின்முன், வருமொழி முதலில் வருகின்ற கசதபக்கள் பெரும்பாலும் இரட்டிக்கும் பின் சிறப்பு விதியால் சொல்லாதவைகள்.

இயல்பு உயிரீறாவது – விகாரப்படாமல் இயற்கையாக நின்ற உயிர் சொல்லுக்கு இறுதியாக நிற்பது.

(உம்) விள, பலா, மலை முதலியன.

உயிரீறாவது – மொழிக்கு இறுதியில் இயற்கையாக நின்ற உயிராவது மெய்யாவது ஒருவிதி பற்றி நீங்கி மற்றோர் உயிராக நிற்பது.

(உம்) ஒன்று, ஒற்றை, மரம்: மர முதலியன.

| (உம்) அல்வழி | வேற்றுமை |
|---|---|
| ஆட(ச்) சென்றான் | வாழை(ப்)பழம் இயல்பு உயிரீறு |
| நேற்றை(ப்) பொழுது | மர(க்)கிளை – விதி உயிரீறு |

பின் சிறப்பு விதியிற் சொல்லாதவை பெரும்பாலும் மிகும். எனவே சிறப்பு விதியில் மிகாவென்று சொன்னவை சிறுபான்மை மிகும் என்றும் கூறினாராயிற்று. அவை வருமாறு,

1. ஏரிகரை, மலைகிழவோன் -வேற்றுமை

   கூப்புகரம், நாட்டு புகழ் -அல்வழி

பின் சிறப்பு விதியில்லாதவை இருவழியிலும் மிகவாயின.

2. நொ(க்)கொற்றா ஏவல்முன் வல்லினம் இயல்பொடு விகற்பே

   து(க்)கொற்று எனச் சொன்ன சிறப்புவிதி பெறாமல் மிக்கே வந்தன.

இச்சூத்திரத்து, கசதப என்றதை மேல்வருஞ் சிறப்புவிதிச் சூத்திரங்களில் கூட்டிக்கொள்க.

## சிறப்புவிதி

### உயிரீற்று மரப்பெயர்க்குச் சிறப்புவிதி

**மரப்பெயர் முன்ன ரினமெல் லெழுத்து**
**வரப் பெறு னவுமுள வேற்றுமை வழியே (16)**

வேற்றுமைப் புணர்ச்சியில், உயிரீற்றுச் சில மரப்பெயர்கட்கு முன் சொன்ன பொதுவிதிப்படி வருகிற மெல்லெழுத்து மிகாமல் அவற்றுக்கு இனமாகிய மெல்லெழுத்துத் தோன்றப் பெறும் தொடர்களும் உளவாம்.

(உம்) விள+காய் =விளங்காய், மா+பழம் =மாம்பழம்

இன மெல்லெழுத்தும் என உம்மைக்கொடுத்துச் சொல்லாமையால் இவ்வுதாரணங்கள் பொதுவிதியைப் பெறும் என அறிக.

பெறுவனவும் என்ற உம்மையால் மெல்லெழுத்துப் பெறாமல் பொதுவிதியால் வல்லெழுத்து மிகப்பெறுவன பெரும்பாலான எனக் கொள்க. (உம்) பலாக்காய், அத்திப்பூ, வாழைப்பழம், இலந்தைக்கனி முதலியன.

யாங்கோடு, யாக்கோடு, காயாங்கோடு, காயாக்கோடு என மெல்லெழுத்துப் பெற்று விகற்பத்து வருதலை உரையாற்கொள்க. பெறுவனவும் என்ற உம்மையினாலேயே இவ்விகற்பங்கொள்ளுதலும் ஒன்று.

**அகரவீற்றுச் சிறப்புவிதி**

**சில அகரவீற்றின் முன் வல்லினம் இயல்பாதல்**

**செய்யின வென்னும் வினையெச்சம் பல்வகைப்**
**பெயரி னெச்சமுற் றாற னுருபே**
**அஃறிணைப் பன்மை யம்மமுன் னியல்பே (17)**

செய்யிய என்னும் வாய்ப்பாட்டு எதிர்கால வினையெச்சத்திற்கும் பலவகைப்பட்ட அகரவீற்றுப் பெயரெச்சங்கட்கும், பல வகைப்பட்ட அகரவீற்று வினைமுற்றுக்களுக்கும், ஆறாம் வேற்றுமை அகரவுருக்கும், அகரவீற்றுப் பலவின்பாற் பெயர்கட்கும், அம்மா என்னும் உரையசையிடைச் சொல்லுக்கும் முன்னே வருகின்ற ‘கசதபக்கள்’ இயல்பேவாம்.

(உம்)

உண்ணிய தந்தான், செய்யிய போனான்+செய்யிய வென்வினை எச்சம் அல்வழி

உண்ட குதிரை, பெரிய பொருள் + பல்வகைப் பெயரினெச்சம் அல்

உண்டன குதிரைகள் வாழிய கொற்றா, என்பசிலா் + பல்வகைமுற்று, அல்

தனகைகள் தனதாள்கள் + ஆறனுருபு, வேற்றுமை

பலகுதிரைகள், சிலசெய்தான் + இருவழியிலும் அஃறிணைப் பன்மை

அம்ம கொற்றா, அம்ம தேவா + அம்ம என்னுமிடைச்சொல் அல்

**வாழிய என்பதற்குச் சிறப்பு விதி**

**வாழிய வென்பத னீற்றி னுயிர்மெய்**
**ஏகலு முரித்தஃ தேகினு மியல்பே (18)**

1. வாழிய என்னும் வியங்கோள் வினைமுற்றினுடைய, இறுதியிலுள்ள யகர உயிர்மெய் நீங்குதலும், உரியதாம். 2. அவ்வுயிர், மெய் நீங்கி இகர ஈறாய் நின்றாலும் அதன்முன் வருகின்ற வல்லினம் பொதுவிதியால் மிகாமல் சிறப்பு விதியிற் கூறியபடி இயல்பேயாம்.

(உம்)

1. ஆவாழிய +ஆவாழி = ஈற்று உயிர்மெய் நீங்கிற்று

2. வாழிய +கொற்றா =வாழிகொற்றா } ஈற்று உயிர்மெய் நீங்கி வலி
+ சாத்தான் =வாழி சாத்தா } இயல்பாயிற்று.

**'சாவ' என்பதற்குச் சிறப்பு விதி**

**சாவவென் மொழியீற் றுயிர்மெய் சாதலும் விதி (19)**

சாவ என்னுஞ் செயவான் வாய்பாட்டு வினையெச்சத்தினுடைய இறுதியிலுள்ள வகர உயிர்மெய் வருமொழியொடு புணர்கையில் கெடுதலும் விதியாகும்.

(உ.ம்) சாவ +குத்தினான் =சாக்குத்தினான்

**பல சில என்பவற்றிற்குச் சிறப்புவிதி**

**பலசில வெனுமிவை தம்முன் தாம்வரின்**
**இயல்பும் மிகலும் அகர மேக**
**லகரம் றகர மாகலும் பிறவரின்**
**அகரம் விகற்ப மாகலு முறபி (20)**

பல சில வென்னும் இவ்விரு சொல்லும், தமக்கு முன்னே தாமே வருமாயின் பல என்பதற்கு முன் பல என்பதும் சில என்பதற்கு முன் சில என்பதும் வந்தால: 1. வருமொழி முதல் மெய் இயல்பாதலும் 2. மிகுதலும் 3. அகரம் ஏக லகரம் றகமாதலும் நிலைமொழி இறுதியில் நின்ற அகரங்கெட லகர மெய் றகரமெய்யாகத் திரிதலும் 4. இவ்விரு சொற்களின் வேறுசொற்களிலொன்று வந்தால், நிலைமொழி இறுதியில் நின்ற அகரம் நிற்பதும் நீங்குவதுமாகிய விகற்பித்தலும் உள்ளனவாம்.

(உ.ம்)

1. பலபல சிலசில =இயல்பாயின.
2. பலப்பல, சிலச்சில =மிக்கன.
3. பற்பல, சிற்சில =அகரங்கெட லகரம் றகரமாயிற்று.
4. பலகலை, பல்கலை சிலவளை, சில்வளை பிறவர அகரம் நின்றும்
   சிலநாள், சின்னாள் பலவாயம் பல்லாயம் நீங்கியும் விகற்பித்தது.

**அகரவீற்றுச் சிறப்புவிதி**

**ஆகாரத்தின்முன் வல்லினம்**

**அல்வழி யாமா மியாமுற்று முன்மிகா (21)**

அல்வழிப் புணர்ச்சியில் 1. ஆ என்னும் பெயாக்கும், மா என்னும் பெயர்க்கும், 2. மியா என்னும் முன்னிலையசை இடைச்சொல்லுக்கும் 3. ஆகாரவீற்று எதிர்மறைப் பலவின்பால் வினைமுற்றுக்கும் முன்னே வருகின்ற வல்லினம் இயல்பாகும்.

(உம்) 1. ஆ குறிது, மா சிறிது – ஆ, மா முன் வலி இயல்பாயிற்று

2. கேண்மியா தேவா – மியாமுன் வலி இயல்பாயிற்று

3. உண்ணா பன்றிகள் - முற்றுமுன் வலி இயல்பாயிற்று

காட்டுப்பசு என்னும் பொருளைத் தரும் ஆமா என்பதன் முன் குறிது, சிறிது எனச் சேர்க்க வலி இயல்பாகும்.

வினையாலணையும் பெயரின் முன்னும், வினைமுற்று வினையெச்சமானவற்றின் முன்னும் மிகாமையும் கொள்க.

(உம்) உண்ணா கிடந்தன, சென்றன, தந்தன, போயின, இங்கே உண்ணா என்றது வினையாலணையும் பெயராயின் உண்ணாதனமாகிய பிராணிகள் கிடந்தன எனவும், வினைமுற்று வினையெச்சமாயின் உண்ணாதனவாய்க் கிடந்தன என்று பொருள்படும்.

இவ்வாய்ப்பாட்டுச் சொல் ஈறுகெட்டு எதிர்மறைப் பெயரெச்சமாயின் உண்ணாகுதிரை என்றும், ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சமாயின் உண்ணாக் கிடந்தன என்றும், உடன்பாட்டு இறந்தகால வினையெச்சமாயின் உண்ணாக் கிடந்தான் என்றும், பொதுவிதியால் வலிமிக்கு வருமென அறிக. இவற்றிற்கு முறையே உண்ணாத, உண்ணாமல், உண்டு என்று பொருள். உண்ணாது என்ற ஒன்றன்பால் முற்று உண்ணா எனத் தொகுத்தல் விகாரப்பட்டு வரும்பொழுது அதன்முன் வலி இயல்பாம் என உணர்க.

**குறிலணைந்த ஆகாரத்துக்குச் சிறப்புவிதி**

**குறியதன் கீழாக் குறுகலு மதனொடு**
**உகர மேற்றலு மியல்புமாந் தூக்கின் (22)**

குற்றெழுத்தின் கீழ் நின்ற ஆகாரம் 1. அகரமாகக் குறுகுதலும் 2. அவ்வாறு குறுகுதலுடனே உகரம் பெறுதலும், 3. அவ்விரண்டு மில்லாமல் தன்னியல்பில் நிற்றலும் ஆகிய இம்மூன்று விதியும் செய்யுளில் வரும்.

(உம்) 1. ‘‘நிலவிரி கானல்’’ – குறியதன் கீழ் ஆ, குறுகியது

2. ‘‘என் செய்யுமொ நிலவு’’ – குறுகி உகரமேற்றது

3. ‘‘நிலா வணங்கு’’ - இயல்பாயிற்று

செய்யுளில் இம்மூன்றும் ஆமெனவே, வழக்கில் இரண்டும் ஒன்றும் ஆம் என்றாராயிற்று. குறுகி உகரமேற்காமல் நிற்றல் வழக்கில் வராது.

(உம்) நிலவு, நிலா கனவு, கனா குறுகி உகரமேற்றலும் இயல்பும்

தாரா, மிடா, கடா இயல்பு மாத்திரம் இவை விகாரப்படா

**இகரவீற்றுச் சிறப்பு விதி**

**அன்றி இன்றி என்பன**

**அன்றி யின்றியென் வினையெஞ் சிகரந்**
**தொட்பினு ளுகர மாய்வரி னியல்பே (23)**

அன்றி, இன்றி என்னும் எதிர்மறைக் குறிப்பு வினையெச்சங்களின் ஈற்றிலுள்ள இகரம் செய்யுளில் உகரமாய்த் திரிந்து வந்தால் வருகின்ற ‘கசதபக்கள்’ இயல்பாகும்.

(உ_ம்)

“நாளன்று போகி” = அன்றி + போகி

“உப்பின்று புற்கை யுண்க” = இன்றி + புற்கை

உகரமாகத் திரியாவிடின், நாளன்றிப்போகி, உப்பின்றிப் புறகை எனப் பொதுவிதிப்படி வல்லெழுத்து மிகுமெனக் கொள்க.

**நாழி உரி என்பவற்றிற்குச் சிறப்புவிதி**

**உரிவரி னாழியி னீற்றுயிர் மெய்கெட**
**மருவும் டகர முரியின் வழியே**
**யகர வுயிர்மெய்யா மேற்பன வரினே (24)**

1. உரி என்னும் முகத்தலளவைப் பெயர் வருமொழியாக வந்தால் நிலைமொழியாக நின்ற நாழி என்னும் முகத்தளவுப் பெயரினது ஈற்றிலுள்ள ழி என்னும் உயிர்மெய் நீங்க டகரமெய் அவ்விடத்தில் வரும். 2. நிலைமொழியாக நின்ற உரி என்னும் முகத்தலளவுப் பெயரின் பின் யகர உயிர்மெய் வரும். அவ்வுயிர் மெய்வருவதற்கு ஏற்றமொழிகள் வருமொழியாக வந்து புணர்ந்தால் என்றவாறு,

(உ_ம்)

1. நாழி+உரி =நாடுரி - ழி கெட } டகரந் தோன்றியது
2. உரி+உப்பு =உரிய உப்பு+மிளகு=உரிய மிளகு } உரிவழி யகரந்தோன்றியது

உரி+பயறு =உரியபயறு+வரகு =உரிய வரகு

உரி இரண்டு கொண்டது நாழி

ஏற்பனவரின் எனவே ஏலாதவரின் உரியரிசி, உரியாழாக்கு என இச்சிறப்புவிதி பெறாமல் பொதுவிதி பெறுமெனக்கொள்க.

**புளி என்பதற்குச் சிறப்புவிதி**

**சுவைப்புளி முன்னின மென்மையுந் தோன்றும் (25)**

அறுசுவையுள் ஒன்றை உணர்த்துகின்ற புளி என்னும் பெயரின் முன் வல்லினம் வந்து புணர்ந்தால் அவ்வல்லெழுத்து மிகுதலன்றி அதற்கு இனமாகிய மெல்லெழுத்தும் தோன்றும்.

(உம்)

| | |
|---|---|
| புளி+கறி=புளிங்கறி | தயிர் =புளிந்தயிர் |
| புளி+சோறு=புளிஞ்சோறு | பாளிதம் =புளிம்பாளிதம் |

புளிப்பாகிய கறி எனவம், புளிப்பையுடைய கறி எனவும் விரிக்கப்படுவதால் இவையே வேற்றுமை அல்வழி இரண்டுக்கும் உதாரணம்.

**இகர ஐகார வீற்றுச் சிறப்புவிதி**

**அல்வழி இ ஐம் முன்ன ராயின்**
**இயல்பும் மிகலும் விகற்பமு மாகும் (26)**

அல்வழிப் புணர்ச்சியில் நிலைமொழியீற்று இகர ஐகாரங்களின் முன் வல்லினம் வருமாயின் 1. இயல்பாதலும் 2. பொது விதிப்படியே மிகுதலும் 3. விகற்பித்தலும் வரும்.

ஒப்பின் முடித்தல் என்னும் உத்தியால் ஐகார வீறும் உடன் கூறினார். பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்கட்கு விதி முன்னமே அமைந்திருத்தலால், இச்சூத்திரவிதி அஃறிணைப் பெயர்க்கும் வினை முதலியவற்றுக்குமாம்.

(உம்)

1. புலி +சிறிது =புலிசிறிது
   யானை +பெரிது =யானைபெரிது
   செடி+கொடி =செடிகொடி
   யானை+குதிரை =யானை குதிரை
   இடி+சுவர் =இடிசுவர்
   உரை+கல் =உரைகல்
   } இ ஐ முன் அல்வழியில் வலி இயல்பாயின
2. மார்கழி+திங்கள் =மார்கழித்திங்கள்
   ஆடி+கொண்டான் =ஆடிக்கொண்டான்
   } வலிமிக்கன

3. கிளி+குறிது =கிளிகுறிது, கிளிக்குறிது
கடி+கமலம் =கடிகமலம், கடிக்கமலம்
தினை+சிறிது =தினைசிறிது, தினைச்சிறது
} விகற்பித்தன

**ஈகாரவீற்றுச் சிறப்புவிதி**

**ஆப்பீமுன் நாற்கணம்**

**ஆமுன் பகரவீ யனைத்தும்வரக் குறுகும்**
**மேலன வல்வழி யியல்பா கும்மே (27)**

ஆ என்னும் பெயரின் நின்ற பகர ஈகாரம் (ஆப்பீ) இருவழியிலும் நாற்கணம் வந்தால் குறுகி இகரமாகும். அல்வழியில் மேல் 'அல்வழி ஐ' என்னும் சூத்திரத்தில் கூறிய விதி மூன்றில் குறிகில அதன்முன் வருகின்ற வல்லினம் இயல்பைப்பெறும்.

(உ_ம்) ஆப்பீ +அரிது =ஆப்பியரிது ஆப்பீ +நன்று =ஆப்பிநன்று

ஆப்பீ +குளிரும் =ஆப்பிகுளிரும் ஆப்பீ +வலிது =ஆப்பிவலிது

அல்வழி இயல்பாகும். எனவே வேற்றுமையில் ஆப்பிக் குளிர்ச்சி ஆப்பித்திரட்சி எனப் பொது விதிப்படியே வலி மிகு மெனக் கொள்க.

'பகரவி' என்றதும் 'பவ்வீ' என்பதும் இடக்கரடக்கல் =ஆப்பீ பசுச்சாணம்.

**சில ஈகார வீற்றின் முன் வலி**

**பவ்வீ நீமீ முன்ன ரல்வழி**
**இயல்பாம் வலிமெலி மிகலுமாம் மீக்கே (28)**

1. இடக்கர்ப்பெயராகிய பகர ஈகாரத்திற்கும் நீக்குதல் என்னும் பொருள் கொண்ட நீ என்ற முதநிலைத் தொழிற்பெயர்க்கும், மேலாகிய பண்பையும் மேலிடத்தையும் உயர்த்தும் மீ என்ற சொல்லுக்கும் முன்னே அல்வழிப் புணர்ச்சியில் வருகின்ற வல்லினம் இயல்பாகும். 2. இவற்றுள்ளே மீ என்னும் சொல்லுக்கு வல்லெழுத்து மிகுதலும் மெல்லெழுத்து மிகுதலும் ஆகும்.

(உ_ம்)

1. பீ +குறிது =பீகுறிது, சிறிது, தீது, பெரிது
நீ +கடிது =நீ கடிது, சிரிது, தீது, பாற்று
மீ +கண் =மீகண், செவி, தலை, புறம்
} இயல்பாயின.

2. மீகூற்று =மீக் +கூற்று = வலிமிக்கது

மீ +தோல் =மீந்தோல் = மெலிமிக்கது.

**உகரவீற்று சிறப்புவிதி**

**சில முற்றியலுகரத்தின் முன் வலி**

**மூன்றா றுருபெண் வினைத்தொகை சுட்டீறு**
**ஆகு முகர முன்ன ரியல்பாம் (29)**

ஒடு என்னும் மூன்றும் வேற்றுமை உருபுக்கும், அது என்னும் ஆறும் வேற்றுமை உருபுக்கும், இயல்பாயும் விகாரப்பட்டும் வரும் எண்ணுப்பெயர்க்கும், வினைத்தொகைக்கும், சுட்டுப்பெயர்க்கும் இறுதியாகிய முற்றியலுகரத்தின் முன்னே வருகின்ற வல்லினம் இயல்பாகும்.

(உ.ம்)

அவனோடு +கொண்டான் =அவனொடு கொண்டான் - மூன்றனுருபு

பொன்னது +செவி =பொன்னது செவி - ஆறனுருபு

ஏழு +தலை =ஏழுதலை - இயல்பெண்ணுப்பெயர்

ஒரு, இரு, அறு, எழு – புறம் - ஒருபுறம் விகார எண்ணுப்பெயர்

விடு +கணை =விடு கணை விரவு +படை =விரவுபடை வினைத்தொகை

அது +கண்டான் =அதுகண்டான் - } வேற்றுமை சுட்டுப்பெயர்

இது +உது +குறிது =இதுகுறிது - } அல்வழி

**'அது' என்பதற்குச் சிறப்புவிதி**

**அதுமுன் வருமன் றான்றாந் தூக்கின் (30)**

அது என்னிஞ் சுட்டுப்பெயர்முன் வருமொழியாக வருகிற அன்று என்னும் எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று செய்யுளில் ஆன்று என முதல் நீளும்.

(உ.ம்) அது +அன்று =அதான்று

அதன்று, அதுவன்று என நீளமாதலும் வரும்.

**குற்றியலுகரத்தின் முன் வலி: அல்வழி**

**வன்றொட ரல்லன முன்மிகா வல்வழி (31)**

வன்றொடரொழிந்த ஐந்து தொடர் குற்றியலுகரத்தின் முன்னும் வருகின்ற மெல்லினம் அல்வழிப்புணர்ச்சியில் இயல்பாம்.

(உ.ம்) ஆறு +தலை =ஆறுதலை +நெடித்தொடர்

எ∴கு +பெரியது =எ∴குபெரியது +ஆய்தத்தொடர்

வரகு +சிறிது =வரகுசிறிது +உயிர்த்தொடர்

வந்து +தந்தான் =வந்துதந்தான் +மென்றொடர்

எய்து +பொருள் =எய்துபொருள் +இடைத்தொடர்

வன்றொடரல்லன முன்மிகா என்றதனால் வன்தொடரின் முன் எழுத்துச்சிறிது, படித்துந்தந்தான் என அல்வழியில் வலிமிகும் என்க.

ஏழாம்வேற்றுமை இடப்பொருளுணர நின்ற அங்கு, இங்கு உங்கு, எங்கு, ஆங்கு, ஈங்கு, ஊங்கு, யாங்கு, ஆண்டு, ஈண்டு யாண்டு என்னும் மென்றொடர்க் குற்றியலுகர வீற்று இடைச்சொற்களின்முன் வரும் வல்லினம் மிகும்.

(உ.ம்)

அங்குக்கண்டான், இங்குச் சென்றான், உங்குதந்தான் எங்குப்பெற்றான், ஆங்குக்கற்றான், ஈங்குச் சேர்ந்தான், ஊங்குற் பார்த்தான், யாங்குக்கண்டான், ஆண்டுச்சென்றான், ஈண்டுத்தந்தான், யாண்டுப் போயினான் என வரும்.

ஏழாம் வேற்றுமைக் காலப்பொருளுணர நின்ற அன்று, இன்று, என்று பண்டு, முந்து என்னும் மென்தொடர்க் குற்றியலுகர வீற்று இடைச்சொற்களின் முன் வரும் வல்லினம் அன்று கண்டாள் இன்று சொன்னான், என்று தந்தான், பண்டு போயினான், முந்துபெற்றான் என இயல்பாயே முடியும்.

இவையெல்லாம் சொல்லால் அல்வழியும் பொருளால் வேற்றுமையாதலால் சில அல்வழிவிதியையும் சிலவேற்றுமை விதியையும் ஏற்றன.

**குற்றிலுகரத்தின் முன் வலி: வேற்றுமை**

**இடைத்தொட ராய்தத் தொடரொற் றிடையின்**
**மிகாநெடி லுயிர்தொடர் முன்மிகா வேற்றுமை (32)**

இடைத்தொடரும், ஆய்தத்தொடரும், ஒற்று இடையே மிகாத உயிர்த்தொடரும் ஆகிய இவற்றின் முன் வருகின்ற வல்லினம் வேற்றுமைப்புணர்ச்சியில் இயல்பாம்.

(உ.ம்)

மார்பு +கடுமை =மார்புகடுமை =இடைத்தொடர்

எஃகு +சிறுமை =எஃகு சிறுமை =ஆய்தத்தொடர்

நாகு +தீமை =நாகுதீமை =மிகாநெடிற்றொடர்

வரகு +கதிர் =வரகுகதிர் =மிகா உயிர்த்தொடர்

ஒற்றிடையின் மிகா நெடிலுயிர்த்தொடர்முன் மிக வேற்றுமை என்றதனால் வீடு, வீட்டு, வயிறு, வயிற்று என ஒற்று இடையில் மிகும். நெடிற்றொடர் உயிர்தொடர்க் குற்றியலுகரங்கட்கு, முன் வரும் வல்லினம். வீட்டுச்சுவர், வயிற்றுக்கடுப்பு என வேற்றுமையில் மூட்டுப்பூச்சி, வெளிற்றுப்பானை என அல்வழியிலும் மிக்கு வழிமென்று அறிக.

எனவே அறுவகைக் குற்றியலுகரங்களுள் இடைத்தொடர் ஆய்தத்தொடர் (ஒற்றிடைமிகாத) நெடிற்றொடர், (ஒற்றிடை மிகாத) உயிர்த்தொடர் இவற்றுக்குமுன் வேற்றுமை அல்வழி இரண்டிலும் வலி மிகாவென்றும் ஒன்றிடைக்கும் நெடிற்றொடர் வன்றொடர் இவற்றுக்குமுன் இருவழியிலும் வலிமிகு மென்றும், மென்றொடர்முன் அல்வழியில் மிகா வேற்றுமையில் மிகுமென்றுங் கூறியதாயிற்று.

**டுகர றுகர ஈற்றுச் சில குற்றியலுகரங்கட்குச் சிறப்புவிதி**

**நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள்**
**டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே (33)**

நெடிற்றொடர்களும் உயிர்த்தொடர்களுமாகிய குற்றியலுகர மொழிகளுள் அவ்வுகரம் ஏறிநின்ற டகர றகர மெய்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் பெரும்பாலும் இரட்டும்.

வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமும் கொள்க.

| (உ.ம்) நெடிற்றொடர் | உயிர்த்தொடர் |
|---|---|
| ஆடு +கால் =ஆட்டுக்கால் | முரடு +மனிதன் =முரட்டுமனிதன் |
| சோறு+வளம் =சோற்றுவளம் | வயிறு +இடை =வயிற்றிடை |

1. பெரும்பாலும் வேற்றுமையில் இரட்டும் எனவே டற ஒற்றுச் சிறுபான்மை வேற்றுமையில் இரட்டாமையும் 2. வேற்றுமையில் பெரும்பாலும் இரட்டும் எனவே ட, ற ஒற்றுச் சிறுபான்மை அல்வழியில் இரட்டுதலும் 3. டற ஒற்றுப் பெரும்பாலும் அல்வழியில் இரட்டும் எனவே பிற ஒற்றுக்கள் சிறுபான்மை இருவழியிலும் இரட்டுதலும் கொள்க.

(உ.ம்)

1. காடு +சென்றான் =காடு சென்றான்
   கிணறு +மூழ்கினால் =கிணறு மூழ்கினால் } வேற்றுமையில் டறஒற்றுக்கள் இரட்டாவாயின
2. காடு +அரண் =காட்டரண்
   களிறு +யானை =களிற்றியானை } அல்வழியில் டறஒற்றுக்கள் இரட்டின
3. வெருகு +கண் =வெருகுக்கண் - வேற்றுமை
   எருது +மாடு =எருதுமாடு –அல்வழி } இருவழியிலும் பிறஒற்றுக்கள் இரட்டின.

**மென்றொடரின் முன் நாற்கணம்: இருவழி**

**மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையில்**
**தம்மின் வன்றொட ராகா மன்னே (34)**

1. மென்றொடர் குற்றியலுகர மொழிகளுள் சில நிலைமொழிகள் வேற்றுமையில் தமக்கு இனமாகிய வன்றொடர்க் குற்றியலுகர மொழிகளாகத் திரியும்.
2. அவ்வாறு வன்றொடர் முற்றியலுகரமாகத் திரியா, வருமெழுத்தைச் சொல்லாமல் நாற்கணமுங்கொள்க.

(உ.ம்)

1. மருந்து +பை =மருந்துப்பை
   குரங்கு +மணம் =குரக்குமனம்
   இரும்பு +வலிமை =இருப்புவலிமை
   கன்று +ஆ =கற்றா } வேற்றுமையில் வற்றொடராயின

2. வண்டு +கால் =வண்டுக்கால்
   பந்து +நலம் =பந்துநலம்
   ரெண்டு +வளை =ரெண்டுவளை
   சங்கு +இனம் =சங்கினம் } வேற்றுமையில் வன்றொடராகாதன

சிவ வன்றொடராம், எனவே ஆகாதன பல வென்பது தானே வந்து இயையவும் 'ஆகாமன்' என்ற மிகையால் 1. அல்வழியிலும் சிறுபான்மை வன்றொடராலும் 2. இருவழியிலும் விகற்பித்து வருதலும் கொள்க.

(உ.ம்)

1. நஞ்சு+பகைமை =நச்சுப்பகைமை
   இரும்பு +மனம் =இருப்பு மனம்
   } அல்வழியில் வன்றொடராயின

2. குரங்கு +குட்டி =குரங்குக்குட்டி
   =குரக்குக்குட்டி
   பாம்பு +தோல் =பாம்புத்தோல்
   =பாப்புத்தோல்
   } வேற்றுமையில் விகற்பித்தன

   அன்பு +தளை =அன்புத்தளை
   =அற்புத்தளை
   } அல்வழியில் விகற்பித்தன

**சில குற்றியலுகரத்திற்குச் சிறப்பு விதி**

**ஐயீற் றுடைக்குற் றுகரமு முளவே (35)**

ஐகாரச் சாரியை இறுதியிற் பெற்று வருகின்ற குற்றியலுகர மொழிகளும் சில உண்டு.

மேற்சூத்திரத்தைச் சார வைத்ததனால் மென்தொடர் என்பது பெறப்படும் வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமும் கொள்க.

(உ.ம்) பண்டு +காலம் =பண்டைக்காலம்
இன்று +நாள் =இற்றைநாள்
} அல்வழி

முந்து +வளம் =முந்தைவளம்
அன்று +அழகு =அற்றையழகு
} வேற்றுமை

**திசைப்பெயர்க்குச் சிறப்புவிதி**

**திசையொடு திசையும் பிறவுஞ் சேறின்**
**நிலையீற் றுயிர்மெய் கல்லொற்று நீங்கலும்**
**றகரம் னலவாத் திரிதலு மாம்பிற (36)**

குற்றியலுகரவீறாகிய திக்கைக் குறிக்கும் பெயரொடு, திக்கைக் குறிக்கும் பெயரும், வேறு பொருள்களைக் குறிக்கின்ற பெயர்களும் வருமொழியாக வந்து புணருமிடத்து, நிலைமொழி இறுதியில் நின்ற 'கு' என்னும் உயிர் மெய்யும் அதன்

அயலில் நின்ற ககர மெய்யும் கெடுதலும், ஈற்றயலில் நின்ற றகரமெய் னகர மெய்யாகவும் வகரமெய்யாகவும் திரிதலும் ஆகும்.

ஏற்புழிக் கோடல் என்னும் உத்தியால் நிலையீற்று உயிர்மெய் கவ்வொற்று நீங்குதல் கிழக்கு, குணக்கு, குடக்கு, வடக்கு என்பவற்றுக்கும், றகரம் நகரமாகத் திரிதல் தெற்கு என்பதற்கும் றகரம் வகரமாகத் திரியும் மேற்கு என்பதற்கும் எனக் கொள்க.

(குணக்கு – கிழக்கு குடக்கு – மேற்கு)

பிற என்ற மிகையால் கிழக்கென்பது ழகரத்தின் அகரங்கெட்டு முன் நீண்டு வருதல் கொள்க.

(உ.ம்)

| | |
|---|---|
| வடக்கு +கிழக்கு =வடகிழக்கு<br>குடக்கு +திசை =குடதிசை<br>குணக்கு +நாடு =குணநாடு | உயிர்மெய்யும் ககரமெய்யும் கெட்டு வந்தன |
| தெற்கு +மேற்கு =தென்மேற்கு<br>தெற்கு +யாறு =தென்யாறு | உயிர்மெய்கெட றகரம் நகரமாயிற்று |
| மேற்கு +காற்று =மேல்காற்று<br>மேற்கு +ஊர் =மேலூர் | உயிர்மெய்கெட, றகரம் வகரமாயிற்று |
| கிழக்கு +காற்று =கீழ்க்காற்று<br>கிழக்கு +நாடு =கீழ்நாடு | உயிர்மெய்யும் ககரவொற்றும் அகரமும் கெட்டு முதல் நீண்டது |

இன்னும் 'பிற' என்றதனால் கீழைக்குளம், மேலைச்சேரி, மேலைக்குளம், மேலைச்சேரி என ஐகாரம் பெறுதலும், வடக்கூர் வடக்குமலை தெற்கூர், தெற்குமலை என மேற்காட்டிய விகாரமின்றியும் வருதலும், திசையொடு திசை புணருமிடத்து தெற்கு வடக்கு வடக்குத்தெற்கு, கிழக்கு மேற்கு, எனப் பொதுவிதி பெறுதலும் கொள்க.

வடதிசைக் காற்றுக்கு வழங்குகின்ற வாடை என்ற பெயரில் வடக்கு என்ற பகுதி முதல் நீண்டதும் இங்கேயே அமைக்கப்படும் கவ்வொற்று நீங்கலும் என்றதன் குறிப்பால் வருமொழி முதலில் மிகாமை பெறப்படும்.

### தெங்கு என்பதற்கு சிறப்புவிதி

**தெங்கு நீண் டீற்றுயிர் மெய்கெடுங் காய்வரின் (37)**

காய் என்னுஞ் சொல் வருமொழியாக வந்தால், தெங்கு என்னும் நிலைமொழி முதல் நீண்டு ஈற்றிலுள்ள ‘கு’ என்னும் உயிர்மெய் நீங்கும்.

(உம்) தெங்கு+காய் =தேங்காய் இது வேற்றுமைப்புணர்ச்சி

### எண்ணுப் பெயர்கட்குச் சிறப்புவிதி

**எண்ணிறை யளவும் பிறவும் மெய்தின்**
**ஒன்று முதலெட் டீறா மெண்ணுள்**
**முதலீ ரெண்முதல் நீளும் முன்றாறு**
**எழு குறுகுமர றேழல் லவற்றின்**
**ஈற்றுயிர் மெய்யு மேழனுயிரும்**
**ஏது மேற்புழி யென்மனார் புலவர் (38)**

எண்ணலளவுப்பெயரும், நிறுத்தலளவுப் பெயரும், மற்றை முகத்தலளவு நீட்டலளவுப் பெயர்களும், பிறபெயர்களும் வருமொழியாக வந்தால், நிலைமொழியாக நின்ற ஒன்றுமுதல் எட்டு ஈறாகிய எண்களுள், முதலிலுள்ள ஒன்று இரண்டு என்னும் இரண்டெண்களும் முதற்குறில் நீளும். மூன்றும் ஆறும் ஏழும் முதல் நெடில் குறுகும் ஆறும் ஏழும் அல்லா ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐந்து எட்டு என்னும் ஆறு எண்களையுடைய, இறுதியிலுள்ள உயிர்மெய்களும், ஏழு என்பதனுடைய இறுதியிலுள்ள உகர உயிரும் கெடும், ஏற்குமிடங்களில் என்பர் புலவர்.

இச்சூத்திரத்துக் கூறிய விகாரமும், இப்புணர்ச்சியை முற்ற முடித்தற்காக அடுத்த ஐந்து சூத்திரங்களிற் கூறும் விகாரங்களும் பெரும்பாலும் பண்புத்தொகைக்கே உரியனவா மென்பார் ‘ஏற்புழி’ என்றார். இன்னும் அதனால் ஏழு என்பது முதல் குறுகுமிடத்து முதல் குறுகா தென்றும் கொள்க.

(உம்)

| | | | | |
|---|---|---|---|---|
| | பத்து | = | அறுபது, எழுபது | |
| ஆறு | கழஞ்சு | = | அறுகழஞ்சு, ஏழுகழஞ்சு | ஆறும் |
| ஏழு | நாழி | = | அறுநாழி, எழுநாழி | ஏழும் முதல் |
| | நாண் | = | அறுசான் எழுசாண் | குறுகின |
| | வகை | = | அறுவகை, எழுவகை | |

ஏழு + கடல் = ஏழ்கடல் - ஏழன் ஈற்றுயிர் கெட்டது.

**ஒன்று இரண்டு என்பதற்குச் சிறப்புவிதி**

**ஒன்றன் புள்ளி ரகர மாக**
**இரண்ட னொற்றுபி ரேகவுவ் வருமே (39)**

ஈற்றுயிர்மெய் கெட்டு நின்ற ஒன்று என்னும் எண்ணினது னகர மெய்யானது ரகரமெய்யாக, ஈற்றுயிர்மெய் கெட்டு நின்ற இரண்டு என்னும் எண்ணினது 'ண' கரமெய்யும், ரகரமெய்யின் மேலுள்ள அகர உயிரும் கெட அவ்விரண்டு ரகரமெய்யின் மேலும் உகரம் வரும் ஏற்குமிடத்து.

ஏற்புழி என்றதனால் முதல் நீண்டவிடத்து உகரம் வாரா தென்றும் உகரம் வருமிடத்து முதல் நீளாதென்றுங் கொள்க.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்) ஒன்று | +ஆயிரம் | =ஓராயிரம் | ஒன்று முதல் நீண்டு ஈற்றுயிர் மெய் கெட்டு னகரம் ரகரமாயிற்று |
| | +கலம் | =ஓர்கலம் | |
| | +நாழி | =ஓர்நாழி | |
| | +யானை | =ஓர் யானை | |
| இரண்டு | +ஆயிரம் | =ஈராயிரம் | இரண்டு முதல் நீண்டு ஈற்றுயிர் மெய்யும் ணகர மெய்யும் அகரவுயிருங்கெட்டன. |
| | +கலம் | =ஈர்கலம் | |
| | +நாழி | =ஈர்நாழி | |
| | +யானை | =ஈர்யானை | |

| | | | |
|---|---|---|---|
| ஒன்று | ஆயிரம் | ஓராயிரம், ஈராயிரம் | முதல் நீளாமல் ரகர மெய்யின் மேல் உகரம் பெற்று வந்தன |
| இரண்டு | கழஞ்சு | ஒருகழஞ்சு | |
| | நாள் | ஒருநாள், இருநாள் | |
| | வழி | ஒருவழி, இருவழி | |

**மூன்று என்பதற்குச் சிறப்புவிதி**

**மூன்ற னுறுப்பழிவும் வந்ததுமாகும் (40)**

இறுதி உயிர்மெய் கெட்டுநின்ற மூன்று என்னும் எண்ணினது னகரமெய்யானது, கெடுதலும், வருமொழி முதலில் வந்த மெய்யாகத் திரிதலும் ஆகும். ஏற்குமிடத்து.

ஏற்புழி என்றதனால் - முதல்குறுகுதல் மெய்வருமிடத்து என்றும், அவ்விடத்து னகரமெய் வருமெய்யாக் திரியுமென்றும் னகரமெய் கெடுதல் உயிர் வருமிடத்து என்றும், அவ்விடத்து முதல் குறுகாது என்றுங் கொள்க.

(உம்)

| | | | |
|---|---|---|---|
| மூன்று ஆயிரம் | மூவாயிரம் | } | உயிர்வர முதல் குறுகாமல் ஈற்றுயிர் மெய்யும் னகர மெய்யுங் கெட்டன. |
| உலகு | மூவுலகு | | |
| மூன்று கலம் | முக்கலம் | } | மெய்வரா முதல் குறுகி ஈற்றுயிர்மெய் கெட்டு னகர மெய் வந்த மெய்யாகத் திரிந்தது. |
| நூறு | முந்நூறு | | |
| வட்டி | மூவ்வட்டி | | |

**நான்கு என்பதற்குச் சிறப்புவிதி**

**நாள்கள் மெய்யே லரவா கும்மே (41)**

இறுதிமெய் கெட்டு நின்ற நான்கு என்னும் எண்ணினது னகரமெய் லகரமெய்யாகவும், றகரமெய்யாகவும் திரியும். ஏற்குமிடத்து.

ஏற்புழி என்றதனால் னகரமெய் லகரமாகத் திரிவது உயிரும் இடையினமும் வருமிடத்து என்றும், றகரமாகத் திரிவது வல்லினம் வருமிடத்து என்றும், மெல்லினம் வருமிடத்து திரியாது என்றும் கொள்க.

(உம்)

| | | | |
|---|---|---|---|
| நான்கு +ஆயிரம் | =நாலாயிரம் | } | உயிரும் இடையினமும் வரஈறு கெட்டு னகரம் லகரமாயிற்று |
| +வகை | =நால்வகை | | |
| நான்கு +கவி | =நாற்கவி | } | வலிவர ஈறுகெட்டு னகரம் றகரமாயறிற்று |
| +பால் | =நாற்பால் | | |
| நான்கு +மணி | =நான்மணி | } | மெலிவர ஈறுகெட்டு னகரம் திரியாது நின்றது |
| +நாழி | =நாளாழி | | |

ஏற்புழி என்பதானல் மூவின மெய்களும் வருமிடத்து நாலுகுதிரை நாலுகாள், நாலுவழி என ஈறுகெட்டு னகரம் லகரமாய் உகரம் பெற்று வருதலும் கொள்க.

நால்மணி, நானாழி என்றவற்றில் நால் என்றும் பிரிக்கலாம்.

**ஐந்து என்பதன் சிறப்புவிதி**

**ஐந்தனொற் றடைவது மினமுங் கேடும் (42)**

இறுதி உயிர்மெய் கெட்டு நின்ற ஐந்து என்னும் எண்ணினது, நகரமெய்யானது, வருமொழி முதலில் வருகின்ற மெய்யாகத் திரிதலும் அதற்கு இனமாகத் திரிதலும் கெடுதலுமாம் ஏற்குமிடத்து.

ஏழ்புழி என்றதனால் நகரமெய் வருமெய்யாகத் திரிவது மெல்லினம் வருமிடத்து என்றும், இனமாகத் திரிவது வல்லினம் வருமிடத்து என்றும், கெடுவது உயிரும் இடையினமும் வருமிடத்து என்றும் கொள்க.

(உ.ம்)

ஐந்து +மூன்று=ஐம்மூன்று - நகரம் வருமெய்யாகத் திரிந்தது

ஐந்து +பால் =ஐம்பால் - வருமெய்யெழுத்து இனமாயிற்று

ஐந்து +ஆயிரம்=ஐந்தாயிரம்- நகரமெய் கெட்டது

'அடைவதும் இனமும்' என்றமையின் ஐந்நூறு, ஐந்தொழில் என நகர தகரங்கள் வருமிடத்து நகர மெய் இயல்பாய் நிற்கும்.

**எட்டு என்பதற்குச் சிறப்புவிதி**

**எட்ட னுடம்பு ணவ் வாகு மென்ப (43)**

இறுதி உயிர்மெய் கெட்டு நின்ற எட்டு என்னும் எண்ணினது டகரமெய்யானது, நாற்கணமும் வர ணகர மெய்யாகத் திரியும் என்று சொல்வர்.

(உ.ம்) எட்டு +ஆயிரம் =எண்ணாயிரம் எட்டு + நாழி=எண்ணாழி

+கழிச்சு =எண்கழஞ்சு வகை =எண்வகை

**தொண்ணூறு தொள்ளாயிரம்**

**ஒன்பா னொரு பத்து நூறு மொன்றின்**
**முன்னதி னேனைய முரணி யொவ்வொடு**
**தகர நிறீஇப் ப.்.தகற்றி னவ்வை**
**நிரலே ணளவாகத் திரிப்பது நெறியே (44)**

ஒன்ப.்.துடனே பத்து என்பதும் நூறு என்பதும் வருமொழியாக வந்து புணருமாயின் முன்னதாகிய நிலைமொழி தவிர மற்றை வருமொழிகளாகிய பத்தையும் நூற்றையும், முறையே நூறெனவும் ஆயிரமெனவும் திரித்து, நிலைமொழி முதலிலுள்ள ஒகர உயிரோடு, தகரமெய்யை அதற்கு ஆதாரமாக முன்னிறுத்தி அந்நிலைமொழி இறுதியிலுள்ள ப.்.தை கெடுத்து, அயலில்நின்ற னகர மெய்யை முறையே பத்தின்

திரிபாகிய நூற்றின் புணர்ச்சிக்கு ணகரமெய்யாகவும் நூற்றின் திரிபாகின் ஆயிரத்தின் புணர்ச்சிக்கு ணகரமெய்யாகவும் திரித்துக் கொள்வது முணகையாம்.

(உ ம்)

ஒன்பஃது +பத்து=1. ஒன்பஃது நூறு 2. தொன்பதுநூறு 3. தொன்நூறு

4. தொண்நூறு 5. தொண்ணூறு

ஒன்பஃது +நூறு=1. ஒன்பஃது ஆயிரம் 2. தொன்பது ஆயிரம் 3. தொன்ஆயிரம்

4. தொள்ஆயிரம் 5. தொள்ளாயிரம்

இரு தொளாயிரம் எனவும் வழங்கி வருகின்றது.

**ஒன்று முதலிய எட்டு எண்களின் முன் பத்து**

**முதலிரு நான்கா மெண்முன்ப் பத்தின்**
**இடையொற் றேக லாய்த மாகல்**
**எனவிரு விதிவு மேற்கு மென்ப (45)**

முதலிலுள்ளவையான எட்டு எண்களின் முன்னும் வருகிற பத்து என்னும் எண்ணிக்கை நடுவில் நின்ற தகரமெய்யானது கெடுதலும், ஆய்தமாகத் திரிதலும் என்று இவ்விரண்டு விதிகளையும் ஏற்கும் என்பர்.

முதலிரு நான்கம் எண் - ஒன்று முதல் எட்டு எண்களின் ஈறாள்

(உ ம்) ஒன்று, இரண்டு, மூன்று
நான்கு, ஐந்து, ஆறு, ஏழு
எட்டு
+பத்து
ஒருபது, ஒருபஃது, இருபது
இருபஃது, முப்பது, முப்பஃது, நாற்பது
ஐம்பது ஐம்பஃது, அறுபது, அறுபஃது,
எழுபது, எண்பது, எண்பஃது

**ஒருபஃது முதலியவற்றுக்குச் சிறப்புவிதி**

**ஒருபஃ நாதிமுன் னொன்றுமுத லொன்பான்**
**எண்ணு மவையூர் பிறவு மெய்தின்**
**ஆய்த மழியவாண் டாகுந் தவ்வே (46)**

ஒருபஃது முதலாகிய எட்டு எண்களின்முன், ஒன்று முதலாகிய ஒன்பது எண்களும், அவ்வெண்களை ஊர்ந்த மற்றவையும் வந்து புணருமாயின், நிலைமொழி யிடையிலே நின்ற ஆய்தமானது கெட இயல்பாகிய தகரம் அவ்வாய்தம் நின்ற இடத்து வரும்.

(உ.ம்) ஒருப.ஃ.து + ஒன்று = ஒருபத்தொன்று + எண்

இருப.ஃ.து + மூன்று கலம் =இருபத்து மூன்று கலம் -எண்ணெபிறது

**பத்து, ஒன்பது என்பவற்றின் முன் மற்றை எண்கள்**

**ஒன்றுமுத வீரைந் தாயிரங் கோடி**
**எண்ணிறை யளவும் பிறவரிற் பத்தின்**
**ஈற்றுயிர் மெய்கெடுத் தின்னு மிற்றும்**
**ஏற்ப தேற்கு மொன்பது மினைத்தே (47)**

ஒன்று முதலாகிய பத்து எண்களும், கோடியும் ஆகிய எண்ணுப்பெயரும், நிறைப்பெயரும், அளவுப்பெயரும் பிற பெயரும் வருமொழியாக வந்து புணருமாயின் நிலைமொழியாகிய பத்தினது, இறுதியிலுள்ள ‘து’ என்னும் உயிர்மெய்யைப் போக்கி இன்சாரியையாயினும், இற்றுச் சாரியையானும் அவ்விடத்திற்குப் பொருந்துவது ஒன்றை ஏற்றுநிற்கும். ஒன்பது என்னும் நிலைமொழியும் இத்தன்மையதேயாம்.

(உ.ம்)

பத்து +ஒன்று =பதினொன்று, பதிற்றொன்று

ஒன்பது +ஆயிரம் =ஒன்பதினாயிரம், ஒன்பதிற்றாயிரம்

பதினொன்று +உம்மைத்தொகை, பதிற்றொன்று பண்புத்தொகை, ஒன்பதினாயிரம், ஒன்பதிற்றாயிரம் இரண்டும் பண்புத்தொகை.

உம்மைத்தொகை + கூட்டலும்

பண்புத்தொகை + பெருக்கலும் ஆம்

ஏற்பதேற்கும் என்றதனால் பதினொன்று பதினாயிரம் என இன்சாரியை உம்மைத்தொகை பண்புத்தொகை இரண்டிலும் ஏற்படிவருதலும், இற்றுச்சாரியை பண்புத்தொகைக்கே வருதலும், ஒன்பதன் ஈற்றுயிர்மெய் கெடாமல் நிற்றலும், பத்துக்கோடி ஒன்பது கோடி எனப் பொதுவிதிப்படியே முடிதலுங்கொள்க.

**பத்து முன் இரண்டு: பன்னிரண்டு**

**இரண்டு முன்வரிற் பத்தினீற் றுயிர்மெய்**
**கரந்திட வெற்று னவ் வாகு மென்ப (48)**

இரண்டு என்பது வருமொழியாக முன்வருமாயின் பத்து என்னும் நிலைமொழியினது ஈற்றிலுள்ள ‘து’ என்னும் உயிர்மெய் கெட நடுநின்ற தகரமெய் னரகமெய்யாகத் திரியும் என்று சொல்வர்.

(உ.ம்)

பத்து +இரண்டு =பன்னிரண்டு இவ்வித உம்மைத் தொகைக்கே

பத்து +நான்கு =பன்னான்கு

பத்து +மூன்று =பதின்மூன்று

பத்துஒன்று பன்னொன்று எனச் சிறுபான்மை வருதலையும் இச்சூத்திரத்தில் அடக்கிக் கொள்க.

**ஒன்று முதலியன தன்முன் தான்வருதல்**

**ஒன்ப தொழித்தவெண் ணொன்பது மிரட்டின்**
**முன்னதின் முன்னிலை வோட வுயிர்வரின்**
**வவ்வு மெய்வரின் வந்தது மிகல்நெறி (49)**

ஒன்பது என்கின்ற எண் ஒன்றனையும் ஒழித்து நின்ற, ஒன்று முதல் பத்தீறாகி ஒன்பது எண்களும், இரட்டித்துத் தனக்கு முன் தான் வந்தால் நிலைமொழியினது முதலெழுத்தல்லாதவைகளெல்லாம் கெட முதலெழுத்து ஒன்று மாத்திரமே நிற்க வருமொழி மெய்ம்முதல்மொழியாயின் வந்த மெய்யும் மிகுதல் முறைமையாம்.

(உ.ம்)

ஒவ்வொன்று, இவ்விரண்டு, மும்மூன்று, நந்நான்கு, ஐவைந்து, அவ்வாறு எவ்வேழு, எவ்வெட்டு, பப்பத்து.

**ஊகாரவீற்றுச் சிறப்புவிதி**

**பூவின்முன் வல்லினம்**

**பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும் (50)**

பூ என்னும் பெயர்ச் சொல்லின் முன், வருகின்ற வல்லினம் பொதுவிதியால் மிகுதலேயல்லாமல் அவற்றிற்கு இனமாகிய மெல்லினமும் மிகும்.

(உ.ம்)

பூ+கொடி =பூங்கொடி, பூஞ்சோலை, பூந்தடம், பூம்பொழில் இவற்றுள் பூ என்பது மலராயின் பூவையுடைய கொடி என இரண்டாம் பூ என்பது மலராயின் பூவையுடைய கொடி என இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை அழகாயின் பூவாகிய கொடி என பண்புத்தொகையாம்.

**ஏகார ஓகார வீற்றுச் சிறப்புவிதி**

**இடைச்சொல் ஏ ஓ முன்வரி னியல்பே (51)**

இடைச்சொற்களாகிய ஏ ஓ என்பவற்றின் முன் வல்லினம் வந்தால் பொதுவிதியால் மிகாமல் இயல்பேயாகும்.

(உம்)

அவனே +கண்டான் =அவனே கண்டான் அவனோ கண்டான்

**ஐகார வீற்றுச் சிறப்புவிதி**

**ஐகாரத்தின் முன்மெய்**

**வேற்றுமை யாயினைகா னிறுமொழி**
**ஈற்றழி வோடு அம் மேற்பவு முளவே (52)**

ஐகார வீற்றுச் சொற்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் வருமாயின் ஈற்றுஐகாரங் கெடுதலுடன் அம் சாரியை பெற்று முடிவனவும் சிலவுள்ளன.

அழிவோடும் என்ற உம்மையால் அழியாமையோடு அம் ஏற்பவும் உள என்க, வருமெழுத்தைச் சொல்லாமல் நாற்கணத்தான் ஏற்பன கொள்க.

(உம்)

தாழை +பூ =தாழம்பூ
எலுமிச்சை +மரம் =எலுமிச்சை மரம்
ஆவிரை +வேர் =ஆவிரம்வேர்
} ஐ அழவொடு அம் ஏற்றன.

புன்னை +கானல் =புன்னையங்காயல்
முல்லை +தொடை =முல்லையந்தொடை
} ஐ அழியாமையோடு அம் ஏற்றன.

ஏற்பவுமுள என்றதனால் முல்லை +புறவு =முல்லைப்புறவு, கொல்லை சாரல் கொல்லைச்சாரல் எனப் பொதுவிதி பெற்று வருதலும் கொள்க.

**பனை என்பதற்குச் சிறப்புவிதி**

**பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரின்**
**ஐபோ யம்முந் திரள்ளி னுறழ்வும்**
**அட்டுறி னைகெட்டந நீள்வுமாம் வேற்றுமை (53)**

1. பனை என்னும் பெயரின் முன் கொடி என்னும் பெயர் வருமாயின் வந்த ககரம் மிகுதலும்.

2. கசதபக்கள் வருமாயின் நிலைமொழியீற்று ஐகாரங் கெட்டு அம்சாரியை பெறுதலும்.
3. திரள் என்னும் பெயர் வருமாயின் (வந்த தகரம் மிகுந்தும் ஐபோய் அம் சாரியை பெற்றும்) விகற்பித்தலும்.
4. அட்டு என்னும் பெயர் வருமாயின் நிலைமொழி யீற்று ஐகாரங்செ கெட்டு வருமொழி முதல் அகரம் ஆகாரமாதலும் ஆகும் வேற்றுமைப் புணர்ச்சியில்.

(உ_ம்)

1. பனை +கொடி =பனைக்கொடி - மிக்கது
2. பனை +காய் =பனங்காய் - ஐகெட்டு, அம் பெற்றது.
3. பனை +திரள் =பனைத்திரள் - உறழ்ந்தது
4. பனை +அட்டு =பனாட்டு - ஐ கெட்டு அ நீண்டது.

பாடம்-6

# 4. மெய்யீற்றுப் புணரியல்

மெய்யெழுத்துக்களை இறுதியிலுடைய நிலைமொழிகளோடு உயிர் முதல் மொழியும் மெய்ம்முதல் மொழியுமாகிய வருமொழிகள் புணரும் விதத்தைச் சொல்லும் இயல்.

**மெய்யீற்றின் முன் உயிர்**

**பொதுவிதி**

**உடல்மே லுயிர்வந் தோன்றுவ தியல்பே (1)**

நிலைமொழியின் இறுதியில் நின்ற மெய் எழுத்தின் மேல் வருமொழி முதலிலுள்ள உயிரெழுத்து வந்து கூடிநிற்பது இயல்பு புணர்ச்சியேயாம்.

(உ.ம்) புகழ் +அழகிது =புகழழகிது - அல்வழி

வேல் +எறிந்தான் =வேலெறிந்தான்- வேற்றுமை

**தனிக்குறில் முன் மெய்க்குச் சிறப்புவிதி**

**தனிக்குறில் முன்னொற் றுயிர்வரி னிரட்டும் (2)**

தனித்த குற்றெழுத்தை அடுத்து நின்ற மெய் வருமொழி முதலில் உயிர் வந்தால் இரட்டித்து நிற்கும்.

(உ.ம்) மண் +அழகிது =மண்ணழகிது - அல்வழி

பொன் +அணி =பொன்னணி - வேற்றுமை

**மெய்யீற்றின் முன் மெய்**

**யகரமொழிந்த மெய்களின்முன் யகரம்**

**தன்னொழி மெய்ம்முன் யவ்வரி னிகரம்**
**துன்னு மென்று துணிநரு முளரே (3)**

தன்னை (யகரத்தை) ஒழிந்த மொழிக்கு இறுதியில் வரும் ஞ ண ந மன ர ல வ ழ ள பத்து மெய்களின் முன்னும் வருமொழி முதலில் யகரம் வந்தால், இகரம் இடையில் வந்து சேரும் என்று அருமையாகக் கொள்பவரும் உண்டு.

(உ.ம்) வேள் +யாவன் =வேளியாவன் - அல்வழி

மண் +யாப்பு =மண்ணியாப்பு - வேற்றுமை

துணிதரும் என்ற உம்மையால் வேள்யாவன், மண்யாது எனப் பொதுவிதி பெறுமென்பார் பலருள ரென்க.

**சிலஈற்று முதனிலைத் தொழிற் பெயர்க்கும் ஏவற்கும் சிறப்புவிதி**

**ஞணநம லவளன வொற்றிறு தொழிற்பெயர்**
**ஏவல் வினை நனி யவ்வன் மெய்வரின்**
**உவ்வுறு மேவ லுரசில சில்வழி (4)**

ஞ ண ந ம ல வ ள ன என்கிற எட்டு மெய்களையும் இறுதியாக உடைய முதநிலைத் தொழிற்பெயர்களும் ஏவலொருமை வினைகளும் ஆகிய இவற்றின்முன், யகரத்தை ஒழிந்த (மொழிக்கு) முதலில் வரும் க ச த ப ஞ ந ம வ என்னு எட்டு மெய்களும் வருமொழி முதலில் வருமாயின் பெரும்பாலும் உகரச் சாரியை நிலைமொழி ஈற்றிற் பொருந்தும், சில ஏவல் வினைகள் சில இடங்களிலே அவ் உகரச் சாரியையைப் பொருந்தாவாம்.

இங்குத் தொழிற்பெயர், 'ஏவல்வினை' என்றது பகுதி மாத்திரமே நின்று அந்தந்தப் பொருளை உணர்த்துகிற முதனிலைத் தொழிற்பெயர்களையும், ஒருமை ஏவல்களையும்.

(உம்) 1.

| அல்வழி | | வேற்றுமை |
|---|---|---|
| உரிஞ் +கடிது =உரினுக்கடிது | + | கடுமை =உரினுக்கடுமை |
| உண் +சிறிது =உண்ணுச்சிறிது | + | சிறுமை =உண்ணுச்சிறுமை |
| பொருந் +தீது =பொருநுத்தீது | + | தீமை =பொருநுத்தீமை |
| திரும் +பெரிது =திருமுப்பெரிது | + | பெருமை =திருமுப்பெருமை |
| வெல்லு +ஞான்றது =வெல்லுஞான்றது | + | ஞாற்சி =வெல்லுஞாற்சி |
| வவ் +நீண்டது =வவ்வுநீண்டது | + | நீட்சி =வவ்வுநீட்சி |
| துள் +மாண்டது =துள்ளுமாண்டது | + | மாட்சி =துள்ளுமாட்சி |
| தின் +வலிது =தின்னுவலிது | + | வலிமை =தின்னுவலிமை |

என இருவழியிலும் முதனிலைத் தொழிற்பெயர்கள் உகரம் பெற்றன.

உரிஞ் +கொற்றா =உரிஞுக்கொற்றா

உண் +சாத்தா =உண்ணுசாத்தா

பொருந் +தேவா =பொருநுதேவா

திரும் +பூதா =திருமுபூதா

வெல் +ஞொள்ளா =வெல்லுஞொள்ளா

துள் +மனிதா =துள்ளுமனிதா

தின் +வளவா =தின்னுவளவா

என ஏவல் வினைகள் உகரம் பெற்றன.

2. உகரச் சாரியை பெற்றதும் பெறாமலும் வரும் ஏவல்வினைகள் ண ன ல ள என்னும் நான்கு ஈற்றனவுமாம்.

(உ.ம்)

உண்கொற்றா, தின்சாத்தா, வெல்பூதா, துள்வளவா என உகரம் பெறாமல் வந்தன. ஞ ந ம வ என்னும் நான்கு ஈறும் உகரம் பெற்றே வரும்.

சிறுபான்மை உண்ணு, தின்னு என வருமொழி நோக்காமல் உகரம் பெறுதலும், வாருசாத்தா, வாவேலவா எனப் பிறஈறுகள் உகரம் பெறுதலும் உள்ளன வென்பார் ‘நனி’ என்றார்.

**நகரவீற்றுத் தொழிற் பெயர்க்குச் சிறப்புவிதி**

**நவ்விறு தொழிற்பெயர்க் கல்வுமாம் வேற்றுமை (5)**

நகரத்தை இறுதியாக உடைய முதநிலைத் தொழிற்பெயர்க்கு வேற்றுமையில் உகரச் சாரியயேயன்றி அகரச்சாரியையும் பொருந்தும்.

(உ.ம்)

பொருந் +கடுமை =பொருநக்கடுமை
+நன்மை =பொருநநன்மை
+வன்மை =பொருநவன்மை
} வேற்றுமையில் அகரச் சாரியை பெற்றது

பொருநுதல் - ஒருவர் மற்றொருவர் போல வேடங்கொள்ளும்

பொரு - நரது தொழிலாதலால் ஒத்தலென்னும் பொருளது

பொரு - நர் - கூத்தர்

**ணகர நகர வீற்றின் இயல்பும் திரியும்**

**ணன வல்லினம் வரட் டறவும் பிளவரின்**
**இயல்பு மாகும் வேற்றுமைக்கு அல்வழிக்கு**
**அனைத்துமெய் வரினு மியல்பா கும்மே (6)**

ணகர னகரங்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் வரமுறையே டகரமாகவும் யகரமாகவும், மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பாகவும் ஆகும்.

(உ-ம்)

கண் +களிறு =கட்களிறு } வேற்றுமையில் ணன

பொன்தகடு =பொற்றகடு } வல்லினம்வரட் பிற ஆயின

மண் பொன் மாட்சி =மண்மாட்சி பொன்மாட்சி

+வன்மை =மண்வன்மை

மண் பொன் பெரிது =மண்பெரிது, பொன்பெரிது } அல்வழியில் பலவும்வர

+மாண்டது =மண்மாண்டது, பொன்மாண்டது } இயல்பாயின

யாது =மண்யாது பொன்யாது

**ணகர னகர வீற்றின் கேடு**

**குறிலணை வில்லா ணனக்கள் வந்த**
**நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே (7)**

தனிக் குற்றெழுத்தைச் சாராமல் ஒருமொழி தொடர்மொழிகளைச் சார்ந்துள்ள ணகர னகர மெய்களானவை, வருமொழிக்கு முதலாக வந்த நகரம் திரிந்தவிடத்து தாம் கெடுதலைப் பொருந்தும்

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| (உ-ம்) தூண் +நன்று =தூணன்று | +நன்மை =தூணன்மை |
| பசுமண் +நன்று =பசுமணன்று | +நன்மை =பசுமணன்மை |
| வலியன் +நன்று =வலியனன்று | +நன்மை =வலியனன்மை |
| கோள் +நல்லன் =கோனல்லன் | +நன்மை =கோனன்மை |

**சில ணகர வீற்றுப் பெயர்க்குச் சிறப்புவிதி**

**சாதி குழூஉப் பரண் கவண்பெய ரிறுதி**
**இயல்பாம் வேற்றுமைக் குணவென் சாண்பிற**
**டவ்வா கலுமா மல்வழி யும்மே (8)**

1. சாதிபற்றி வரும் பெயர்கட்கும், கூட்டம் பற்றி வரும் பெயர்கட்கும் பரண் கவன் என்னும் பெயர்கட்கும் ஈற்றிலுள்ள ணகரமானது, வேற்றுமைப் புணர்ச்சியிலும் வல்லினம் வந்தால் இயல்பாகும்.

2. உணவிற்குரிய (எள் என்னும் பெயரையுடைய) எண் என்னும் பெயர்க்கும், சாண் என்னும் (நீட்டலளவை) பெயர்க்கும் ஈற்று ணகரமானது அல்வழிப் புணர்ச்சியிலும், வல்லினம் வந்தால் டகரமாகத் திரிதலையும் பொருந்தும்.

(உ.ம்)

| | | |
|---|---|---|
| பாண் +தொழில் =பாண்டொழில் | - சாதிப்பெயர் | வேற்றுமையிலும் இயல்பாயினம் |
| அமண் +சோரி =அமண்சேரி | - குழுஉப்பெயர் | |
| பரண் +கால் =பரண்கால் | - பரண்பெயர் | |
| கவண் +கடுமை =கவண்கடுமை | - கவண்பெயர் | |
| எண் +பெரிது =எட்பெரிது | - எண்பெயர் | அல்வழியிலும் திரிந்தன |
| காண் +கோல் =காண்கோல் | - சாட்பெயர் | |

டவ்வாகலுமாம் என்ற உம்மையால், எண் கடிது எண்கடிது சாண்கோல் சாண்கோல் என இயல்பாதலே சிறப்பாமென்க.

பிற என்ற மிகையால் வேற்றுமையில் பாண்+குடி =பாணக்குடி. அமண் +சேரி= அமணச்சேரி எனச் சாதிக் குழுப்பெயர்கள் அகரச் சாரியை பெறுதலும் அட்டுண் +துழனி =அட்டுண்டுழனி, எனச் சிறுபான்மை பிற பெயரிலும் இயல்பாதலும் மண்+குடம் =மண்குடம் மட்குடம் என விகற்பித்து வருதலும் இருவழியில் இன்னும் ணகரமெய்யீற்றுள் அடங்காதவை உண்டாயின் அவையும் கொள்க.

**னகரவீற்றுச் சாதிப்பெயர்க்குச் சிறப்புவிதி**

**ன.ஃ.கான் கிளைப்பெய ரியல்பு ம.ஃ.கான்**
**அடைவு மாகும் வேற்றுமைப் பெருட்கே (9)**

னகரத்தை இறுதியிலுடைய சாதிப்பெயர், வல்லினம் வர ஈறு திரியாமல் இயல்பாதலும், அகரச்சாரியை பெறுதலும் வேற்றுமைப் புணர்ச்சியில் ஆகும்.

(உ.ம்)

எயின் +குடி =எயின்குடி, எயினக்குடி

+சேரி =எயின்குடி, எயினச்சேரி

பொருட்கே என்ற மிகையால் - எயின் மரபு எயினமரபு

எயின் +வாழ்வு =எயினவாழ்வு, எயின் +அணி =எயினஅணி என மற்றை கணங்கள் வரினும் அகரச்சாரியை பெறுதலும்.

எயின +பிள்ளை =எயினப்பிள்ளை, எயின் +மன்னன் =எயினமன்னன் என அல்வழியில் அகரச் சாரியை பெறுதலும் கொள்க.

**மீன் என்னும் மொழிக்குச் சிறப்புவிதி**

**மீன்றவ் வொடு பொரூஉம் வேற்றுமை வழியே (10)**

மீன் என்னும் பெயரின் இறுதியிலுள்ள னகரம் வேற்றுமைப்புணர்ச்சியில், வல்லெழுத்து வந்தால் றகரத்தொடு விகற்பித்து நிற்கும் னகரம் றகரமாக திரிந்தும் திரியாமலும் வரும்.

(உ.ம்)

| | |
|---|---|
| மீன் +கண் மீற்கண், மீன்கண் | விகற்பித்து வந்தது |
| +செவி மீற்செவி, மீன்செவி | |

**தேன் என்னும் மொழிக்குச் சிறப்புவிதி**

**தேன்மொழி மெய்வரி னியல்பு மென்மை**
**மேவி னிறுதி யழிவும் வலிவரின்**
**ஈறுபோய் வலிமெலி மிகலுமா மிருவழி (11)**

1. தேன் என்னும் சொல் மூன்றின் மெய்களும் முதலில் வந்தால், இறுதியிலுள்ள னகரமெய் இயல்பாதலும்.
2. மெல்லினம் வந்தால் அவ்விறுதி னகரமெய் இயல்பாதலேயன்றிக் கெடுதலும்.
3. வல்லினம் வந்தால் அவ்வீற்று நகரமெய் இயல்பாதலேயன்றிக் கெட, வந்த வல்லினமாவது அதற்கு இனமான மெல்லினமாவது மிகுதலும் ஆகும் வேற்றுமை அல்வழி இரண்டிலும்.

(உ.ம்)

| அல்வழி | வேற்றுமை | |
|---|---|---|
| 1. தேன் +கடிது =தேன்கடிது | +செம்மை =தேன்செம்மை | இயல்பு |
| +மாண்டது =தென் மாண்டது | +மாட்சி =தேன்மாட்சி | |
| +யாது =தேன் யாது | +யாப்பு =தேன் யாப்பு | |

| | |
|---|---|
| 2. தேன் +குழம்பு தேன் குழம்பு | +குடம் =தேன் குடம் - இயல்பு |
| =தேக்குழம்பு | =தேக்குடம் - வலிமிகலும் |
| =தேங்குழம்பு | =தேங்குடம் - மெலிமிகலும் |

**எகின் என்பதற்குச் சிறப்புவிதி**

**மரமல் லெகின்மொழி யியல்பும் அகரம்**
**மருவ வலிமெலி மிகலு மாகும் (12)**

1. மரத்தின் பெயரல்லாத (அன்னப்பறவையின் பெயராகிய) எகின் என்னுஞ் சொல், அல்வழியில் இயல்பாதலேயன்றி வேற்றுமைப் புணர்ச்சியிலும் வல்லினம்வர இறுதினகரம் இயல்பாதலும்.

2. இருவழியிலும், அகரச்சாரியை பொருந்த, வல்லெழுத்தாவது அதற்கு இனமான மெல்லெழுத்தாவது மிகுதலும் ஆகும்.

(உ_ம்)

| | |
|---|---|
| 1. எகின் +சிறை =எகின்சிறை<br>+தலை =எகின்றலை | வேற்றுமையில் வலிவர இயல்பாயிற்று. |
| 2. எகின் +புள் =எகினப்புள்<br>=எகினம்புள் | அல்வழியில் அகரம் வர வலிமெலி மிக்கன |
| 3. எகின் +கால் =எகினக்கால்<br>=எகினங்கால் | வேற்றுமையில் அகரம் வர வலி, மெலி மிக்கன. |

அகரம் வருவதற்கு வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமும் கொள்க.

(உ_ம்)

எகின் +மாட்சி =எகினமாட்சி, எகினவாழ்க்கை, எகினவழகு

**குயின் ஊன் என்னும் சொற்களுக்குச் சிறப்புவிதி**

**குயினுள் வேற்றுமைக் கண்ணு மியல்பே (13)**

குயின் என்னும் பெயரும், ஊன் என்னும் பெயரும் வேற்றுமைப் புணர்ச்சியிலும் இறுதினகரம் இயல்பேயாகும்.

(குயின்-மேகம், ஊன்-தசை)

(உ_ம்) குயின் +கடுமை =குயின்கடுமை ஊன் +தீமை =ஊன்றீமை

+சிறுமை =குயின்சிறுமை +பெருமை =ஊன்பெருமை

**மின் முதலிய நான்கிற்குச் சிறப்புவிதி**

**மின்பின் பன்கன் தொழிற்பெய ரனைய**
**கன்னவ் வேற்று மென்மையோ டுறழும் (14)**

1. மின் பின் பன் கன் என்னும் நான்கு சொற்களும், முதநிலைத் தொழிற்பெயர் போல யகரமல்லாத மெய்கள் வந்தால் உகரச்சாரியை பொருந்தும்.

2. இவற்றுள் கன் என்னுஞ் சொல், வல்லினம் வந்தால் உகரச் சாரியையே யன்றி அகரச் சாரியையும் பெற்று மெல்லெழுத்தோடு விகற்பிக்கும் (வருகிற வல்லெழுத்தாவது அதற்கு இனமான மெல்லெழுத்தாவது மிகப்பெறும்)

பன் =ஓர்புல், கன் =சிறுதராசுத்தட்டு

(உம்) 1. அல்வழி வேற்றுமை

| | அல்வழி | வேற்றுமை |
|---|---|---|
| மின், பின், பன், கன் | கடிது =மின்னுக்கடிது | கடுமை =மின்னுக்கடுமை |
| | நன்று =மின்னுநன்று | நன்மை =மின்னுநன்மை |
| | வலிது =மின்னுவலிது | வன்மை =மின்னுவன்மை |

என இருவழியிலும் தொழிற்பெயர் போல உகரம் பெற்றன.

2. கன் +தட்டு =கன்னத்தட்டு
=கன்னந்தட்டு
} அல்வழியில் அகரம்பெற்று உறழ்ந்தது

கன் +தூக்கு =கன்னத்தூக்கு
=கன்னத்தூக்கு
} வேற்றுமையில் அகரம் வெற்று உறழ்ந்தது

**தன், என், நின் என்பவற்றுக்குச் சிறப்புவிதி**

**தன்னென் னென்பவற் றீற்றுனவ் வன்மையோடு**
**உறழும் நின்னீ றியல்பா முறவே (15)**

1. தான், யான் என்பவற்றின் விகாரமாகிய தன் என என்னும் மொழிகளையுடைய இறுதியிலுள்ள னகரமெய்யானது, வல்லினம் வந்தால் தனக்கு இனவல்லெழுத்தாகிய றகரமாகத் திரிந்தும் திரியாது இயல்பாகியும் விகற்பிக்கும்.

2. நீ என்பதன் விகாரமாகிய நின் என்னும் மொழியின் இறுதியிலுள்ள னகரமெய்யானது வல்லினம் வந்தால் திரியாமல் இயல்பேயாகும்.

(உம்)

1. தன் +பகை =தன்பகை தற்பனை னகரம் உறழ்ந்தது

என் +பகை =என்பகை, எற்பகை

2. நின் +பகை =நின்பகை – னகரம் இயல்பாயிற்று.

உறவே என்ற மிகையால் உன் + பகை = உன்பகை என நீ என்பதன் திரிபாகிய உன் என்பதன் னகரம் வலிவர இயல்பாதலும் 'மான்குளம்பு' வான்சிறப்பு என வேற்றுமையில் சிறப்புவிதி சொல்லப்பெற்றவை இயல்பாதலும் வரின் +கொள்ளும் =வரிற்கொள்ளும் என அல்வழியில் செயின் என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம் பொதுச் சூத்திரத்தால் இயல்பாகாமல் திரிதலும் மின், பின் முதலியவை மின்கடிது, மின்கடுமை என இருவழியிலும் சாரியை பெறுதலும் திரிதலும் மின்றிவருதலும், இன்னும் னகரமெய்யீறற்றுள் அடங்காதவை இருப்பின் அவையுங்கொள்க.

**மகரவீறு**

**பொதுவிதி**

**மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்**
**வன்மைக் கினமாத் திரிபவு மாகும் (16)**

1. மகரத்தை இறுதியிலுடைய சொற்கள் (நாற்கணங்களும் வந்து புணரும்போது) இறுதியிலுள்ள மகரமெய் கெட்டு உயிரீற்றுச் சொற்கள் போலப் புணர்வனவும்.

2. வல்லினம் வந்தால் கெடாமல் அவற்றுக்கு இனமான மெல்லெழுத்தாகத் திரிவனவும் ஆகும்.

உயிரீறு ஒத்தவாவது – செயற்கையுயீரீறாய் நின்று இயற்கையுயிரீறு போல உயிர் வந்தால், உடம்படுமெய் பெருதலும், வல்லினம் வந்தால் மிகுதலும் மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பாகப் புணர்தலுமாம்.

(உம்)

| அல்வழி | வேற்றுமை | |
|---|---|---|
| 1. வட்டம் +ஆழி =வட்டவாழி | மரம் +அடி =மரவடி | இருவழியிலும் |
| +கல் =வட்டக்கல் | +கிளை =மரக்கிளை | மவ்வீறு கெட |
| +நேமி =வட்டநேமி | +நார் =மரநார் | உயிரீறு |
| +வாரி =வட்டவாரி | +வேர் =மரவேர் | ஒலித்தது |

2. மரம் +சிறிது =மரஞ்சிறிது, நம்+கை =நங்கை இனமாய்த் திரிந்தது.

'இனமாத்திரியும் என்றமையால்' மரம் +பெரிது =மரம் பெரிது, சிறியேம் +பண்பு =சிறியேம்பண்பு எனப் பகரம் வருமிடத்து மகரம் பகரத்துக்கும் இனமாதலின் திரியாது நிற்கும்.

**சிறப்பு விதி**

**வேற்றுமை மம்போய் வலிமெலி யுறழ்வும்**
**அல்வழி யுயிரிடை வரினியல் பும்முன. (17)**

1. வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் வந்தால் மகர ஈறுகெட்டு வல்லிமானது. அவற்றுக்கு இனமான மெல்லினமாய் மிகுதலும்.
2. அல்வழிப் புணர்ச்சியில் உயிரும் இடையினமும் வந்தால் கெடாது இயல்பாதலும் உள்ளனவாம்.

(உ.ம்) 1.குளம்+கரை=குளக்கரை
=குளங்கரை } வேற்றுமையில் மப்போய் வலிமெலி உறழ்ந்து.

2.குளம்+அழகிது=குளமழகிது
மரம் +வலிது =மரம் வலிது } அல்வழியில் உயிர் இடை வர இயல்பாயிற்று.

**நும் முதலிய நான்கிற்குச் சிறப்புவிதி**

**நும்தம்**
**எம்நம் மீறா மவ்வரு ஞநவே (18)**

நும் முதலிய நான்கு விகார மொழிகளுக்கும் இறுதியாகிய மகர மெய்யானது, வருமொழி முதலில் வருகிற ஞகர, நகரங்களாகத் திரியும்.

இவை நீர், தாம், யாம், நாம் என்பவற்றின் விகாரங்கள்.

(உ.ம்) நும் எம் நம் ஞாண் =நுஞ்ஞாண், தஞ்ஞாண், எஞ்ஞாண், நஞ்ஞாண்
நூல் =நுந்நூல், தந்நூல், எந்நூல், நந்நூல்

உம் +ஞாண் =உஞ்ஞாண், உம் +நூல் =உந்நூல் என நீர் என்பதன் திரிபாகிய உம் என்பதன் ஈற்று மகரமும் வரும் ஞநவாகத் திரிதலை உரையிற் கோடலால் கொள்க.

## அகம் என்பதற்குச் சிறப்புவிதி

**அகமுனர்ச் செவிகை வரி விடையன கெடும் (19)**

அகம் என்னும் உள்ளிடப் பெயரின் முன், செவி கை என்னும் சினைப்பெயர்கள் வந்தால், நிலைமொழி இறுதி மகரம் வன்மைக்கு இனமாகத் திரிதலே யன்றி அதன் நடுவில் நின்ற சகரமெய்யும் அதன் மேலேறிய அகர உயிரும் அழியும்.

(உ.ம்)

அகம் +செவி =அஞ்செவி

அகம் +கை =அங்கை

கெட்டேவரும் என்னாமையால் - அகஞ்செவி, அங்கை எனவும் வரும்.

**ஈம் கம், உரும் என்பவற்றிற்குச் சிறப்புவிதி**

**ஈமுங்**
**கம்மு முருமுந் தொழிற்பெயர் மானும்**
**முதலன வேற்றுமைக் கவ்வும் பெறுமே (20)**

1. ஈம் கம் உரும் என்னும் மூன்று சொற்களும் இருவழியிலும் முதநிலைத் தொழிற்பெயர் போல யகரமல்லாத மெய்கள் வந்தால் உகரச் சாரியை பெற்று முடியும்.

2. இவற்றுள் முதலில் நின்ற ஈமும் கம்மும் வேற்றுமைப்புணர்ச்சியில், உகரச் சாரியையேயன்றி அகரச் சாரியையும் பெறும்.

(ஈம்-நன்காடு, கம்-தொழில், உரும்-இடி)

(உ.ம்)

1. ஈம் கம் உரும் - கடிது நீண்டது

+வலிது =ஈமுக்கடிது கம்முக்கடிது, உருமுக்கடிது
=ஈமுநீண்டது, கம்முநீண்டது, உருமுநீண்டது } அல்வழி
=ஈமுவலிது, கம்முவலிது, உருமுவலிது

ஈம் கம் உரும் கடுமை + நீட்சி

+வன்மை =ஈமுக்கடுமை, கம்முக்கடுமை, உடுமுக்கடுமை
=ஈமுநீட்சி, கம்முநீட்சி, உடுமுநீட்சி } வேற்றுமை
=ஈமுவன்மை, கம்முவன்மை, உருமுவன்மை

என இருவழியிலும் உகரச்சாரியை பெற்றன.

2. ஈம் குடம் ஈமக்குடம் } முதலியன வேற்றுமையில்
கம் கடம் கம்மக்குடம் } அகரச் சாரியை பெற்றன.

**யகர ரகர ழகர வீறு**

**யரழ ஈற்றின்முன் வல்லினம்**

**யரழ முன்னர்க் கசதப அல்வழி**
**இயல்பு மிகலு மாகும் வேற்றுமை (21)**

1. யகர ரகர ழகர மெய்களின் முன் ககர, சகர, தகர, பகரங்கள் வந்தால் அல்வழியில் இயல்பாதலும் மிகுதலும்.

2. வேற்றுமையில் மிகுதலும், வல்லினமாவது மெல்லினமாவாய் மிகுந்து விகற்பித்தலும் விதியாகும்.

| | |
|---|---|
| 1. வேய் +கடிது =வேய்கடிது | மெய் +கீர்த்தி =மெய்க்கீர்த்தி |
| வேர் +சிறிது =வேர்சிறிது | கார் +பருவம் =கார்ப்பருவம் |
| வீழ் +தீது =வீழ்தீது | யாழ் +கருவி =யாழ்க்கருவி |

என அல்வழியில் இயல்பும் மிகலும் ஆயின.

2. நாய் +கால் =நாய்க்கால்
தேர் +தட்டு =தேர்த்தட்டு
ஊழ் +பயன் =ஊழ்ப்பயன்
} வேற்றுமையில் வலிமிக்கது

வேய் +குழல் =வேய்க்குழல் =வேய்ங்குழல்
ஆர் +கோடு =ஆர்க்கோடு =ஆர்ங்கோடு
குமிழ் +கோடு =குமிழ்க்கோடு =குமிழ்ங்கோடு
} வேற்றுமையில் இனத்தோடு உறழ்ந்தன

மேல் என்ற மிகையால் வாய்+புகுவது=வாய்புகுவது, என வேற்றுமையில் இயல்பாதலும், பாழ்+கிணறு=பாழ்க்கிணறு, பாழ்ங்கிணறு என அல்வழியில் இனத்தோடு உறழ்தலும் வேய்+யாது=வேயாது வேய்+யாப்பு=வேயாப்பு தனிக்குறிலைச் சாராத யகரவீறு யகரம்வர இருவழியிலுங்கெடுதலும் இன்னும் அடங்காதவைகளிருந்தால் அவையும் கொள்க.

**தமிழ் தாழ் என்பவற்றுக்குச் சிறப்புவிதி**

**தமிழவ் வறவும் பெறும் வேற் றுமைக்கே**
**தாழுங் கோல்வந் துறுமே லற்றே (22)**

1. தமிழ் என்னுஞ் சொல் வேற்றுமைப் புணர்ச்சியில் (நாற்கணமும் வந்தால்) அகரச் சாரியை பொருந்தவும் பெறும்.

2. தாழ் என்னுஞ் சொல்லும் கோல் என்னுஞ் சொல் வருமொழியாய் வந்து புணருமாயின் அவ்வாறேயாம் (அகரச்சாரியை பெறும்) தமிழுக்கு வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமும் கொள்க.

(உ_ம்)

1. தமிழ்+பிள்ளை =தமிழ்ப்பிள்ளை, தமிழ்நாகன், தமிழ்வளவன், தமிழவரசன் எனவும்,
2. தாழ் +கோல் =தாழக்கோல் எனவும் வரும்.

தமிழையுடைய பிள்ளை, தாழைத் திறக்குங்கோல் என விரிய்யு தாழக்கோல் =திறவுகோல், தாழாகிய கோல் என இருபெயரொட்டு பண்புத்தொகையாக கொண்டு இருவழியிலும் அகரச் சாரியைபெறும் எனினும் பொருந்தும்.

**கீழ் என்பதற்குச் சிறப்புவிதி**

**கீழின்முன் வன்மை விகற்பமு மாகும் (23)**

கீழ் என்னும் சொல்லின்முன் வருகிற வல்லினம் ஒருகால் இயல்பாகியும் ஒருகால் மிக்கும் வருகிற விகற்பத்தையும் பொருந்தும்.

(உ_ம்)

கீழ் +குலம் =கீழ்குலம் =கீழ்க்குலம் கீழ் +சாதி =கீழ்சாதி கீழ்ச்சாதி

**லகர ளகர ஈறு**

**லளவேற் றுமையில் றடவு மல்வழி**
**அவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி**
**மேவி னணவு மிடைவரி னியல்பும்**
**ஆகு மிருவழி யானு மென்ப (24)**

1. மொழி இறுதியிலுள்ள லகர ளகர மெய்கள் வல்லினம் வந்தால் வேற்றுமையில் றகர டகர மெய்களாகத் திரியும்.

2. அல்வழியில் அவற்றோடு அந்த றகர டகரங்களாகத் திரிந்தும் திரியாமலும் விகற்பித்தலும் ஆகும்.

3. வேற்றுமை அல்வழி இரண்டிலும் மெல்லினம் வந்தால் முறையே னகர ணகர மெய்களாகத் திரிதலும்.

4. இடையினம் வந்தால் இயல்பாகவும் ஆகும் என்பர்.

(உம்)

1. கால்+குறை=காற்குறை வேற்றுமையில் வலிவர றகரடகரங்களாகத் திரிந்தன
   முள் +குறை =முட்குறை
2. கால் +குறிது =கால்குறிது =காற்குறிது } அல்வழியில் வலிவர உறழ்ந்து
   முள் +குறிது =முடகுறிது =முட்குறிது } வந்தன.
3. அல்வேற் கல் +நெரிந்தது =கன்னெரிந்தது
   வால் +மாண்டது =வாண்மாண்டது
   கல் +மலை =கன்மலை
   வாள் +மாண்பு =வாண்மாண்பு
   } இருவழியிலும் மெல்லினம் வரனகர ணகரங்களாகத் திரிந்தன
4. அல்வேற் கால் +யாது =கால்யாது
   முள் +வலிது =முள்வலிது
   கல் +யானை =கல்யானை
   தோள் +வலிமை =தோள்வலிமை
   } இருவழியிலும் இடையினம் வர இயல்பாயின.

**சிறப்புவிதி**

**குறில்வழி லளத்தவ் வணையி னாய்தம்**
**ஆகவும் பெறூஉ மல்வழி யானே (25)**

தனிக்குறிலின் பின் நின்ற லகர ளகர மெய்கள் அல்வழிப்புணர்ச்சியில் தகரம் வருமொழி முதலில் வருமாயின், றகர டகர மெய்களாகத் திரிதலே யன்றி ஆய்தமாகத் திரிதலையும் பொருந்தும்.

(உம்)

கல் +தீது =க∴றீது, முற் +தீது =மு∴டீது இது ஆய்தக்குறுக்கம்

**லகர ளகர வீற்றின் கேடு முதலியன**

**குறில்செறி யாலள அல்வழி வந்த**
**தகரந் திரிந்தபிற் கேடுமீ ரிடத்தும்**
**வருநத் திரிந்தபின் மாய்வும் வலிவரின்**
**இயல்புந் திரிபு மாவன உளபிற (26)**

1. தனிக்குறிலைச் சாராத லகர ளகர மெய்கள் அல்வழிப் புணர்ச்சியில், வருமொழிக்கு முதலாக வந்த தகரம் றகர டகரங்களாகத் திரிந்து விடத்து தாம் கெடுதலும் 2. அல்வழி வேற்றுமை இரண்டிலும் வருமொழிக்கு முதலாய் வந்த நகரம் னகர ணகரங்களாகத் திரிந்த விடத்து தாம் கெடுதலும் 3. வருமொழி முதலில்

வல்லெழுத்து வந்தால் அல்வழிப் புணர்ச்சியில் விகற்பியாமல் இயல்பாதலும் திரிதலும், வேற்றுமைப் புணர்ச்சியில் திரியாமல் இயல்பாதலும் பொருந்துவன உண்டு.

(உ.ம்)

| | | |
|---|---|---|
| 1. தோன்றல் +தீயன் | =தோன்றறீயன் | அல்வழியில் வந்த தகரந்திரிய லள கெட்டன |
| வேள் +தீயன் | =வேடீயன் | |
| 2. தோன்றல் +நல்லன் | =தோன்றல்லன் | அல்வழியில் வந்த நகரந்திரிய லள கெட்டன வேற்றுமையில வந்த நகரந்திரிய லள கெட்டன |
| வேள் +நல்லன் | =வேணல்லன் | |
| தோன்றல் +நன்மை | =தோன்றன்மை | |
| வேள் +நன்மை | =வேணன்மை | |
| 3. கால் +கடிது | =கால்கடிது | அல்வழியில் வலிவர லள பொதுவிதிப்படி விகற்பியாமல் இல்பும் திரிபுமாயின. |
| மரங்கள் +கடிய | =மரங்கள் கடிய | |
| வேல் +படை | =வேற்படை | |
| வாள் +படை | =வாட்படை | |

பிற என்ற மிகையால் தோன்றறீமை வேடீமை எனக் குறில் செறியா லள வேற்றுமையிலும் தகரந்திரியுமிடத்துக் கெடுதலும், காற்றுனை தாட்டுணை என அல்வழியிலும் கெடாமையும், விற்படை எனக் குறில் செறிந்த லகரம் அல்வழியில் உறழாமல் திரிதலும் கொல்களிறு, கொள்பொருள் எனக் குறில் செறிந்த லகர ளகரங்கள் அல்வழியில் உறழாமல் இயல்பாதலும், அகல்+பரப்பு=அகல்பரப்பு, விழல்+காடு =விழன்காடு என இருவழிலும் லகரம் வல்லினம் வர னகரமாகத் திரிதலும் அமையும்.

**லகர னகரவீற்றுத் தொழிற்பெயர்க்குச் சிறப்புவிதி**

**லளவீறு தொழிற்பெய ரீரிடத்து முவ்வுறா**
**வலிவரி னல்வழி யியல்புமா வனவுள (27)**

1. லகர ளகரங்களை இறுதியாகவுடைய விகுதி பெற்ற தொழிற்பெயரும், ளகரத்தை இறுதியாக உடைய முதநிலை திரிந்த தொழிற் பெயரும் இருவழியிலும் யகரமல்லாத மெய்கள் வந்தால் உகரம் பெறுவாம். 2. வல்லினம் வந்தால் அல்வழியில் உறழாமல் இயல்பாகும் தொழிற்பெயர்களும் சில உண்டு.

(உ.ம்) 1. ஆடல் சிறந்தது, விக்குணன்று, கோள்வலிது – அல்வழி

ஆடனன்மை, விக்குள் வன்மை – வேற்றுமை

என இருவழியிலும் உகரச் சாரியை பெறாமல் முடிந்தன.

2. நடத்தல் கடிது - அல்வழியில் உறழாமல் இயல்பாயிற்று.

**வல் என்பதற்குச் சிறப்புவிதி**

**வல்லே தொழிற்பெய ரற்றிரு வழியும்**
**பலகை நாய் வரினும் வேற்றுமைக் கவ்வுமாம் (28)**

1. வல் என்னும் பெயர் இருவழியிலும், தொழிற்பெயர் போல் யகரமல்லாத மெய்கள் வந்தால் உகரச் சாரியை பெறும்.

2. பலகை நாய் என்னும் பெயர் வந்தாலும் வேற்றுமையில் உகரச் சாரியையேயல்லாமல் அகரச் சாரியையும் பெறும்.

(உ.ம்) அல்வழி வேற்றுமை

1. வல் +கடிது =வல்லுக்கடிது வல் +கடுமை =வல்லுக்கடுமை

+நன்று =வல்லு நன்று +நம்மை =வல்லு நன்மை

+வலிது =வல்லுவலிது +வலிமை =வல்லுவலிமை

என இருவழியிலும் யகரமல்லாத மெய்கள் வர உகரச் சாரியை பெற்றது.

2. வல் +பலகை =வல்லுப்பலகை வல் +புலி =வல்லுப்புலி

=வல்லப்பலகை =வல்லப்புரி

நாய் =வல்லுநாய் +குதிரை=வல்லுக்குதிரை

=வல்லநாய் =வல்லக்குதிரை

என வேற்றுமையில் பலகை நாய் பிறவும் வர உகரமும் அகரமும் பெற்றது.

**நெல் முதலிய நான்கிற்குச் சிறப்புவிதி**

**நெல்லுஞ் செல்லுங் கொல்லுஞ் சொல்லும்**
**அல்வழியாலும் றகர மாகும் (29)**

நெல், செல், கொல், சொல் என்னும் நான்கு சொற்களின் ஈற்று லகரமெய் அல்வழியிலும் றகரமெய்யாகத் திரியும் (செல்-மேகம், கொல்-கொல்லன் தொழில்)

(உ.ம்)

நெல் +கடிது =நெற்கடிது  கொல் +தீது =கொற்றீது

செல் +சிறிது =செற்சிறிது  சொல் +பெரிது =சொற்பெரிது

**இல் என்பதற்குச் சிறப்புவிதி**

**இல்லெ னின்மைச் சொற்கு ஐயடைய**
**வன்மை விகற்பமு மாகா ரத்தொடு**
**வன்மை யாகலு மியல்பு மாகும் (30)**

1. இல் என்கிற இன்மைப் பண்பை உணர்த்துகின்ற சொல்லுக்கு ஐகாரச் சாரியை பொருந்த அவ்விடத்து வருகிற வல்லினம் மிக்கும் மிகாமலும் விகற்பித்தலும் 2. ஆகாரச்சாரியை பொருந்த அவ்விடத்து வருகிற வல்லினம் மிகுதலும் 3. இவ்விரு விகுதியும் பெறாமல் இயல்பாதலும் பொருந்தும்.

(உ.ம்)

இல் +பொருள் =இல்லைப்பொருள் } ஐகாரச் சாரியை வர
=இல்லைபொருள் } வன்மை விகற்பித்தது

இல் +பொருள் =இல்லாப்பொருள் +ஆகாரச்சாரியை பெற வலிமிக்கது

இல் +பொருள் =இல்பொருள் = இருவிதியும் பெறாமல் இயல்பாயிற்று.

சாரியை வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமும் கொள்க.

| | | |
|---|---|---|
| ஞானம் =இல்லை ஞானம் | இல்லா ஞானம் | மற்றை முக்கணமும் |
| இல் +வன்மை =இல்லை வன்மை | இல்லா வன்மை | வரச்சாரியை பெற்றது |
| அணி =இல்லையணி | இல்லாவணி | |

இல் பொருள் என்பதுபோல் இல்லைபொருள், இல்லாப்பொருள் என்பனவும் இங்குப் பண்புத்தொகையே இவற்றுள் ஐகாரமும் ஆகாரமும் சாரியை.

**புள் வள் என்பவற்றிற்குச் சிறப்புவிதி**

**புள்ளும் வள்ளுந் தொழற் பெயரு மானும் (31)**

புள் வள் என்னும் இரண்டு சொற்களும் இருவழியிலும் பொது விதியால் முடிதலேயல்லாமலும், தொழிற்பெயர் போல யகரமல்லாத மெய்கள் வந்தால் உகரச் சாரியைப் பெற்றும் புணரும்.

(உ_ம்)

புள் +கடிது =புள்ளுக்கடிது, புள்ளுநன்று, புள்ளுவலிது
வள் +கடிது =வள்ளுக்கடிது, வள்ளுநன்று, வள்ளுவலிது } அல்வழி

புள் +கடுமை =புள்ளுக்கடுமை, புள்ளுநன்மை, புள்ளுவன்மை
வள் +கடுமை =வள்ளுக்கடுமை, வள்ளுநன்மை, வள்ளுவன்மை } வேற்றுமை

**வகர வீறு**

**வகரவீற்றுச் சுட்டுப்பெயர்களுக்குச் சிறப்புவிதி**

**சுட்டு வகரமூ வினமுற முறையே**
**ஆய்தமு மென்மையு மியல்பு மாகும் (32)**

அவ், இவ் உவ் என்னும் அஃறிணைப் பலவின்பால் சுட்டுப் பெயர்களின் இறுதியிலுள்ள வகரமெய், வல்லின மெல்லின இடையினங்கள் வர முறையாக ஆய்தமும், மெல்லினமும் இயல்பும் ஆகும்.

(உ_ம்)

1. அல் +கடிய =அஃகடிய – வலிவர ஆய்தமாயிற்று.
2. அவ் +ஞான்றன = அஞ்ஞான்றன – மெலிவர மெலியாயிற்று.
3. அவ் +யாவை = அவ்யாவை - இடைவர இயல்பாயிற்று.

இவ், உவ் என்பவற்றோடும் இவ்வறே கூட்டுக.

இச்சொற்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் அற்றுச்சாரியை பெறும் என மேல் எடுத்துக்கூறதலால் இவ்விதி அல்வழிக்கெனக் கொள்க.

**தெவ் என்பதற்கு சிறப்பு விதி**

**தெவ்வென் மொழியே தொழிற்பெய ரற்றே**
**மவ்வரின் வஃகன் மவ்வு மாகும் (33)**

1. தெவ் என்னும் பெயர் தொழிற்பெயர் போல யகரமல்லாத மெய்களோடு புணருமிடத்து உகரச் சாரியை பெற்று முடியும். 2. வருமொழி முதலில் மகரம் வந்தால் - நிலைமொழி யீற்று வகரமெய் உகரச் சாரியை பெருதலேயன்றி ஒரேவிடத்துச் சாரியை பெறாமல் மகர மெய்யாகத் திரியவும் பெறும்.

தெவ் +பகைமை =தெவ்வுப்பகைமை

(உ.ம்)

1. அல்வழி வேற்றுமை

| | | | |
|---|---|---|---|
| தெவ் +கடிது =தெவ்வுக்கடிது | +கடுமை – தெவ்வுக்கடுமை | | |
| +நன்று =தெவ்வுநன்று | நன்மை – தெவ்வுநன்மை | } | உகரம் |
| +வலிது =தெவ்வுவலிது | வலிமை - தெவ்வுவலிமை | | பெற்றது |

2. தெவ +மன்னர் =தெம்மன்னர் - அல்வழி } மகரம் வர வகரம்

தெவ +முனை =தெம்முனை - வேற்றுமை } மகரமாகத் திரிந்தது

**வருமொழித் திரிபு**

**வருமொழி முதலில் தகர நகரந் திரிதல்**

**ன ல முன் நனவும் ணளமுன் டணவும்**
**ஆகுந் தநக்க ளாயுங் காலே (34)**

னகர லகர மெய்களின் முன் வருகிற தகர நகரங்கள் முறையே றகர நகரங்களாகவும், ணகர ளகர மெய்களின் முன் தகர நகரங்கள் முறையே டகர ணகரங்களாகவும் ஆகும்.

னகர லகரங்களின் முன் வருகிற தகரம் றகரமாகவும் னகர லகரங்களின் முன் வருகிற தகரம் னகரமாகவும் னகர ளகரங்களின் முன் வருகிற நகரம் ணகரமாகவும் திரியும் என்றவாறு.

(உ.ம்)

| | | | |
|---|---|---|---|
| பொன் +தீது | =பொன்றீது | - அல்வழி | னகரத்தின் முன் |
| +தீமை | =பொற்றீமை | - வேற்றுமை | தகரம் றகர மாயிற்று |
| பொன் +நன்று | =பொன்னன்று | - அல்வழி | னகரத்தின்முன் |
| +நன்மை | =பொன்னன்மை | - வேற்றுமை | தரகம் னகரமாயிற்று |
| கல் +தீது | =கற்றீது | - அல்வழி | லகரத்திற்குமுன் நகரம் |
| +தீமை | =கற்றீமை | - வேற்றுமை | னகரமாயிற்று. |
| கல் +நன்று | =கன்னன்று | - அல்வழி | லகரத்திற்குமுன் நகரம் |
| +நன்மை | =கன்னன்மை | - வேற்றுமை | னகரமாயிற்று |

| | | | |
|---|---|---|---|
| மண் +தீது | =மண்டீது - அல்வழி | ணகரத்திற்குமுன் தகரம் | |
| +தீமை | =மட்டீமை - வேற்றுமை | டகரமாயிற்று | |
| மண் +நன்று | =மண்ணன்று - அல்வழி | ணகரத்திற்குமுன் நகரம் | |
| +நன்மை | =மண்ணன்மை- வேற்றுமை | ணகரமாயிற்று | |
| முள் +தீது | =முட்டீது - அல்வழி | ளகரத்திற்குமுன் தகரம் | |
| +தீமை | =முட்டீமை - வேற்றுமை | டகரமாயிற்று | |
| முள் +நன்று | =முண்ணன்று - அல்வழி | ளகரத்திற்குமுன் தகரம் | |
| +நன்மை | =முண்ணன்மை- வேற்றுமை | டகரமாயிற்று | |

**வேற்றுமைப் புணர்ச்சிக்குச் சிறப்புவிதி**

**உருபுபுணர்ச்சி முடிபைப் பொருட்புணர்ச்சிக்கும் ஏற்றுதல்**

**உருபின் முடிபவை யொக்குமப் பொருளினுள் (35)**

மேல் உருபுபுணரியலின் உருபுபுணர்ச்சியின் முடியும் முடிபுகள் அவ்வுருபுகள் தொக்கு நின்று அப்பொருள் தோன்றப் புணரும் பதப் புணர்ச்சியிலும் ஒத்து முடியும்

(உம்)

1. எல்லாவற்றதும் - உருபுபுணர்ச்சி

எல்லாவற்றுக்கோடும் - வேற்றுமைப் பொருட்புணர்ச்சி

உருபுபுணர்ச்சியாவது வேற்றுமையுருபு வெளிப்பட்டு நிற்கப் புணரும் புணர்ச்சி மரத்திற்கிளை என்பது போல வேற்றுமைப் பொருட்புணர்ச்சியானது - வேற்றுமையுருபு தொக்கு நிற்க அவ்வுருபின் பொருளமையப் புணரும் புணர்ச்சி மரக்கிளை என்பது போல.

2. எல்லா நமதும் - உருபுபுணர்ச்சி

எல்லா நங்கையும் - வேற்றுமைப் பொருட்புணர்ச்சி

உருபுபுணர்ச்சியில் உயர்திணையில் நம்மும் உருபின்மேல் உம்மும் பெறுதல்போல, உருபு தொக்க பதப்புணர்ச்சியிலும் பெற்றவை.

எல்லார் தமதும், எல்லா தங்கையும் எல்லீர் நமதும் எல்லீர் நுங்கையும், தனது, தன்கை, ஆனது, ஆன்கோடு என உருபு புணர்ச்சிபோலப் பதப்புணர்ச்சியும் முடிந்தவாறு காண்க. இவற்றில் முன்னது உருபுபுணர்ச்சி அல்லது பதப்புணர்ச்சி.

**புணரியல்களுக்குப் புறநடை**

**இயைபுரி வடசொலி னியம்பிய கொளாதவும**
**போலியு மரூஉவும் பொருந்திய வாற்றிற்கு**
**இயையப் புணர்த்தல் யாவர்க்கு நெறியே (36)**

1. இடைச்சொற்களுள்ளும் 2. உரிச்சொற்களுள்ளும் 3. வடச்சொற்களுள்ளும். உயரீற்று மெய்யீற்றுப் புணரியல்களிலே தோன்றல் திரிதல் கெடுதல் இயல்பாதல் எனச் சொல்லப் புணர்ச்சி இலக்கணங்கள், பொருந்தாமல் வேறுபட்டு வருவனவும் 4. இலக்கணப் போலி மொழிகளும் 5. மரூஉமொழிகளும் உலக வழக்குச்செய்யுள் வழக்குகளில் நடக்கும் முறைமைக்கும் பொருந்தும் படி கூட்டி முடித்தல் முறைமையாம்.

(உம்)

| | |
|---|---|
| 1. ஆன் +கன்று =ஆன்கன்ற<br>வண்டின் +கால்=வண்டின் கால் | வேற்றுமையில் சாரியை இடைச் சொற்களின் ஈற்று னகரம் இயல்பாயிற்று. |
| 2. மழ +களிறு =மழகளிறு<br>தட +தோள் =தடந்தோள் | உரிச்சொல்லீற்று உயிர்முன் வலிவர மெலி மிகுந்தும் வந்தன |
| 3. அளி +குலம் =அளிகுலம்<br>காத +கமலம் =காதகமலம் | வடசொல்லீற்று உயிர்முன் வலி வர மிகாது இயல்பாயின |
| 4. இல் +முன் =முன்றில்<br>பொது +இல் =பொதியில்<br>வேட்கை +அவா =வேணவா | இலக்கணப்போலி மொழிகள் முன்விதி தமக்கு ஏற்றபடி விகாரம் பெற்றன |
| 5. அருமருந்தன்ன =அருமந்த<br>குணக்குஉள்ளது =குணது<br>சோழநாடு =சோணாடு<br>தஞ்சாவூர் =தஞ்சை<br>வடுகன் தந்தை =வடு கந்தை | மரூஉ மொழிகள் முன்வதி பெறாமல் தமக்கு ஏற்றபடி விகாரம் பெற்றன. |

இங்கே இடையுரி வடசொல் என்றது நிலைமொழிகளைப் பற்றியதென அறிக. இதனால் நிலைமொழி மாத்திரம் வடமொழியிலிருந்து வருமொழிப் புணர்ச்சியில் முன்சொன்ன விதிகட்கு மாறி வருவனவும் இதில் அடங்கும்.

**வடமொழிப் புணர்ச்சி**

வடமொழித் தொடர்கள் தமிழில் வருமிடத்துப் பெரும்பாலும் அவ்வடநூற் புணர்ச்சியையே பெறும், புணர்ச்சியை வடநூலார் 'சந்தி' என்பர். அது உயிரோடு உயிர் புணர்கையில் தீர்க்கசந்தி குணசந்தி, விருத்திசந்தி என மூவகைப்படும்.

**தீர்க்க சந்தி**

1. அகர, ஆகாரங்களில் ஒன்றன்முன் அவற்றிலொன்று வந்தால் அவ்விரண்டுங்கெட ஓர் ஆகாரம் தோன்றும்.

(உம்)

பத +அம்புஜம் =பதாம்புஜம் கங்கா +அம்ருதம் =கங்காம்மருதம்

பரம +ஆனந்தம் =பரமானந்தம் சதா +ஆனந்தம் =சாதனந்தம்

2. இகர ஈகாரங்களில் ஒன்றன்முன், அவற்றிலொன்று வந்தால் அவ்விரண்டுங்கெட ஓர் ஈகாரம் தோன்றும்.

(உம்)

கவி +இந்திரன் =கவீந்திரன் மகீ +இந்திரன் =மகிந்திரன்

கிரி +ஈசன் =கிரீசன் நதீ +ஈசன் =நதீசன்

3. உகர ஊகாரங்களில் ஒன்றன்முன் அவற்றிலொன்று வந்தால் அவ்விரண்டுங்கெட ஓர் ஊகாரம் தோன்றும்.

(உம்)

குரு +உதயம் =குருதயம் சுயம்பூ +உபதேசம் =சுயம்பூபதேசம்

சிந்து +ஊர்மி =சிந்துர்மி சுயம்பூ +ஊர்ச்சிதம் =சுயம்பூர்ச்சிதம்

**குணசந்தி**

1. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் இகர ஈகாரங்களில் ஒன்று வந்தால் அவ்விரண்டுங்கெட ஓர் ஏகாரம் தோன்றும்.

(உம்)

தேவ +இந்திரன் =தேவேந்திரன் தரா +இந்திரன் =தாரேந்திரன்

தேவ +ஈசன் =தேவேசன் ரமா +ஈசன் =ரமேசன்

2. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் உகர ஊகாரங்களில் ஒன்று வந்தால் அவ்விரண்டுங்கெட ஓர் ஓகாரந்தோறும்.

(உ.ம்)

சூர்ய +உதயம் =சூர்யோதயம் கங்கா +உற்பத்தி =கங்கோத்பத்தி

ஞான +ஊர்ச்சிதன் =ஞானோர்ச்சிதன் தயா +ஊர்ச்சிதன் =தயோர்ச்சிதன்

**விருத்திசாந்தி**

1. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் ஏகார ஐகாரங்களில் ஒன்று வந்தால் அவ்விரண்டுங்கெட ஓர் ஐகாரந் தோன்றும்.

(உ.ம்)

பரம +ஏகாந்தி =பரமைகாந்தி தேவதா +ஏகத்வம் =தேவதைகத்வம்

சர்வ +ஐச்வர்யம =சர்வைச்வர்யம் தேவதா +ஐக்யம் =தேவதைக்யம்

அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் ஒகார ஔகாரங்களில் ஒன்று வந்தால் அவ்விரண்டுங்கெட ஓர் ஔகாரந்தோன்றும்.

(உ.ம்)

வந +ஒஷதி =வநௌஷதி மகா +ஒஷதி =மகௌஷதி

திவ்ய +ஔஷதம் =திவ்யௌஷதம் மகா +ஔதார்யம் = மகௌதார்யம்

மெய்ம் முதலீற்று மொழிப்புணர்ச்சிக்கு விதி அளவிறந்தனவாம்.

பாடம்-7

# 5. உருபு புணரியல்

உயிரீறும் மெய்யீறுமான வேற்றுமையுருபுகள் நிலைமொழி வருமொழிகளோடு புணரும் விதத்தைச் சொல்லும் இயல் உயிரீறு மெய்யீறு என்றவற்றுள் அடங்குவனவற்றையே தனியே எடுத்துக்கூறுதலால் இவ்வியல் அவ்விரண்டு இயல்களின்பின் வைக்கப்பட்டது.

## உருபுகள்

**எட்டு உருபுகளும் சாரும் இடவகையால் இத்தனை என்பது**

**ஒருவ னொருத்தி பல ரென்று பல வென**
**வருபெய ரைந்தொடு பெயர்முத லிருநான்கு**
**உருபு முறழ்தர நாற்பதா மருபே (1)**

ஒருவனும் (ஆண்பாலும்), ஒருத்தியும் (பெண்பாலும்), பலரும் (பலர்பாலும்), ஒன்றும் (ஒன்றன்பாலும்), பலவும் (பலவின்பாலும்) என்று வருகின்ற ஐந்துபாற் பெயர்களோடும், பெயர்வேற்றுமை (எழுவாய்) முதல் விளிவேற்றுமை வரையில் நின்ற எட்டு வேற்றுமை உருபுகளையும் பெருக்கிக் கணக்கிட வேற்றுமை உருபுகள் நாற்பதாகும்.

நம்பி, நம்பியை, நம்பியால், நம்பிக்கு, நம்பியின், நம்பியது, நம்பிகள், நம்பியே என ஒருவன் என்னும் வாய்ப்பாட்டு உயர்திணை ஆண்பாற்பெயரொடு எட்டு உருபுகளும் வந்தன கூனி, மக்கள், மரம், மரங்கள் என்னும் மற்றை நான்கு வாய்ப்பாட்டுப் பெயர்களோடும் இப்படியே கூட்டுக.

**வேற்றுமையுருபுகளின் பயனும் அவை வரும் இடமும்**

**பெயர்வழித் தம்பொருள் தரவரு முருபே (2)**

வேற்றுமை உருபுகள் தமது பொருளைக் கொடுக்க பெயர்க்குப்பின் வரும்

தம்பொருள் - கருத்தாப்பொருள், செயப்படுபொருள் முதலியன.

(உ.ம்)

நம்பி பெற்றான், நம்பியைப் பெற்றான் என இவ்வாறு காண்க.

## உருபு புணர்ச்சிக்குச் சிறப்புவிதி

**பொருட்புணர்ச்சி முடிபை உருபுபுணர்ச்சிக்கும் ஏற்றுதல்**

**ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியின்**
**ஒக்குமன் னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே (3)**

மெய்யையும், உயிரையும் முதலும் இறுதியுமாக உடைய ஐ முதலிய ஆறு வேற்றுமை உருபுகள் (இடைச்சொல்லிலும்) நிலைமொழி வருமொழிகளோடு புணருமிடத்து, வேற்றுமைப் பொருட்புணர்ச்சியில் இயல்பாகவும் விகாரமாகவும் புணர்ந்த மெய்யுயிர் முதலீற்றுப் பெயர்களைப் பெரும்பாலும் ஒத்தும் நடக்கும்.

(உம்)

நம்பி+கண்=வாழ்வு நம்பிகண் வாழ்வு - இங்கே முறையே 'ஆவியரமுன் வன்மை மிகா' என்றும் 'ணனவல்லினம் வரட்டறவும் பிறவரின் இயல்புமாகும் வேற்றுமைக்கு' என்றும் சொல்லியபடியே கண்ணுருபின் முதலும் ஈறும் இயல்பாயின.

உறி+கண்=பால் உறிக்கட்பால் - இங்கே முறையெ 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க ச த ப மிகும்' என்றும், ணனவல்லினம் வரட்டறவும் என்றுஞ் சொல்லியபடி கண்ணுருபின் முதலும் ஈறும் விகாரமாயின.

பெரும்பாலும் ஒக்கும் என்றமையால் சிறுபான்மை ஒவ்வாதென்பதாம்.

(உம்)

நம்பி+கு=நம்பிக்கு - இங்கே 'ஆவியரமுன் வன்மை மிகா' என்ற விதி ஒவ்வாமல் குவ்வுருபின் முதல் வல்லொற்று மிக்கது.

## சாரியை

### சாரியை வரும் விதம்

**பதமுன் விகுதியும் பதமூ முருபும்**
**புணர்வழி யொன்றும் பலவுஞ் சாரியை**
**வருதலும் தவிர்தலும் விகற்பமாகும் (4)**

பதத்தின்முன் விகுதியானது, பதமானது, உருபாவது புணருமிடத்து (அவற்றுக்கு இடையே) ஒரு சாரியையாயினும், பல சாரியைகளாயினும் 1. வருதலும் 2 வராதிருத்தலும், ஒன்றுக்கே வருதலும் தவிர்தலும் ஆகிய உறழ்ச்சியும் ஆகும்.

(உம்)

| விகுதிப்புணர்ச்சி | பதப்புணர்ச்சி | உருபுபுணர்ச்சி |
|---|---|---|
| 1. நடந்தனன் | புளியங்காய் | அவற்றை - வருதல் |
| 2. நடந்தாள் | புளிக்கறி | தன்னை - தவிர்தல் |
| 3. நடந்தன | நெல்லின்குப்பை | ஆனை - விகற்பம் |
| நடந்த | நெற்குப்பை | ஆவை - விகற்பம் |

மாடத்துக்கு – மாடக்கு, நிலத்துக்கு – நிலக்கு முதலியன சாரியை வேண்டுமிடத்து இல்லாமையால் தொகுத்தலென்றும் விகாரமாம்.

**பொதுச்சாரியை**

**அன் ஆன் இன் அல் அற்று இற்று அத்து அம்**
**தம் நம் நும் ஏ அ உ ஐ கு ன**
**இன்ன பிறவும் பொதுச்சா ரியையே (5)**

அன் முதன் னகரமெய் ஈறாகச் சொல்லப்பட்ட பதினேழும் இவை போல்வன பிறவும் (விகுதி பதம் உருபு என்கிற மூன்று புணர்ச்சிகளிலும் தனிமொழிகளிலும் வருதலினாலே) பொதுவான சாரியைகளாம்.

(உம்) சாரியை

| | |
|---|---|
| அன் - ஒன்றன் கூட்டம் | (ப) சாரியை |
| ஆன் - ஒருபாற்கு | (உ) நம் - எல்லார் நம்மையும் (உ) |
| இன் - வண்டின்கால் | (ப) நம் - உல்லீர் நம்மையும் (உ) |
| அல் - தொடையல் | (த) ஏ – ஒன்றேகால் (ப) |

| | |
|---|---|
| அற்று - பலவற்றை | (உ) அ –நடந்தது (வி) |
| இற்று - பதிற்றுப்பத்து | (ப)) உ – சாத்தனுக்கு (உ) |
| அத்து - மாத்திவை | (ப) ஐ – ஒற்றை (த) |
| அம் - நெஞ்சம் | (த) கு – செய்குவாய் (வி) |
| தம் - எல்லாம்தம்மையும் | (உ) ன் - கோன் (த) |

இன்ன பிறவும் என்றதனால்

தன் - அவன்றனை (உ) தாம் - அவர்தாம் (த)

தான் - அவன்றான் (த) ஆம் - மண்ணாங்கட்டி (ப)

ஆ - இல்லாப்பொருள் (ப)

து – நடந்தற்கு (வி)

என வருபவற்றைக் கொள்க.

**எல்லாம் என்பதற்குச் சிறப்புவிதி**

**எல்லா மென்ப திழிதனை யாயின்**
**அற்றோ டுருபின் மேலும் உறுமே**
**அன்றேல் நம்மிடை றடைந்தற் யாகும் (6)**

**எல்லாம் என்னும் இருதிணைப் பொதுப்பெயர்**

அஃறிணையில் வரும்பொழுது (அதனொடு ஆறு உருபுகளும் புணர்ந்தால்) இடையிலே அற்று என்னுஞ் சாரியையும், உருபின் மேல் முற்றும்மையையும் பெறும் 2. அன்றாயின் (உயர்திணையில் வரும்பொழுது) இடையிலே நம் என்னுஞ் சாரியையைப் பெற்று அவ்வாறாகும். (உருபின் மேல் முற்றும்மையையும் பெறும்)

(உ.ம்)

1. எல்லாம் - ஐ – எல்லாவற்றையும் - அஃறிணை
2. எல்லாம் - ஐ – எல்லாநம்மையும் - உயர்திணை

எல்லா நம்மையும் என்பதற்கு எல்லாரையும் என்று பொருள். படர்க்கை

**‘எல்லாரும்’ ‘எல்லீரும்’ என்பவற்றிற்குச் சிறப்புவிதி**

**எல்லாரு மெல்லீரு மென்பவற் றும்மை**
**தள்ளி நிரலே தம்நும் சாரப்**
**புல்லு முருபின் பின்ன ரும்மே (7)**

ஆறு உருபுகளும் புணருமிடத்து எல்லாரும் எல்லீரும் என்கிற இரு பெயர்களினுடைய இறுதியிலுள்ள முற்றும்மைகளை நீக்கி முறையே தம் என்னும் சாரியையும், நும் என்னும் சாரியையும் அவை இருந்த இடங்களிலே பொருந்த, அவற்றினாலே நீக்கப்பட்ட முற்றும்மைகள் உருபுகளின் பின்னே வந்து பொருந்தும்.

(உ.ம்)

எல்லாரும் + ஐ =எல்லார்தம்மையும்

எல்லீரும் + ஐ =எல்லீர்நும்மையும்

எல்லாரையும் எல்லீரையும் எனச் சாரியை பெறாமல் வருதலும் உண்டு.

**தான் முதலிய பெயர்கட்குச் சிறப்புவிதி**

**தான் தாம் நாம் முதல் குறுகும் யான் யாம்**
**நீ நீர் என் எம் நின் நு மாம்பிற்**
**குவ்வி னவ்வரு நான்கா றிரட்டல. (8)**

1. உருபுகள் புணருமிடத்து தான் தாம் நாம் என்னும் மூன்று பெயர்களும் முதல்நெடில் குறுகி முறையே தன் தம் நம் என வரும்.

2. யான் யாம் நீ நீர் இந்நான்கு பெயர்களும் முறையே என் எம், நின் நும் என வரும்.

3. இவ்வேழு பெயரொடும் குவ்வுருபு புணருமிடத்து நடுவில் அகரச் சாரியை வரும்.

4. நான்காம் வேற்றுமை உருபு புணரும்போது அகரச் சாரியை உயிர்வந்தாலும், ஆறாம் வேற்றுமையுருபுகளின் முதல் உயிர்கள் வந்தாலும் அவ்வேழு விகார மொழிகளிலும் இறுதியாகிய தனிக்குறில் முன் ஒற்றுக்கல் இரட்டாவாம்.

1. தான் +ஐ =தன்னை முதல் குறுகின யான் +ஐ =என்னை என் எம் நின்

தாம் +ஐ =தம்மை யாம் +ஐ=எம்மை நும் எனத் திரிந்தன

நாம் +ஐ =நம்மை நீ +ஐ =நின்னை

நீர் +ஐ =நும்மை

மற்றை உருபுகளோடு ங் கூட்டுக.

2. தான் + கு =தனக்கு – குவர அகரச்சாரியைப் பெற்றது.

3. தன –அ – கு =தனக்கு
- அது =தனது
- ஆது =தனாது
- அது =தன

நான்காம் வேற்றுமையில் அகரச் சாரியை பெறுமிடத்தும் ஆறாம் வேற்றுமைஉருபு உயிர்கள் புணருமிடத்தும் தனிக்குறில் முன்னொற்று இரட்டாதாயிற்று

பிற என்றதனால் நீ என்பது உன் எனவும், நீர் என்பது உம் எனவும் திரிந்து வரும்.

**ஆ, மா, கோ என்னும் சொற்களுக்குச் சிறப்புவிதி**

**ஆமா கோ னவ் வணையவும் பெறுமே (9)**

ஆ என்னும் பசுவின் பெயரும், மா என்னும் மிருகத்தின் பொதுப்பெயரும், கோ என்னும் தலைவனது பெயரும் உருபுகள் புணருமிடத்து னகரச் சாரியை பொருந்தவும் பெறும்.

‘அனையவும்’ என்ற உம்மையால் அணையாமலிருக்கவும் பெறும் என்றதாயிற்று, ஆகவே விகற்பித்து வருமெனக்கொள்க.

(உம்)

ஆ +ஐ =ஆனை, ஆவை

மா +ஐ =மானை, மாவை னகரச் சாரியை பெற்றும் பெறாதும் விகற்பித்தன

கோ +ஐ =கோனை கோவை

**ஒருபது முதலிய எண்ணுப் பெயர்கட்குச் சிறப்புவிதி**

**என்று முதலெட் டீறா மெண்ணூர்**
**பத்தின்முன் னான்வரிற் பல்வெரற் றொழியமேல்**
**எல்லா மோடு மொன்பது மிற்றே (10)**

ஒன்று முதல் எட்டு வரையிலுள்ள எண்ணுப்பெயர்களோடு புணர்ந்த பத்து என்னும் எண்ணுப்பெயரின் முன் உருபுகள் புணருமிடத்து ஆன் சாரியை வந்தால் பத்து என்னும் எண்ணினது பகரமெய் ஒன்றுமே நிற்க அதன்மேலே நின்ற எல்லா எழுத்துக்களும் கெடும் ஒன்பது என்னும் எண்ணின் முன்னும் உருபுகள் புணருமிடத்து ஆன் சாரியை வந்தால் இவ்வாறே யாகும். பகர மெய் மாத்திரமே நிற்க மேலே நின்ற எல்லாவெழுத்துங் கெடும்.

ஒருபது, ஒருப∴து என இடையொற்றுக் கெட்டும் ஆய்தமாகத் திரிந்தும் விகாரப்பட்டு வரும் பத்து என்பார் எண்ணூர் பத்து எனப் பொதுப்படக் கூறினார். அவை ஒருபது ஒருப∴து இருபது இருப∴து, முப்பது முப்ப∴து, நாற்பது நாற்ப∴து ஐம்பது ஐம்ப∴து அறுபது அறுப∴து எழுபது எழுப∴து, எண்பது எண்ப∴து என்பன.

ஆன் வரின் என்றதனால் ஆன் சாரியை வருதற்கும் இதுவே விதி என்க.

(உம்)

ஒருபது +ஐ =ஒரு பானை ⎫ ஒன்பதை ஒன்ப∴தை

ஒன்பது +ஐ =ஒரு பானை ⎭ ஒன்பதை, ஒன்ப∴தை விகற்பித்து வந்தன

**வகர ஈற்றுச் சுட்டுப் பெயர்கட்குச் சிறப்புவிதி**

**வ்விறு சுட்டிற் கற்றுறதல் வழியே (11)**

அ∴றிணைப் பலவின் பாலகிய அவ் இவ் உவ் என்னும் வகர மெய்யீற்று மூன்று கூட்டுப் பெயர்கட்கும் உருபுகள் புணருமிடத்து அற்று என்னுஞ் சாரியை பொருந்துதல் முறைமையாம்.

(உம்)

அவ் +ஐ =அவற்றை என அற்றுச்சாரியை வேண்டியே வந்தன.

வேற்றுமை

இவ் +ஐ =இவற்றை

உவ் +ஐ =உவற்றை

வழியே என்றமையால் அவற்றினை, இவற்றினை, உவற்றினை என அற்றுச் சாரியையோடு இன்சாரியை வருதலும், தனிக்குறில் முன் ஒற்று உயிர்வர இரட்டாமையும், அவை இவை உவை என்னும் வையீற்றுச் சுட்டுப்பெயர்கள் அவையிற்றை, இவையிற்றை, உவையிற்றை என இற்றுச்சாரியை பெறுதலும், எவற்றை என வினாப்பெயரும் இவ்வாறு நிற்றலும் கொள்க.

**அஃது முதலிய சுட்டுப் பெயர்கட்குச் சிறப்புவிதி**

**சுட்டின் முன் னாய்த மன்வரிற் கெடுமே (12)**

அஃது, இஃது, உஃது என்னும் மூன்று சுட்டுப் பெயர்களில் மொழிமுதற் சுட்டெழுத்தின் முன்னின்ற ஆய்தம், அச்சுட்டுப்பெயர்களுடன் உருபுகள் புணருமிடத்து அன் சாரியை வந்தால் கெடும்.

(உம்)

அஃது+ஐ=அதனை,அஃதை } எனச் சாரியை விகற்பித்தும் சாரியை வந்தவிடத்து

இஃது+ஐ =இதனை,இஃதை } ஆய்தம் கெட்டும் வந்தன.

உஃது+ஐ =உதனை,உஃதை

**அத்துச்சாரியை முதல் கெடுதல்**

**அத்தின் அகரம் அகரமுனை யில்லை (13)**

அத்துச் சாரியையின் முதலிலுள்ள அகரவுயிரானது, இயல்பினாலும் விதியினாலும் நிலைமொழி யீற்றில் நின்ற அகரவுயிரின் முன் வந்தால் கெடும்.

உயிரீற்று மொழியின் முன் அத்துச் சாரியை வருவதற்கும் இதுவே விதி.

(உம்) மக +அத்து =மகத்தை, மகத்துக்கை இயல்பு உயிரீறு

மர +அத்து =மரத்தை, மரத்துக்குறைய – விதி உயிரீறு

அகரமுனையில்லை என்றதனால் - போழ்தத்து வள்ளன்மை அவையத்துச் சென்றார் எனப் பிற உயிரீற்றின்முன் அத்தின் அகரம் கெடாதென்க.

**புறநடை**

**சாரியைக்கும் புறநடை: சாரியைகளை அறியும் -வகை**

**இதற்கிது சாரியை யெனினை வின்மையின்**
**விகுதியும் பதமு முருபும் பகுத்திடை**
**நின்ற வெழுத்தும் பதமும் மியற்கையும்**
**ஒன்ற உணர்த்த லுரவோர் நெறியே (14)**

விகுதிப்புணர்ச்சி முதலிய புணர்ச்சிகளின் இதற்கு சாரியை என்று வரையறுத்து தனித்தனிச் சொல்லாய் புகின் ஓர் அளவு இல்லாமையால் விகுதிப்புணர்ச்சியும், பதப்புணர்ச்சியும் உருபுபுணர்ச்சியும் பிரித்து நடுவில் நின்ற எகரம் அகரம் முதலிய எழுத்துச் சாரியையும், அன் ஆன் ஆகிய பதச்சாரியையும் இல்லாத இயல்பையும் தெரிய அறிவித்தல் அறிவுடையோரது முறைமையாம்.

எழுத்துச்சாரியை பதச் சாரியை இயல்பு.

(உம்)

நடந்தது நடந்தனன் நடந்தான் - விகுதிப்புணர்ச்சி

ஆனநெய் வண்டின்கால் தன்கை – பதப்புணர்ச்சி

சாத்தனுக்கு எவற்றை என்னால் - உருபுபுணர்ச்சி

இவ்வாறே மூவகைப் புணர்ச்சிகளையும் பகுத்தல் முறை எல்லாச்சாரியைகளும், இடைச்சொல்லாயினும், இவ்வாறு எழுத்துச்சாரியை பதச்சாரியை எனப் பிரித்து அவற்றுள் வேறுபாடு அறிதற்கு வைத்தகுறி என அறிக.

**நால்வகைப் புணர்ச்சிக்கும் புறநடை**

**விகுதி பதஞ்சா ரியையுரு பனைத்திலும்**
**உரைத்த விதியினோர்ந் தொப்பன கொளலே (15)**

விகுதிப்புணர்ச்சியும், பதப்புணர்ச்சியும், சாரியைப் புணர்ச்சியும் உருபுபுணர்ச்சியும் ஆகிய நான்கு புணர்ச்சிகளிடத்தும் பொதுப்படச் சொல்லப்பட்ட விதிகளுள் (இவ்விதி இதற்குப் பொருந்தும் இவ்விதி இதற்குப் பொருந்தாது என்று) ஆராய்ந்து அறிந்து எவ்விதி எதற்குப் பொருந்துமோ அவ்விதியை அதற்குக் கொள்க.

விகுதிப்புணர்ச்சியுள் - 'றவ்வொடுகர வும்மை நிகழ்பல்லவும்' எனப் பொதுப்பட விதித்தாராயினும் சென்று என்ற இடத்து இறந்தகாலமும் சேறு என்ற இடத்து எதிர்காலமும் பொருந்துமென்று கொள்க.

பதப்புணர்ச்சியுள் - 'அல்வழி இ ஐ ம் முன்னராயின் இயல்பும் மிகலும் விகற்பமு மாகும்' எனப் பொதுப்பட விதித்தாராயினும், யானை குதிரைகள் என

உம்மைத்தொகையில் இயல்பாயும், ஆடித்திங்கள் எனப் பண்புத்தொகையில் மிகுந்தும், கிளிகுறிது கிளிக்குறிது எனச் சில எழுவாய்த் தொடரில் விகற்பித்தும் வருமென்று கொள்க.

சாரியைப் புணர்ச்சியுள் - 'பதமுன் விகுதியும் பதமு முருபும் புணர்வழி யொன்றும் பலவுஞ் சாரியை, வருதலுந் தவிர்தலும் விகற்பமாகும்' எனப் பொதுப்பட விதித்தாராயினும், நாட்டின் கண் இருந்தான் எனக் கண்ணுருபிற்கு இன் சாரியை வருமென்று நாட்டினீங்கினான் என இன்னுருற்கு இன் சாரியை பெரும்பாலும் வராதென்றுங் கொள்க.

உருபுபுணர்ச்சியுள் - 'ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியின், ஒக்குமன்னப் பெயர் வேற்றுமைப் புணர்ப்பே' எனப் பொதுப்பட விதித்தாராயினும் 'நம்பின்கண்' எனக் கண்ணுருபு மிகா தென்றும், 'நம்பிக்கு' எனக் குவ்வுருபு மிகு மென்றுங் கொள்க.

**இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிக்கு சிறப்புவிதி**

**இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும்**
**உயர்திணை யிடத்து விரிந்தும் தொக்கும்**
**விரவுப் பெயரின் விரிந்து நின்றும்**
**அன்ன பிறவு மாகு மையுருபே (16)**

இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி பொது விதிப்படி முடிதலேயன்றி அப்படி விதித்த இயல்பிலே விகாரமாகியும் விகாரத்திலே இயல்பாகியும் உயர்திணைப் பெயரிடத்து உருபு வெளிப்பட்டும், உருபு மறைந்தும், பொதுப்பெயரிடத்து உருபு வெளிப்பட்டும், உருபு மறைந்தும், அவை போல்வன பிற வேறுபாடுகளும் ஆகிவரும்.

(உம்)

நின்+புறங்காப்ப =நிற்புறங்காப்ப – நின்னீறியல்பாம் என இயல்பாக வேண்டுமிடத்து இயல்பாயிற்று

மண் சுமந்தான், பொன் கொடுத்தான் - 'ண ன வல்லினம் வரட்டறவும்' என விகாரமாக வேண்டுமிடத்து இயல்பாயிற்று.

நம்பியைக் கொணர்ந்தான் - உயர்திணையிடத்து விரிந்தது. மகன்+பெற்றான் =மகன்பெற்றான் - உயர்திணையிடத்து தொக்கது கொற்றனைக் கொணர்ந்தான். பொது, பெயரிடத்து விரிந்தது. ஆண் பெற்றான் -பொதுப்பெயரிடத்துத் தொக்கது. அன்னபிறவும் என்றதனால் தற்கொண்டான் என விகற்பிக்க வேண்டுமிடத்துத் திரிந்தே வருதலும் பிறவுங் கொள்க.

(தன் +கொண்டான்)

எண்ணுப் பொருளில் வந்த இறந்தது தழுவிய இழிவு சிறப்பும்மைகளால், வேற்றுமைக்கு என்று விதித்த பொது விதியோடு ஒத்து 'வரகு தந்தான்' என இயல்பில் இயல்பாகியும் 'சுக்குத்தின்றான்' என விகாரத்தில் விகாரமாகியும் வருதலே பெரும்பான்மையென்க.

**மூன்றாம் வேற்றுமை புணர்ச்சிக்குச் சிறப்புவிதி**

**புள்ளியு முயிரு மாயிறு சொல்முன்**
**தம்மி னாகிய தொழில்மொழி வரினே**
**வல்லினம் விகற்பமு மியல்பு மாகும் (17)**

மூன்றாம் வேற்றுமைத்தொகையில், மெய்யும் உயிரும் இறுதியாகிய நின்ற சொற்களின் முன், கருத்தாவாகிய நிலைமொழிப் பொருள்களாலாகிற வினைச்சொற்கள் (செயப்பாட்டு வினைச்சொற்கள் வருமொழியாகி வந்தால், அவ்விடத்து வரும் வல்லினம் பொதுவிதிப்படி முடிதலேயன்றி உழற்ச்சியும் இயல்பும் ஆகும்.

(உ.ம்)

பேய்கோட்பட்டான், பேய்க்கோட்பட்டான்

புலிகோட்பட்டான், புலிக்கோட்பட்டான் விகற்பம்

பேய் பிடிக்கப்பட்டான், புலிகடிக்கப்பட்டான் இயல்பு

உம்மையால் அராத்தீண்டப்பட்டான், சுறாப்பாயப்பட்டான் எனப் பொதுவிதியால் முடிவனவே பெரும்பாலனவாம்.

**எழுத்ததிகாரத்திற்கு புறநடை**

**இதற்கிது முடிபென் றெஞ்சாதி யாவும்**
**விதிப்பன வின்மையின் விதித்தவற் றியலான்**
**வகுத்துரை யாதவும் வகுத்தனர் கொளலே (18)**

இதுக்கு இதுதான் முடிந்த இலக்கணமென்று இவ்வதிகாரத்துள் விதிக்கத்தக்கவற்றை எல்லாம், குறையாமல் தனித்தனி அளவு செய்து விதிக்கப்புகுந்தால் அதற்கு ஒரு வரம்பு இல்லாமையால் வகுத்து விதித்தவற்றினுடைய இலக்கணங்களை ஏதுவாகக் கொண்டு வகுத்து விதி சொல்லாதவற்றையும் அநுமானப் பிரமாணத்தால் வகுத்து விதியுரைத்துக் கொள்க.

(உ.ம்)

எழுத்தியலுள், மொழிமுதற் காரணமாம் அணுத்திரளொலி எழுத்து என ஒலி வடிவெழுத்தை உரைத்ததனால் ஒலிவடிவைக் காட்டுவதற்கு ஓர் கருவியாக எழுதப்பட்டது வரிவடிவெழுத்து எனக் கொள்க.

பதவியலுள், அன் ஆன் அள் ஆள் என்னுஞ் சூத்திரம் முறையே அன் ஆன் விகுதி ஆண்பாற்கென, விதித்ததனால் 'பெருமாள்' என்னும் பதம் பெருமையுடையானென்றும் பொருள் தோன்ற நின்ற பெருமாள் என்கிற பதத்தினது ஆள் விகுதி ஆள் விகுதியாக ஒரேவிடத்துத் திரிந்து ஆண்பாலையே உணர்த்தி நின்றதெனக் கொள்க.

உயிரீற்றுப் புணரியலுள், இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப 'மிகும்' என உரைத்ததனால் 'ண ன வல்லினம் வரட்டறவும்' என்ற இடத்து டகரமும் வல்லினமாதலின் மிக்கதெனக் கொள்க.

மெய்யீற்றுப் புணரியலுள், 'நும்தம் எம்நம் மீறாமல்வருஞநவே' என உரைத்ததனால், ஆம் உன்னுஞ் சொல்லிறுதி மகரமும் தனிக்குறிலெடுத்த ஒற்றாதலின் தன்னொடு மயங்காத மெல்லினம் வந்தால் அதுவாய்த் திரிந்து அந்நகை என அழகிய நகை என்னும் பொருளதாய் வருமெனக் கொள்க.

உருபுபுணரியலுள், இரண்டாம் வேற்றுமைக்கும் மூன்றாம் வேற்றுமைக்கும் புறநடை உரைத்ததனால், ஏழாம் வேற்றுமையும், மண் சேர்ந்து, விண்புகுந்து என வேற்றுமைப் பொதுவிதியை ஏலாமற் சிறுபான்மை வருமெனக் கொள்க.

**Prepared by**
**Dr. J. JEBAMALAR WINCES MANIMALA**
Associate Professor of Tamil
Sarah Tucker College, Tirunelveli – 627 007.